லூத்தர் பொன்மொழிகள்

ஜே. வின்சென்ட்

லூத்தர் பொன்மொழிகள்

அருள்திரு. ஜே. வின்செண்ட்

மெர்வின் பதிப்பகம்
118, தர்மாபுரம் நெடுஞ்சாலை,
தி. நகர், சென்னை-600 017.

முதற் பதிப்பு : நவம்பர், 1995.

© ஆசிரியருக்கு

விலை ரூ. 22-00

அச்சிட்டோர் :

ஸ்ரீ துர்க்கை பிரிண்டிங் பிரஸ்
21, மதுரை வீரன் கோயில் தெரு,
தி. நகர், சென்னை - 600 017
☎ 434 68 49.

என் உரை

'இயேசு'!...லுத்தர் எழுதிய ஒவ்வொரு புத்தகத்திலும் இப்படித்தான் எழுதித் துவங்கினார். ஆகவே ''லுத்தர் பொன்மொழிகள்'' என்ற இப்புத்தகத்தையும் 'இயேசு' என்று எழுதித் துவங்குகிறேன்!

'நான் எவ்வளவு பெரிய சோம்பேறி' என்று தன்னைப் பற்றி ஆச்சரியத்துடன் சொல்கிறார் மார்டீன் லுத்தர்.

'30,000 கடிதங்கள் - ஒவ்வொன்றும் பல பக்கங்கள் அடங்கிய கையேடுகள் - எழுதியது, முழுவேதாகமத்தையும், தனது தாய் பாஷையான ஜெர்மனி மொழியில் மொழிபெயர்த்தது, அனேக பாடல்களை எழுதி - அவற்றிற்கெல்லாம் இசை அமைத்தது...இன்னும்; அவருடைய எழுத்துக்கள். எதிர்வாதங்கள், பிரசங்கங்கள் போன்றவை 100 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன! ஒவ்வொரு தொகுதியும் சுமார் 700 பக்கங்கள்!'...

'மாற்றத்தை உருவாக்கிய ஐம்பதுபேர்' என்ற புத்தகத்தில், லுத்தரைப் பற்றி இப்படி எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் ஒரு 'ரீடர்ஸ் டைஜஸ்ட் வெளியீடு.

இவை அனைத்தும் அச்சுக்கலை வளராத காலத்தில் 1500 ஆம் ஆண்டுக்குப் பின்பு நடந்தது.

என்னிடம் வொர்க்ஸ் ஆஃப் மார்டீன் லூத்தர் என்ற ஆங்கிலப் புத்தகத் தொகுதிகள் 7 இருக்கின்றன. ஒவ்வொன்றும் சுமார் 400 பக்கங்கள்.

இவற்றைப் படித்து, கண்டுபிடித்து, பொன்மொழிகளை எடுத்தது; கடலுக்குள் முத்து எடுத்த கதைதான். இன்னும் 'முத்துக் குளிப்பு' தொடருகிறது.

என்னை விசவாசத்தில்; பெற்று எடுத்து, வளர்த்து, ஆளாக்கி, ஒரு எழுத்தாளன் ஆக்கியது எனது சபை! எனது சபையாகிய 'இந்திய சுவிசேஷ லூத்தரன் சபை'க்கு இது பொன்விழா காணுகின்ற ஆண்டு பொன்விழா ஆண்டில் இந்த புத்தகத்தை எழுதி வெளியிடுகின்ற பாக்கியத்தைக கொடுத்த என் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கையெழுத்துப் பிரதியை படித்து பிழைதிருத்தி, அவ்வப்போது உதவி செய்த எனது அன்பு மனைவி **ஆலீஸ் மனோரஞ்சிதம் B.A.** அவர்களுக்கு நன்றி கூறித்தான் ஆக வேண்டும்.

வான்மலர் நிலைய இயக்குநர், டாக்டர் சுவி அவர்கள்; எனது எழுத்துப் பணியை பாராட்டி உற்சாகம் அளிப்பவர்கள். லூத்தரின் பொன்மொழிப் புத்தகங்கள் வெளியிடுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிற என்னை ஆச்சரியத்துடன் பார்த்து, பாராட்டி, உற்சாகப்படுத்தினார்! டாக்டர் சுவி அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றி!

புத்தகத்தை வெளியிட்ட **மெர்வின்,** ஒரு சாதனையாளர்! எழுத்துப் பணியில், சுய முன்னேற்ற நூல்கள் எழுதுவதில் இவர் ஓர் எழுத்து அதிபர்! இவர் 'லூத்தர் பொன்மொழிகள்' புத்தகத்தை வெளியிட முன் வந்தது எனக்குப்,பெரும் பேறு!

எனது நண்பராக இருக்கிற மெர்வின், எனது புத்தகத்தின் 'வெளியீட்டாளரும்' ஆகிற நிகழ்ச்சி இப்புத்தகத்தில் துவங்குகின்றது!

இது, தொடர வேண்டும் என்று இறைவனை வேண்டி நின்று மெர்வின் அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைக் கூறுகிறேன்.

எனது எழுத்துப் பணியில், என்னை உற்சாகப் படுத்துகிற; திரு. சொக்கலிங்கம் (கவிதா பதிப்பகம்), திரு. வைரவன் (குமரன் பதிப்பகம்) ஆகியோருக்கும் நன்றி.

வாசகர்கள் இப்புத்தகத்தைப் படித்த பின்பு இது குறித்த தங்கள் எண்ணங்களை கடிதம் எழுதித் தெரிவித்தால், அடுத்த புத்தகங்கள், 'அச்சில் இருப்பவற்றை' தேவையான மாற்றங்களுடன் வெளியிட பயனுள்ளதாகும்.

'கிருபை-விசுவாசம்-தேவ வசனம்' உங்களை வளப் படுத்தட்டும் என்று மார்டீன் லுத்தர் சார்பில் வாசகரை வாழ்த்துகிறேன்.

Rev. J. VINCENT
D 5, May Flower Garden
R.A. Puram, Madras-600 028.
Phone : 4943891.

உங்கள்
ஜே. வின்சென்ட்

பதிப்புரை

தமிழில் முதன் முதலாக வெளிவரும் இந்த நூல் சிறப்பானது, தெளிவானது, புனிதமானது, புதுமையானது. அருட்திரு வின்சென்ட் அவர்கள் மத நூல்கள் எழுதுவதில் வல்லவர், வளமையானவர். வற்றாத சிந்தனைக் கொண்டவர்.

அவருடைய படைப்புகள் பலருக்கும் பயன்பட்டுக் கொண்டு வருவதே அவரின் எழுத்தாற்றலுக்குச் சிறப்பான சான்று புரட்சிக் கோமான் புதுமையின் தலைமகன் என்று போற்றிப் பாராட்டி சீராட்டும் மார்ட்டின் லூத்தருடைய பொன்மொழிகளை ஆழ்ந்த கருத்தோடும் அழகிய நடையோடும் எழுதியிருக்கிறார்.

இன்றைய காலக் கட்டத்தில் இம்மாதிரியான நூல்கள் புதிய எழுச்சியாகவும் மறுமலர்ச்சியாகவும் விளங்கும் என்பது திண்ணம். திரு வின்சென்ட் அவர்கள் இது போன்று இன்னும் பல நூல்களை எழுத இருப்பதை அறிந்து மன மகிழ்ச்சியுடன் வாழ்த்தினையும் வரவேற்பினையும் வழங்குகிறோம்.

பதிப்பாளர்

லூத்தர் பொன் மொழிகள்

அன்பு	...	9
ஆராதனை	...	12
ஆவியானவர்	...	15
கடவுள்	...	19
கிருபை	...	26
கிறிஸ்தவன்	...	30
சபை	...	36
சாத்தான்	...	41
சாவு	...	45
சுவிசேஷம்	...	48
திருமணம்	...	51
திருஅருட்சாதனம்	...	55
தேவ வசனம்	...	59
நன்மை-தீமை	...	63
நியாயப்பிரமாணம்	...	67
நீதி	...	70
பாவம்	...	73
பிரசங்கம்	...	77
போராட்டம்	...	81
மன்னிப்பு	...	83
மனிதன்	...	85
மார்டீன் லூத்தர்	...	94
விசுவாசம்	...	101
ஜெபம்	...	107
மார்டீன் பற்றி மற்றவர்கள்	...	115

திரு. ஜே. வின்செண்ட் எழுதிய நூல்கள்

எண்	புத்தகத்தின் பெயர்	விலை
1.	பேதேல்	ரூ. 10
2.	யாத்ரா	,, 10
3.	ராகம்	,, 10
4.	சத்யஜோதி	,, 12
5.	சின்னப் பூக்கள்	,, 12
6.	வேள்வி	,, 10
7.	பொன் மொழிகள்	,, 30
8.	இன்டர்வியூவில் வெற்றி	,, 20
9.	விரல் நுனியில் வெற்றி	,, 20
10.	சிறுவர் கதை மலர்கள்	,, 18
11.	தொழிலே தெய்வம்	,, 20
12.	இனிய இந்தியம்	,, 20
13.	பிரச்சனை, ஒரு பிரச்சனையல்ல	,, 20
14.	சிரிப்பு தரும் சிறப்பு	,, 20
15.	பைபிள் கதைகள்	,, 30
16.	பகுத்தறிவுக் கதைகள் 12	,, 25
17.	வேதாகமக் கதைகள்	,, 25

அச்சில்

மார்டின் லூத்தர் மணிமொழி

லூத்தர் முத்துகள்

லூத்தர் சொன்னார்

அன்பு

1. அன்புச் செயல்களால், மனிதனில் அன்பு வளருகிறது. அன்பு செய்கிறவனும்... முந்திய நிலையை விட, கொஞ்சம் கூடுதலாக நல்லவனாகி விடுகிறான்.

2. நன்றி-நன்றி மறத்தல், போற்றுதல்-தூற்றுதல், லாபம்-நஷ்டம் போன்றவற்றை நினைத்துப்பார்க்காமல்; பிறருக்கு, மனர்பூர்வமாக உதவி செய்ய, தெய்வ பற்றுறுதியிலிருந்து, தேவ அன்பு பொங்குகிறது.

3. கடவுளின் பெயரை 'உச்சாடணம்' செய்வதினால் மட்டும் கடவுளை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்காதே! கடவுளை நம்பி, அவரில் அன்பு வைத்து, அவரில் சார்ந்திருத்தலில்; கடவுளை நினைத்திருத்தல் அடங்கி இருக்கிறது.

4. ஒரு விசுவாசி சோம்பலுள்ளவனாக இருக்கமுடியாது தன் உடலைக் கட்டுப்படுத்தி தேவனுக்கு முன்பாக கீழ்ப்படிந்து, தன்னார்வ அன்பால், காரியங்களைச் செய்கிறான் விசுவாசி.

5. பரிசுத்தமும் உண்மையுமான பற்றுறுதி, யாரிடம் இருக்கிறதோ; அவரிடம் பரிசுத்தமும் உண்மையான அன்பும் இருந்தே தீரும்.

6. அன்பானவர்களை விட, நல்லவர்களைவிட; தேவ பயம் அற்றவர் பெரும் பான்மையினர். ஆகவே,

கடவுளின் வாக்குறுதிகளைவிட, கடவுளின் சட்டத்தில் அதிகம் உறுதியுடன் இருக்க வேண்டும்.

7. விசுவாசம், எதிர்கால நம்பிக்கை, அன்பு, சிலுவை (எசேக்கியேல் 10:9)நான்கு பாதங்களின் மேல் தான், எல்லாத் திருச் சபையும் இணக்கமாகி நிற்கின்றன.

8. சகோதரர்கள் அன்பில்லாமல், ஒருவரை ஒருவர் பகைத்து வெறுக்கின்ற நிலையில், மனிதரின் பகைமையை அளக்க முடியாது!

9. நன்மை செய்வதில்,மனங்கனிந்த அன்பும், தன் ஆர்வமும் இல்லாமல்; பல நன்மைகளைச் செய்து வந்தாலும் இந்த வாழ்க்கை பாவம் நிறைந்த வாழ்க்கை தான்.

10. அன்போடும், சந்தோஷத்தோடும், தெய்வத்திற்குப் பிரியமானதை ஒருவர் செய்தால், இது நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுவதாகிறது.

11. கடவுளிடம் வைத்திருக்கிற அன்பின் காரணமாக; பிள்ளைகள், பெற்றோருக்கு முதலிடம் கொடுக்க (அன்புடன் ஆதரிக்க) கற்றுக் கொடுப்போம்.

12. அன்பு கொள்தல் என்பதைவிட மதித்தல் என்பது மேலானது! இதில் அன்பு, இணக்கம், தாழ்மை, பணிவு அத்தனையும் அடங்குகிறதே!

13. பெற்றோர் எப்படிப் பட்டவர்களாகவும் இருக்கட்டும், இவர்களை நமது பெற்றோர் ஆக்கியிருப்பது கடவுளின் சித்தம் தானே! ஆகவே பெற்றோரில் அன்பு வைத்து, அவர்களை மதிக்க வேண்டும்.

14. உங்கள் அன்பு இன்னொருவருக்குப் கிடைப்பதால், அவருடைய உயிரைக் காப்பாற்றக் கூடிய உதவியை நீங்கள் செய்திருக்க முடியும், ஆனால் நீங்கள் செய்யவில்லை! நீங்கள் ஒரு கொலைக்காரர்.

15. நமது பகைவரிடமும், நாம் அன்பும் இரக்கமும் காட்டிட, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் தர, கடவுள் தமது திருவசனத்தை நம்மிடம் பயன்படுத்துகிறார்.

16. கணவனும் மனைவியும், முழு மனதுடன் குறைவற்ற அன்புடன் ஒருவரை ஒருவர் நடத்தி, அன்பாயும்-இணக்கமாயும்-ஒன்றுபட்டும் வாழுவது இன்றியமையாதது.

17. அடுத்தவரில் அன்பு வைத்து, உண்மையின் மீது நீ அன்பு கொண்டு செயல்படுவதானால்... ஒளியை ஒதுக்கி, ஒளிவு மறைவாக இருளில் பதுங்க மாட்டாய்!

18. கடவுள் தமது அன்பினால், விசுவாசிகளாகிய நமக்கு செய்வதைப் போல; நாமும் அன்பினால் ஒருவருக்கு ஒருவர், எல்லாவற்றையும் செய்திடல் வேண்டும்.

19. அன்பு செய்வதற்கு, எந்தச் சட்டமும் தேவைப்படுவதில்லை!

20. அன்பு இல்லாத விசுவாசம் செல்லாக் காசு! இது விசுவாசமே இல்லை. நாம் கண்ணாடியில் பார்ப்பது முகத்தின் உருவத்தை தான். இது முகம் இல்லையே!

21. ஒவ்வொருவரும், தன்னுடைய (இஷ்டம், விருப்பம்) உரிமையை முக்கியத்துவப்படுத்தாமல்... மற்றவர்களுக்கு, அன்பு காட்டவும் உதவிடவும், பயன் உள்ளதும், எது என்று பார்க்க வேண்டும்.

22. அன்பைத் தவிர, நாம் கடவுளிடமிருந்து வேறு எதையுமே பெறுவதில்லை! கடவுள் ஒளிருகிற அன்பின் சூளை. இந்த அன்பு உலகத்திலிருந்து பரலோகம் வரைக்கும் எட்டுகிறது.

23. தெய்வத்தில் அன்பு வைக்காமல், தெய்வத்தை (உண்மையாக) உத்தமாகப் போற்ற இயலாது.

24. கடவுள் நன்மை செய்யாவிட்டால், சில மனிதர்கள் கடவுளைத் துதிக்க மாட்டார்கள்... இவர்கள் துன்பத்தை விரும்பாத, முழுமையாகக் கடவுளில் அன்பு வைக்காதவர்கள்.

25. கர்த்தரைத் துதித்துப் போற்றிக் கொண்டாடுவது என்பது மனிதனின் சுயமுயற்சிச் செயல் அல்ல! கடவுளே, மனிதனில் உருவாக்குகிற, கடவுளின் அன்புச் செயல் இது.

26. இரட்சகரைக் காட்டிலும், இரட்சிப்பிலும், பரிசளிக்கிற கடவுளைவிட பரிசிலும், படைப்பவரைவிட படைக்கபட்ட பொருளிலும் சிலர் அன்பு வைக்கிறார்கள்.

27. தங்களுக்குச் சாதகம் கிடைக்க வேண்டும் என்ற நினைப்பில் கடவுளில் அன்பு வைத்து, கடவுளை புகழுகிறார்கள்... இவர்கள் ஒட்டுண்ணிகள்! இவர்களுக்கு, கடவுள் தனது முகத்தை மறைத்துக் கொள்ளுகிறார்.

28. அன்பு முந்தி நின்றால், அதோடு சேர்ந்து விசுவாசமும் நம்பிக்கையும் வரும்! □

ஆராதனை

---

1. ஆராதனை ஒழுக்கங்கள்-சட்டதிட்டங்கள், ஞானஸ்நான முறைகள் எதுவுமே, இரட்சிப்பின் அடிப்படைகள் அல்ல.

2. கிறிஸ்துதான் நமது பாடலும் துதியும். இதைத் தவிற வேறு எதையும் ஆராதனையில் பாடக்கூடாது.

3. எல்லா வகை கலைகளும், குறிப்பாக பாடல்கலை... இவற்றை உருவாக்கிக் கொடுத்த தேவனின் ஆராத

னையில் பயன்படுத்தப் படுவதைக் காண நான் விரும்புகிறேன்.

4. ஞானப்பாடல்கள், அதன் அதன்இராகத்தில், அட்சர சுத்தமாகப் பாடப் படவேண்டும் என்று நான் கட்டாயப் படுத்துவதில்லை! அந்தந்த சபை, அதன் அதன் ஆராதனைத் தேவைக்கேற்ப பாடல்களைப் பாடலாம்.

5. கர்த்தரைத் தொழுது கொள்கிற முறையும், அவருக்குச் சேவை செய்யும் வழிகளும் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டவைகளாக இருக்க வேண்டும். மனிதக் கண்டுபிடிப்புகளாக இருக்கவே கூடாது.

6. பொருள் ஆசையும், சோத்துக்கான கவலைகளும்... தேவ வசனத்தையும், தேவ ஆராதனையையும் கெடுக் கிறது...மாய்மால ஊழியக்காரர்களை உருவாக்கு கிறது.

7. வேலையில் ஈடுபட்டிருக்கும் மனிதர், சாதாரண ஓய்வு பெற்று, புதிய பலன் அடைய வேண்டும். பொது ஆராதனையில் கலந்து கொள்ள நேரம் கிடைக்க வேண்டும். இந்த நோக்கங்களுக்காக ஓய்வு நாளை 'திருநாளாக' ஆசரிக்கிறோம்.

8. ஒவ்வொரு நாளிலும் ஆராதனை நடக்க வேண்டும்; சாதாரண மனிதருக்கு இது சாத்தியம் இல்லை. ஆகவே வாரத்தில் ஒரு நாள் ஆராதனைக்காக ஒதுக்கப்படுகிறது,

9. ஆராரனையால், ஓய்வு நாள் தூய்மை ஆக்கப்படுவ தில்லை...ஆராதனையால், அந்த நாள் உங்களுக்குத் தூய்மையான நாளாக இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

10. எந்த ஒரு நாளும், ஆராதனை நடக்கிற ஓய்வு நாள் கூட...தன்னில் தானே பிறநாட்களைவிட உயர்வான நாள் ஆவதில்லை.

11. தவிர்க்க முடியாத வேலையைத் தடை செய்வதாகவோ, தற்செயல்(திடீர்)நிகழ்ச்சிகளுக்கு இடைஞ்சலாகவோ வழிபாடும்-ஓய்வு நாள் ஆசரிப்பும் குறுகிய கண்ணோட்டத்தில் அமையக்கூடாது.

12. ஆராதனையில்; மணி அடிப்பதும், குருக்களின் கும்பலும் நம்மைத் தூய்மைப் படுத்தாது! கடவுளின் வசனமே நம்மைத் தூய்மைப் படுத்துகிறது.

13. கடவுளின் வசனம், தனது ஆற்றலை வெளிப்படையாகப் பயன்படுத்த; ஆட்கள், இடங்கள், ஆராதனை முறைகள், முன்பே ஒழுங்கு செய்யப்படுகின்றன.

14. வழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களாக பலர், ஆராதனையில் பிரசங்கத்தைக் கேட்கிறார்கள். இவர்களுக்கு வருஷத் துவக்கத்தில் தேவ வசனத்தில் எவ்வளவு அறிவு இருந்ததோ, அதே அளவு அறிவு தான் வருஷக் கடைசியிலும் இருக்கும்.

15. சிறந்த ஆடை அணிந்து, அலங்காரம் செய்து, நாற்காலியில் அமர்ந்திருப்பதால் ஆராதனையின்பயனை அடைந்து விடுவதில்லை. கடவுளின் வசனத்தில் நம்மை ஈடுபடுத்துவதே ஆராதனையின் மெய்யான அர்த்தம்.

16. ஆராதனையைப் பார்த்தால், பிரசங்கத்தைக் கேட்டால், ஜெபத்தை முணுமுணுத்தால் போதும் என்று நினைக்காதீர்கள்... ஆராதனையில் நீங்கள் பெற்றுக் கொள்வது என்ன?

17. முழுமனமும் ஆராதனையில் லயிக்கவேண்டும். இது ஒருவகை விசுவாசப் பயிற்சி!

18. மெய்யாகவே நமது மனங்கள் முழுமையாக ஆராதனையில் மூழ்கியிருந்தால்...தேவ வாக்குத் தத்தங்களால். இருதயம் கொளுந்துவிட்டு எரியும். தேவ அன்பினால், நமது மனம் இலேசாகும்.

19. தேவ ஆராதனையில் இடம் பெறுகிற பிரசங்கம்... கேட்பவரின் பாவமனங்களை, மனஸ்தாபம் கொள்ளச் செய்யும்...மனங்கள் பாவமன்னிப்பை ஆவலுடன் தேடும்.

20. ஆராதனையில், 'பொது ஜெபம்' மிகவும் முக்கியமானது. இதனால்தான், ஆலயம் 'ஜெபவீடு' என்று அழைக்கப்படுகிறது.

21. விசுவாசிகள் ஒருமித்த மனதில், ஒரே விசுவாசத்தில்...ஆராதனையில் ஜெபிக்கிற ஜெபத்திற்கு அளவற்ற உரிமை இருக்கிறது. □

ஆவியானவர்

---

1. கடவுளை விசுவாசிக்கிறவருக்கு, பரிசுத்த ஆவியானவர் தரப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் இவருடைய மனதை மாற்றுகிறார். மாற்றப்பட்ட இவரது மனம்; இனியதாகவும், இளகியதாகவும் ஆகிவிடுகிறது.

2. சிலருடைய வாழ்வில், பரிசுத்த ஆவியானவரால், சில விசேஷித்த காரியங்கள் நடைபெறுகின்றன. இவர்கள், இந்த நிகழச்சிகள்... எல்லாருடைய வாழ்க்கைக்கும் 'கட்டாய மாதிரிகள்' ஆகிவிடக் கூடாது.

3. பரிசுத்த ஆவியானவரின் 'ஞானப் பார்வைக்கு ஏற்ப' எல்லா விஷயங்களிலும்; இடத்திற்கும், மனிதருக்கும் ஏற்ற உண்மைகளை தேவ வசனம் விளக்குகிறது. இதுதான் சிறப்பு !

4. பரிசுத்த ஆவியானவர். ஒரு சிறிய பைபிளைக் கொடுத்திருக்கிறார் ! அதுதான் சங்கீதம்.

5. இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிப்பதில்—விசுவாசிப்பதால்-விசுவாசிப்பதோடு மட்டுமே-தூயாவியானவர் கொடுக்கப்படுகிறார்.

6. நியாயப் பிரமாணத்தை நேசித்து, சந்தோஷத்தோடு அதை ஏற்றுக் கொள்வதற்கான மனநிலையை, பரிசுத்த ஆவியானவர் நமது மனதில் வைக்கிறார்.

7 தேவ ஆவியானவர்; மனிதரின் மனதை சுதந்திரமும், சந்தோஷமும் உள்ளதாக்குகிறார்.

8. கடவுள் நமக்குச் சார்பாக இருக்கிறார். கிறிஸ்துவையும், ஆவியானவரையும் தருகிறார் என்பதே கடவுளின் கிருபை.

9. தேவ கிருபையின் ஈவும், பரிசுத்த ஆவியானவரும்; நம்மிலே, தினமும் பெருகிக் கொண்டே வருகின்றன.

10. கிறிஸ்து சம்பாதித்துத் தந்திருக்கிற 'தகுதித் தன்மையை' பரிசுத்த ஆவியானவர் நமக்குள் கொண்டுவந்திருக்கிறார்! ஆகவே விசுவாசம்தான், நீதியைக் கொடுத்து, நம்மில் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றும்.

11. ஆவிக்கு உரிய காரியங்களில் தலைமை வகிக்க, தகுதியும் திறமையும் உள்ளவர்கள் தேவையென்றால் ...பிள்ளைகளுக்கு பெற்றோர், வேதத்தைப் போதிப்பதிலும், பயிற்சி கொடுப்பதிலும் நேரத்தையும் பணத்தையும் செலவிடவேண்டும்.

12. என் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, அன்பு காட்டுவதையும் விட பரிசுத்தமான காரியம் வேறு எதுவும் இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன்.

13. பொய்ப் பிரசங்கிகள், தங்களுடைய பொய்பித்தலாட்டங்களை, கடவுளின் வசனம் என்று கூறுவது... ஆவிக்கு உரிய விஷயங்களில் தேவ நாமத்தை வீணாகப் பயன்படுத்துவது ஆகிறது.

14. தூய ஆவியானவரால், சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்டாலன்றி கிறிஸ்துவை ஆண்டவர் என்று நாம் நம்பி ஏற்றுக் கொள்ள முடியாது.

15. ஒவ்வொரு கிறிஸ்துவனையும் கடவுளின் வசனத்தி னால் ஜெனிப்பிக்கிற-பெற்றெடுக்கிற தாய், தூயா வியானவர்!

16. பெற்றோர் வழியாக பிள்ளைகள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, தூய ஆவியானவரின் துணை இல்லாமல் எந்தப் பிள்ளையும் உணர்ந்து கொள்ள முடியாது.

17. மனித ஆவி .. பரலோக ஆவிகள், தீய ஆவி என பல வகை ஆவிகள் வேதாகமத்தில் ... கடவுளின் ஆவி மட்டுமே, தூயாவியானவர் என்று அழைக்கப்படு கிறார்.

18. தூயாவியானவரால் வெளிப்படுத்தப்படாதிருந்தால் கிறிஸ்துவைப் பற்றி எதையும் எவரும் அறிய முடியாது.

19. தூயாவியானவர் மட்டுமே நம்மைத் தூய்மைப் படுத்துகிறவர் என்று வேதாகமம் விளக்குகிறது.

20. 'நம்மைவிடவும் தூய்மை உள்ளவர்களுக்கும், நம்மை விடவும் கடவுளின் பிரியத்தை அதிகம் பெற்றிருக் கிறவர்களுக்கும் மட்டுமே ஜெபிக்கும் கட்டளை கிடைத்திருக்கிறது' என்று நினைக்க வேண்டாம்.

21. புகழுதல், போற்றப்படுதல், மேன்மைப்படுத்தல் போன்ற காரியங்களால் மட்டுந்தான் தேவநாமம் 'பரிசுத்தப்படுகிறது'!

22. பரிசுத்தமான தேவ வசனத்தை நமக்குக் கற்றுக் கொடுத்து, கடவுள் தமது ஆற்றலால் நமக்கு அறிவை ஊட்டி விசுவாசத்தில் நம்மைப் பலப்

படுத்துவதற்காகத்தான் கடவுள் நமக்கு தூய ஆவி யைத் தந்திருக்கிறார்.

23. பேதுரு அப்போஸ்தவரைப் போல, பவுல் அடிகளாரைப் போல, நான் தூய்மை உள்ளவனான இருந்தால்தான் நான் ஜெபிப்பேன் என்ற நினைப்பை மறந்து, ஒழித்து விடுங்கள்.

24. இப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற தேவ அரசாட்சியில் (ராஜ்யத்தில்) நாம் அனைவரும் ஒன்றாக இருக்கவும் (இன்னும்) பலர் தூயாவியான வரால் நடத்தப்பட்டு, கிருபையின் அரசுக்குள் வந்து இரட்சிப்பின்பங்காளிகள் ஆகவும் வேண்டும்.

25. எங்கே கடவுளின் அரசு, தூய்மையாகப்பிரசங்கிக்கப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு விசுவாசிக்கப்பட்டு பயன் தருகிறதோ அங்கே பாக்கியம் உள்ள சிலுவை (துன்பம்) வெகு அருகில் இருக்கும் என்பது உறுதி!

26. பிசாசின் அதிகாரத்திலிருந்து நாம் மீட்கப்படவும், நம்மை பரிசுத்த ஆவியானவரே ஆட்சி செய்து வழி நடத்த வேண்டுமென்று... பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம்.

27. திருவசனத்தின் வழியாகவும், தூய ஆவியானவரின் ஆற்றலினாலும்... நம்மிடம் கடவுளின் ராஜ்யம் நிலவிட வேண்டும்.

28. கடவுளையும், கடவுளை அறிகிற சரியான அறிவையும், கடவுளின் வசன அறிவையும், பரிசுத்த ஆவியானவர் இல்லாமல், எவருமே பெறமுடியாது.

29. தனது தெய்வீக அன்பால்-கிருபையால்-ஆவியால் கடவுள் தன்னை வெளிப்படுத்தினவர்களே அல்லாமல், வேறு எவரும் கடவுளை நேசிக்க முடியாது,

30. அடிமரம் ஈசாய் (தாவீது) கிளை மரியாள்! மலர்-கனி இயேசு... பரிசுத்த ஆவி இவர் மேல் தங்கி இருக்கிறது (எசாயா 11:1)

31. நற்கிரியைகளைச் செய்த எவருக்கும் ஆவியானவர் வழங்கப்பட்டதாக, வேதத்தில் படிக்கிறதில்லை கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டு, கடவுளின் கிருபையில் நம்புகிறவர்களுக்கு மட்டுமே, தேவ ஆவியானவர் வழங்கப்படுகிறார்.

32. சபை மன்றம் கூடுவதற்கு முன்பே, உறுப்பினர் சிலர் ஒன்று கூடிக் கடவுளுக்கும்-தேவசட்டத்திற்கும் எதிராக ஒப்பந்தங்களைச் செய்துகொள்கிறார்கள்... மன்றத்தை, பரிசுத்த ஆவியானவர் ஆளாமலிருக்க இப்படிச் செய்கிறார்கள்.

33. தீய நினைவுகளையும், கற்பும் சுத்தமுமான வாழ்க்கைக்கு எதிரானவைகளையும் எப்படித் தவிர்ப்பது என்று... பரிசுத்த ஆவியானவர், விசுவாசிகளுக்கு விளக்கமாகச் சொல்லிக் கொடுக்கிறார். □

கடவுள்

---

1. கடவுள் எந்த வகை அளவுகளாலும் அளந்து விளக்கப்பட முடியாதவர்! நாம் சொல்கிறதற்கும் நினைப்பதற்கும் மேலே கடந்து நிற்பவர் கடவுள்.

2. ஒரு சிறிய மலரின் சிரிப்பு தெய்வத்தின் சிருஷ்டிப்பின் மகத்துவத்தைப் போற்றுகிறது.

3. சிறியதிலும் சிறியது, பெரியதிலும் பெரியது, அகலத்திலம் அகலம்...கடவுள்!

4. பல தேவைகளில் நமது உதவி இல்லாமலே, கடவுள் நம்மைக் காத்து நடத்துகிறார்! சிறிய சிறிய தேவைகளில். கடவுள் நம்மைக் கைவிட்டுவிடுவார் என்று நினைக்க வேண்டாம்!

5. கடவுளுக்கும் மனுஷனுக்கும், மனுஷனுக்கும் மனுஷனுக்கும், ஐக்கியத்தைத் தருவது (இயேசு கிறிஸ்துவில்) வைக்கும் விசுவாசமே.

6. 'சிறந்த பக்திமானும், தடுமாறி விழுந்துவிட கடவுள் இடங் கொடுக்கிறார், என்றுயோபு புத்தகத்தில் தெரிகிறது.

7. எங்கே; கீழ்ப்படிதலும், சரியான ஒழுக்கக் கட்டுப் பாடுகளும் இருக்கிறதோ, அங்கே கடவுள் இருக்கிறார்

8. கடவுளின் வாக்குறுதிகள் ஆறுதல்களில் சார்ந்திருக்கிற எந்த மனிதனும், கைவிடப்பட்டதேயில்லை.

9. கடவுளின் எச்சரிப்பை மதிக்காத எந்த மனிதனுக்கு விஷயங்கள் நன்மையாக நடக்கப் போவதில்லை!

10. கடவுளின் வார்த்தைகள்-செயல்களுக்கு இடம் கொடுத்து அவைகளின்படி நடக்கிறவன் புத்திமான், ஞானி!

11, கடவுள் ஆற்றுப்படுத்துகிறவர்! தமது ஜனத்தை கடவுள் மார்புடன் அணைத்துச் சேர்த்து, தனது கரங்களால், அணைத்துக் கொள்கிறார்.

12. தேவத் திருப்பணிக்கென்று செலவு செய்ய மறுக்கிற மக்கள் சுய நலத்தால் பெருத்து, செல்வத்தைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள், ஆனால், இவர்கள் பணப் பையில் ஓட்டை ஏற்படச் செய்கிறார் கடவுள்.

13. ஏனோதானோ என்ற மனோநிலையில், வேண்டா வெறுப்பாக (எத்தனை பெரிய நற்செயலைச் செய்தாலும்), இச் செயல்கள் கடவுளை மகிழ்விக்காது.

14. விசுவாசம் என்பது மனிதனின் சொந்தக் கருத்து அல்ல. இது மனிதனின் கனவுமல்ல! விசுவாசம் என்பது நமக்குள் நடைபெறுகின்ற கடவுளின் கிரியை.

15. கடவுள் ஒரு வார்த்தை சொல்கிறார். கடவுள் எதைச் சொல்கிறாரோ அது குதித்து, எழுந்து, உயிர் பெற்று உலவுகிறது.

16. எல்லா நலன்களையும் எதிர்பார்த்துக் கொண்டு, நினைத்தபொழுதெல்லாம், ஓடித் தஞ்சம் புகுந்திட இடம் கொடுப்பது எதுவோ அது கடவுள்!

17. 'எந்த நன்மை உனக்கு இல்லையோ; அதை நாடி, என்னைத் தேடு! உன்னைத் திருப்தியாக்கி உனக்கு உதவி செய்வேன்' என்கிறார் கடவுள்.

18. நமக்குப் பணிசெய்ய அமர்த்தப்பட்ட ஏவலாளன் கடவுள் என்பதைப் போல நினைத்துக் கொண்டு; நம்மை எஜமானர்களாகப் பாவித்துக் கொண்டு, சுய செயல் சம்பாத்தியத்தில் ஈடுபட்டு, கடவுளை (நம்மை நோக்கி இழுத்துக் கொள்ளப்) பார்க்கிறோம்.

19. (மம்மோனை) செல்வத்தை நம்பாமல், மெய் கடவுளை நம்புகிறவர்கள்; துயரத்திலும் வறுமையிலும் துடிக்கிறார்கள்.

20. கடவுள் புன்னகைக்கிறாரா? புருவத்தை உயர்த்துகிறாரா என்ற சிந்தனை இல்லாமல்...இதைப் பற்றி கவலைப்படாமல், தற்பெருமையில் பேராசையில், பலர் கடவுளின் கோபத்தை எதிர்த்து நிற்கிறார்கள்.

21. தாயின் மார்பில் பாலையும்; பூமியில் மனிதன் உண்பதற்காக, கனிபிற பொருட்களையும் கடவுள் கொடுக்கிறார். மனிதன் தானாகவே இவைகளை உருவாக்குவதில்லை.

22. மனித மனம் கடவுளின் ஈவைப் பெற்றுக் கொள்ள விரும்புவதில்லை. புண்ணியம் சம்பாதிக்கிற எண்ணத்தில் தானாக தனது திறமையால் கடவுளின் ஈவைச் சம்பாதிக்கத் துடிக்கிறது மனித மனம்!

23. ஒவ்வொரு மனிதனும், அவனவன் மனமும், எதைச் சார்ந்து கொண்டிருக்கிறதோ...அதை அவன் தனக்குக் கடவுள் ஆக்கிவிடுகிறான்.

24. நீ வைத்திருக்கிற விசுவாசமும் நம்பிக்கையும், உண்மையாய் இருந்தால்; அது உண்மையான கடவுள். உனது நம்பிக்கை போலியாக இருக்குமானால், உன் கடவுளும் போலியானதே!

25. வழிபாட்டு உருவமாக்கி, கடவுளை 'பொம்மைக் கடவுள்' ஆக்கி விட்டு...நம்மையே கடவுளாக நினைத்துக் கொள்ளுகிறோம்.

26. தலை சரியாக இருந்தால், மனிதனின் முழுவாழ்க்கையும் சரியாக இருக்கும். தலை சரியாக இல்லாவிட்டால் (குழம்பி இருந்தால்) வாழ்க்கை சுவைக்காது, வாய்க்காது.

27. விடுதி, படுக்கை, கட்டுச்சோறு முதலியவற்றை ஒரு பயணி தனது பயணத்தில் பயன்படுத்துவான் (பின்பு அவற்றைப் பற்றி அக்கரைப்படுவதில்லை.) இதற்கு மாறாக; பயன்படுத்திய பின்பு, மறந்து விடவேண்டிய உலகப் பொருட்களை, கடவுளாகவும்—வழிபடும் பொருளாகவும் ஆக்கிவிடக் கூடாது.

28. கடவுளிடம் சரியான நல்லுறவை வைத்துக் கொள்ள நமது உதடுகளும் நாவும் நம்மை வழி நடத்துகிறது.

29. நாணம் இல்லாமல், கடவுளின் பெயரை இழிவு படுத்துகிறவர்கள் மிக மிகக் கீழ்த்தரமானவர்கள். இவர்கள் 'கடவுள் கொலைஞர்'

30. நாமே வகுத்துக் கொள்ளுகிற எந்த வகையான ஒழுக்கத்தையும் விட, கடவுளால் கட்டளையிடப் பட்டது மேன்மை பெற்றது!

31. கடவுளின் பெயரைச் சொல்லி; போலியாக, வீணாக முறையிடுவது என்பது...தேவ நாமத்தை வீணாக உச்சரிப்பதாகி விடுகிறது.

32. நீதிமன்றத்தில், (கடவுளின் பெயரில்) உறுதிமொழி கூறிய பின்பு,...பொய் சொன்னால், இதுவும் கடவுளின் பெயரை வீணில் வழங்குவதே!

33. கடவுளின் சித்தமும், அவருடைய சத்தியமும், நமது வாழ்வில் முதல் இடம் வகித்தால்...பெற்றோரின் நல்ல விருப்பத்தையும், நல்ல உத்தரவுகளும் தவிர வேறு எதுவுமே நமக்கு முக்கியமாக இருக்க முடியாது.

34. பொய்யான ஒரு காரியத்தையும் அல்லது வேறு எந்த வகையான தவறையும் ஆதரிப்பதற்காக; கடவுளாகிய கர்த்தரைக் கூப்பிடுகிறயா? நீ கடவுளின் நாமத்தை தவறாகப் பயன்படுத்துகிறாய் என்று ஆகிவிடுகிறது.

35. இறைவனின் திருப்பெயரை பழித்துக் கூறுகிற வர்கள், பொய்யர்கள்! இவர்களைத் தவிர்த்து விடுங்கள்.

36. நன்மையான எல்லா விஷயத்திலும்—பிறருடைய நன்மைக்காகவும், தேவையானால் கடவுளின் பெயரில் ஆணையிடலாம். இந்த ஆணையினால், கடவுளின் சித்தம் வாழ்த்தப்படுகிறது.

37. ஒருவேளை நமக்கு பெற்றோர் இல்லாவிட்டால், ஒரு மரம் அல்லது ஒரு கல் கடவுளால் நமக்கு பெற்றோர் ஆக்கித் தரப்படவேண்டும் என்று விரும்புவோம்.

38. நாம் (ஞானஸ்னானத்தால்) கடவுளின் ஆசாரியர் கள்! ஆசாரியர் என்பது (மனிதர்களுக்கு) ராஜாவாக இருப்பதைவிடச் சிறந்தது.

39. கடவுள் தனது மக்களுக்குக் கொடுத்திருக்கிற அபரிமிதமான ஆசீர்வாதங்கள்... அவர்களுடைய சொந்த நலத்துக்காகவும், பிறருடைய சௌகரி யத்துக்காகவும் தான்.

40. மோட்சத்தில் மட்டுமல்ல, நரகத்திலும் கடவுளின் நன்மை நிறைந்திருக்கிறது! (கடவுளின் நல்ல தீர்ப் பினால்தானே நரகத்திலிருக்கிறார்கள்).

41. தாய் நம்மை எப்படி பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்த்தார் என்பதை நாம் அறியோம் பிறரிடமிருந்துதான் இதை நாம் தெரிந்து கொள் கிறோம். கடவுளும் இப்படித்தான்! நம்மை... நாம் அறியாமலே... வளர்க்கிறார்.

42. கடவுள் நம்மை உருவாக்கி, பின்பு விட்டுவிட்டு போய் விட்டார் என்று நினைக்கிறோம். ஆகவே, நம்மை நாமே அரசாளும் உரிமையை நமக்குக் கொடுத்திருக்கிறார் என்றும், நினைத்துக் கொள் கிறோம் இப்படி (கடவுளின் அரசு வேறு—நமது அரசு வேறு என்று) நினைப்பது முரட்டுத்தனம்.

43. நமக்கு ஒரே ஒரு கவலைதான் இருக்க வேண்டும். 'கவலைப் படக் கூடாது' என்ற கவலைதான் அது! நம்மைப் பற்றிக் கவலைப் படக் காத்திருக்கிற கடவுளைச் சரண்டல் செய்வோம்!

44. சினம், கடிந்துரைத்தல், தண்டனை என்பன... கடவுளுக்கும், அவருடைய பதிலாளிகளுக்குமே உரிய தனிச் சிறப்பு, உரிமை.

45. ஒரு திருடனை, மற்றொரு திருடனைக் கொண்டு கடவுள் தண்டிக்கிறார். அல்லது (இத்தனை கொள்ளைக்காரர்களுக்கும்) தூக்கு மரத்துக்கும் கயிறுகளுக்கும் எங்கே போவது?

46. 'கடவுள் கேட்கவா போகிறார்' என்று 'ஏனோ தானோ என்று ஜெபித்தால் போதும்' என்று... ஜெபத்தை அதிர்ஷ்டத்துக்குப் பயணம் வைத்து முணு முணுக்கிறோம். இது பயன் இல்லாதது,

47. (ஜெபியுங்கள்) என்ற கட்டளை கொடுத்து, (பெற்றுக் கொள்வீர்கள்) என்ற வாக்குறுதியையும் கொடுத்து... கடவுள் தாமே, நமது ஜெபங்களைத் துவங்கி வைத்து நாம் பயன்படுத்த வேண்டிய சொற்களையும் நமது நாவில் வைக்கிறார்.

48. கடவுள் வயலை ஆசீர்வதித்து, பயிரை வளரச் செய்யாவிட்டால்... ஒரு பருக்கையைக் கூட நமது உண்கலத்திலிருந்து நாம் எடுத்து உண்ண முடியாது.

49 திட நம்பிக்கையுடன்... வேண்டிக் கொண்டு ஜெபிக்காவிட்டால் கடவுளுக்குக் கோபம் வருகிறது.

50. உனது தேவைகளை, விருப்பங்களை, நீ புலம்பி வெளியிடவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்! கடவுளுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறாயா? உனது உள்ளத்தில் நாட்டத்தை உருவாக்கி உன் மனப்பான்மையை அகலப்படுத்தவே இப்படிச் செய்கிறார்.

51. பிசாசும்-அவனது முழுச் சேனையும், சுவிசேஷத்தை முழுமையாக வேர் அறுக்க சீற்றங் கொண்டு, பெருமுயற்சி செய்தாலும்... கடவுளின் சித்தம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

52. திருவசனத்தின் காரணமாக, திருமுழுக்கை, கடவுளே தமது சொற்களால் மேன்மைப் படுத்தி, வானத்திலிருந்து பெருகுகிற அற்புதத்தினால், நம்மை உறுதிப்படுத்துகிறார்.

53. கடவுளால், தனக்குமேலே எதையும் எவரையும் பார்க்க முடியாது, அவருக்குச் சமமாகவும் எதையும் பார்க்கமுடியாது. கடவுளால்,தனக்குக் கீழே மட்டுந் தான்பார்க்க முடியும்!கடவுளுக்குக் கீழே நான் இருக் கிறேன் என்று நம்புகிறவரை, கடவுள் நன்றாகப் பார்க்கிறார், கவனிக்கிறார்.

54. கடவுளின் பெயரை; காகிதத்தில்-சுவரில் எழுதுவது இலேசு! ஆனால் (மனதில் எழுதி) மனம் நிறைய ஏற்றுக் கொண்டு, கடவுளின் மகிமையைப் புகழ்ந்து அதில் சார்ந்து வாழ்வது கடினம். □

கிருபை

1. விசுவாசத்தினால் கிடைக்கிற கிருபையை விட மேலான கிருபை, தங்கள் சொந்த நற்செயல்களால் கிடைக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். இப்படி நினைப்பது, திருமுழுக்கின் மேன்மையை அவமதிப் பதாகிறது.

2. சூரியனில், வயலில். மரத்தில், மலரில், இலையில், புல்லில், காயில், கனியில்... ஏன் ஒரு சிறிய நெல்

மணியில்கூட கடவுளின் அளவிட முடியாத அருள் (கிருபை) எழுதப்பட்டிருக்கிறது.

3. கடவுளின் கிருபை மேன்மைப் படவேண்டுமென்று, கடவுள் விரும்புகிறார். மனிதனின் சுய நீதியால், கடவுளின் கிருபை மகிமைப்படுமா? இல்லவேஇல்லை! நமது பாவத்தில் தான் கடவுளின் கிருபை வெளிப் படும்!

4. தேவ ஆராதனை என்பது, ஒரு சுய நீதிச் செயல் அல்ல! தேவ ஆராதனையில் பங்கு பெறுவதால், கடவுளின் கிருபையும் தேவ இரட்சிப்பையும் சம்பாதிக்கமுடியும் என்று நினைக்கவே வேண்டாம்.

5. நிறைந்து வழியும் தேவ வசனத்தில், ஏராளமான மாற்று மருந்துகள் கடவுளின் கிருபையால் நமக்கு இருக்கின்றன. பதுங்கி இருக்கும் பூச்சி புழுக்களைப் பார்த்து, பயப்படவேண்டாம்.

6. கொடுத்த தெய்வத்திற்கு, நாம் கொடுக்கிறோம் என்பது, நமது புண்ணியச் செயல் என்று ஆகி விட்டால்; தேவ கிருபையை-இரக்கத்தைக் கேலி செய்கிறோம்.

7. ஞானஸ்னானத்தில், நாம் கடவுளுடைய கிருபை-இரக்கம் நிறைந்த தீர்ப்புக்குள் வருகிறோம்.

8. உமது கிருபை என்னைத் திருப்தி ஆக்கட்டும், நான் ஜெபிக்கிறவர்களுக்கும், உமது தெய்வீகப் பிரசன்னம் திருப்தி தரட்டும்.

9. கடவுளின் கிருபையில் அசையாமல் உறுதியாக நம்புவதும், அதில் நிலைநின்று வாழ்வதுமே, விசுவாசம்.

10. ஈவுகள், திறமைகள் (வரங்கள்) நமக்குள் வேறுபடுகின்றன. நிறைவாக, நமக்குச்சார்பாக, நம்மில் முழுமையாக இருப்பது தேவகிருபை மட்டுமே!

11. மனிதனுக்கு, கிறிஸ்துவின் தேவை எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதை, நியாயப் பிரமாணம் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. நமது தேவையைப் புரிந்து கொள்ளும் போது, தேவகிருபை எவ்வளவு அவசியம் என்றும் விளங்குகிறது.

12. நியாயப் பிரமாணம் நமக்கு மிகவும் தேவையானது என்பதை, தேவகிருபை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

13. இயேசுகிறிஸ்துவையும், அவருடைய நீதியையும் முதலில் பாருங்கள்... பின்பு உங்கள் பாவத்தின் பரிமாணம் உங்களுக்குப் புரியும். தேவகிருபையின் தேவை தெளிவாகத் தெரியும்,

14. 'கடவுள் நம்மைப் பாதுகாத்து, நமக்கு உதவி செய்வார்' என்ற கிருபை நிறைந்த கடவுளின் வாக்குறுதியை, உலகம் நம்புவதில்லை...இதை ஒரு நல்ல செய்தி என்று ஏற்பதுமில்லை.

15. பூமி, கடவுளின் கிருபையால் நிறைந்திருக்கிறது! ஆகவே நன்மைகளுக்குக் குறைவில்லை. இனிய ஆசிகளுக்கு முடிவே இல்லை.

16. கிறிஸ்துவின் கிருபையால், உனக்குக் கிடைத்திருக்கிற பெரிய பெரிய ஆசீர்வாதங்களைவிட... வந்திருக்கிற தீமை பெரிது அல்ல!

17. உன் கடமைகளைச் செய்துவிடு! பின்பு, உன்னை ஆதரிப்பதையும், உனது தேவைகளை நிறைவேற்றுவதையும், கடவுளின் கிருபைக்கு ஒப்புவித்துவிடு!

18. கிருபையை இழந்துவிடாமல், பிள்ளைகளைக் கடவுள் பயத்தில் அறிவில் வளர்த்து...தொண்டு செய்யக்கூடியவர்களாகக் கற்றுக் கொடு.

19. விசுவாசப் பிரமாணம், கலப்பற்ற கிருபையைக் கொண்டு வந்து...நம்மைக் கடவுளுக்கு உகந்தவர்களும் ஆக்குகிறது.

20. இயேசு; 'கிறிஸ்துவாக' இருந்தால் போதாது! அவர் உனக்கு கிறிஸ்துவாக...எனக்கும் கிறிஸ்துவாக... இருந்தால் தானே, தேவ கிருபையினால் பயன் பெருகும்.

21. இராஜாவாகி விடவேண்டும் என்று யாரும் திருமுழுக்கு பெறவேண்டாம்! கடவுளின் கிருபையால்; பாவம், பிசாசு, மரணம் என்பவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டு கிறிஸ்துவின் அரசில் புகுந்து வாழ்வதற்காகவே திருமுழுக்கு பெறுகிறோம்.

22. கடவுளுக்கு நன்றி செலுத்துவது என்பது கற்றுக் கொடுக்கக் கூடியதல்ல! கடவுளின் கிருபையால், உணர்ந்துகொள்ள வேண்டியது.

23. பலரும் நல்ல செயல்களைச் செய்ய முடியும்! கிறிஸ்துவின் கிருபையைப் புரிந்து கொண்ட வல்லமை பெற்ற கிறிஸ்தவளால் தான் 'கடவுளின் சித்தத்திற்கு ஏற்றவிதமான நன்மை செய்தேன்' என்று நம்பமுடியும்.

24. கடவுளின் கிருபை-கருணை தங்கள் மேல் நிறைவாக இருக்கிறது என்று நம்புகிற விசுவாசிகள்...எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று தெரிந்தவர்கள்.

25, நாம் கடவுளின் பிள்ளைகள் தான், ஆனால் பாவிகள்! நாம் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். முழுமையாக அல்ல! இந்தத் தகுதிகள் கடவுளின் கிருபையையே, சார்ந்து இருக்கிறது.

26. கடவுளிடம் ஒன்றித்து இராதவன் (ஐக்கியப்பட்டிராதவன்), கடவுளின் கிருபையில் சந்தேகம் கொள்ளுகிறான்! இவன் தான்; ,ான் எதைச் செய்தால் கடவுளின் கிருபையை 'இழுக்க முடியும்' என்று கணக்குப் போடுவான்.

27. கடவுளின் கிருபையைப் பெறாதவர்கள்-நம்பாதவர்கள்...இவர்களை விட்டு அன்பும் பயமும் விலகிப் போகும். □

கிறிஸ்தவன்

1. கிறிஸ்தவன், தனக்காக வாழ்வதில்லை. கிறிஸ்துவுக்காகவும் பிறருக்காகவும் வாழுகிறவனே கிறிஸ்தவன்!

2. 'நன்மை, பிறருக்கான லாபம், பிறருக்குத் தேவையான காரியங்கள் தான் கிறிஸ்துவில் காணப்படுகிறது. இதை விட்டு விட்டு, வேறு எதையுமே செய்ய மாட்டேன்' என்று நினைப்பவன் கிறிஸ்தவன்.

3. நாம் தெய்வத்திடம் பெற்றுக்கொண்டவர்கள்! தெய்வத்திற்கு நன்றி செலுத்த வேண்டியவர்கள். இதை மறந்துவிட்டு, கிறிஸ்தவன் கடவுளுக்குக் கொடுக்க' துணிந்து விட்டால் இது அகந்தை.

4. திருவிருந்தில் பங்கு பெறுகிறவர்கள்; தேவனுக்கு முன்பாக, தேவ தூதர்களுக்கு முன்பாக, மனிதர்

களுக்கு முன்பாக, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று மெய்ப்பிக்கிறார்கள்.

5. 'சமாதானம், சமாதானம்' என்று சொல்லி... கிறிஸ்தவர்களுக்கு மெய்ச் சமாதானத்தைக் கொண்டு வராத போலித் தீர்க்கதரிசிகள் ஒழிக!

6. கிறிஸ்துவாக நாம் ஒவ்வொருக்கும் மாற வேண்டும். ஒருவருக்கு ஒருவர் நாம் கிறிஸ்துவாக ஆகவேண்டும். எல்லாருக்குள்ளும் கிறிஸ்து இருக்கிறார் என்று நினைத்து உதவி செய்யவேண்டும். இதுவே உண்மையான கிறிஸ்தவம்.

7. ஒரு கிறிஸ்தவன், எல்லாருக்கும் பணி செய்கிற வேலைக்காரன். கிறிஸ்தவன், எல்லாருக்கும் (அன்பில் கட்டுப்பட்ட) அடிமை!

8. கிறிஸ்தவர்களின்-விசுவாசிகளின் திருமணத்தைவிட பிறமதத்தவரின் திருமணம் குறைந்தது அல்ல.

9. கிறிஸ்தவர்களுக்குள்ளேயும்... பிற மதத்துவர்களையும்விட மோசமானவர்கள் இருக்கிறார்கள்.

10. இலாபம் எதையும் எதிர்பார்க்காமல், தேவனுக்கு ஊழியம் செய்வது, விசுவாசியின் சொந்த வேலை ஆகிறது.

11. சாத்தான் 'கல கல, என்று சிரிக்கிறான்! சிரிக்கட்டும்! விசுவாசிகளான நாம், தேவ வசனத்தின் மூலம் அவனை உபத்திரவப்படுத்துவோம். சாத்தானின் நம்பிக்கையைத் தரை மட்டமாக்கி, அவனைத் தலைகுப்புற கீழே விழும்படித் தூக்கி எறிவார் இயேசு.

12. நற்காரியங்களைச் செய்வதால் ஒருவன் பரிசுத்தன் ஆகிவிடுவதில்லை. விசுவாசத்தினால், கடவுள் ஒருவனைப் பரிசுத்தன் ஆக்குகிறார். பரிசுத்தன் ஆக்கப்பட்ட கிறிஸ்தவன், நல்ல செயல்களைச் செய்கிறான்.

13. விசுவாசத்தைத் தவிர, நான் வேறு எதையும் விரும்பு கிறதில்லை! இதுதான், கிறிஸ்தவனின் வல்லமையும் விடுதலையும் ஆகிறது.

14. விசுவாசி (கிறிஸ்தவன்) விசுவாசத்தினால், புதிய மனிதன் ஆக்கப்பட்டுவிட்டான். மீண்டும் ஏதேனில்-பரதீசில் வாழுகிற உரிமை பெற்றவனாகிறான் கிறிஸ்தவன்.

15. வீண் பெருமைகொண்டு சில கிறிஸ்தவர்கள், தங்கள் அதிகார மமதையினால், சத்தியத்தையே எதிர்க் கிறார்கள்.

16. சிறு பிள்ளைத்தனமான, குப்பைச் செய்திகளைப் படித்துவிட்டு, கிறிஸ்துவைப் பற்றி போதிக்கிறேன் என்று கிறிஸ்தவர்களிடம் சொல்கிறவர்கள் இருக் கிறார்கள்.

17. கிறிஸ்தவர்கள், எல்லாரையும் ஆளுகை செய்கிறவன், சுதந்திரமானவன், முதலாளி! அவன் யாருக்குமே அடிமை இல்லை.

18. கிறிஸ்தவ சுயாதீனம் என்பதைச் சிலர் சுய நலத்திற் கென்று பயன்படுத்துகிறார்கள். தேவ மகிமைக் காகவும், பிறர் நலத்துக்காகவும், 'கிறிஸ்தவ சுயா தீனம், என்ற கொள்கையைப் பலர் பயன்படுத்து வதில்லை.

19. பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றிருக்கிற கடவுளின் ஞானமும், வல்லமையும், மகிமையும் நிறைந்த வார்த்தைகள்-செயல்கள்-நியாயத்தீர்ப்புகள் பற்றி, கிறிஸ்தவன் சந்தேகப்படக்கூடாது!

20. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள, சாதாரண-சாமானிய விஷயங்களால், பண்பட்ட கிறிஸ்தவர்கள் தடுமாற அவசியமே இல்லை!

21. கிறிஸ்தவர்களாகிய நாம், மரணத்தை, ஆழமான அமைதியான, இனிமையான தூக்கமாக மதிக்கிறோம்.

22. சவப் பெட்டி என்பது, கிறிஸ்தவனுக்கு; இயேசு மீட்டரின் மடி, அல்லது மோட்சத்தின் மடி!

23. கல்லறை, ஒரு விசுவாசிக்கு, ஓய்வு எடுக்கிற பதுங்கு குழி!

24. சுய இஷ்டமும், ஒழுங்கீனமும், குழப்பமும் உள்ள கிறிஸ்தவர்களைப் பார்க்கிற; கிறிஸ்தவர் அல்லாதவர்கள் வெட்கித் தலை குனிகிறார்கள்.

25. கிறிஸ்தவன் நற்செயல் செய்து கொண்டே இருக்க வேண்டும். விசுவாச வாழ்க்கைக்கு விடுமுறை இல்லை.

26. இடரட்சண்ய தேவைக்காக; கிறிஸ்தவன், இயேசுவை ஒரு ‘மாதிரியாக’ மட்டும் பார்ப்பது போதாது. இயேசுவை ‘கிறிஸ்துவாக’ ஏற்பதே, இரட்சண்யத்தின் ஆதாரம்.

27. நல்ல கிறிஸ்தவனுக்கு, ஒவ்வொரு நாளும் புனிதமான (ஓய்வு நாள்) நாள் ஆகிவிடுகிறது.

28. இயேசுக் கிறிஸ்து நமக்காகப் பிறந்தவர் மட்டுமல்ல நமக்காகக் கொடுக்கப்பட்டவர். இது சீயோனின் (கிறிஸ்தவரின்) ஆசீர்வாதம்.

29. கிறிஸ்தவர்கள் கடவுளின் பிள்ளைகள்! அப்படியானால், கடவுளின் சொத்தை, சுதந்தரிக்க வேண்டு, மல்லவா? இது விசுவாசத்தினால் முடியும்.

30. கிறிஸ்தவர்களே... தவறு செய்திருக்கிற சகோதரர்களை, சகித்து ஏற்றுக் கொள்ளுங்கள். அவனுடைய பாவத்தை உன்னுடையதாக நினை! உன்னிடத்தில் ஏதாவது நன்மை இருந்தால், அதை அவனுக்குக் கொடு!

31. 'கிறிஸ்தவர்கள்' என்று பெயர் வைத்திருக்கிறவர்கள், தங்கள் ஆத்துமாவுக்குக் காவலானராக இருப்பவர்களுக்கு இரட்டிப்பான கவனத்தைக் காண்பிக்க வேண்டும்.

32. கிறிஸ்து என்பவரின் ஒரே தலைமையின் கீழ்... சிறிய ஒரு தூய்மையான மந்தை... பூமியில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

33. பத்துக் கற்பனைகள் நம்மைக் கிறிஸ்தவர்கள் ஆக்கி விடுவதில்லை!

34 நாம் கேட்கிற போதனைகளும், நமது வாழ்க்கையும் கிறிஸ்தவத்தன்மை உள்ளவைகளாக இருக்கும் போது, நாம் கடவுளை 'அப்பா... பிதாவே' என்று அழைக்கிற உறவுக்குள் இருக்கிறோம்.

35. கிறிஸ்தவர் என்ற கடவுளின் மக்கள்... விபசாரக்காரராக - குடிகாரராக - பெருந்தீனிக்காரராக - பொறாமை பிடித்தவராக இருப்பதால், கடவுளின் பெயர் இழிவு செய்யப்படுகிறது.

36. இயேசுவின் விரல் தொடுதலால் அற்புதம் நடக்குமென்றால்... கடவுளின் வசனத்தில் நிறைந்திருக்கிற இயேசுவின் ஆவி...கிறிஸ்துவ ஆத்துமத்துடன் பேசி, வசனத்தில் சொல்லப்பட்டவைகளை கிறிஸ்தவனில் நிகழ்த்தாமல் இருப்பது எப்படி ?

37. கிறிஸ்தவனுக்குத் தேவையானது எல்லாமே, விசுவாசத்தின் மூலமாக அவனுக்குக் கிடைக்கிறது. இரட்சிப்பு பெற, இவனுக்கு நற்செயல் தேவையில்லை என்றாகிறது.

38. விசுவாசிக்கிற, கிறிஸ்துவனின் ஆத்துமா, கடவுளுக்குக் கீழ்ப்படிகிறது. கீழ்ப்படிதலில் நிறைவேறாத நியாயப்பணம் ஏதாவது மீதம் இருக்குமா ? கீழ்ப்படிதலில் எல்லாம் நிறைவேறி விடுகிறது !

39. கிறிஸ்தவன் ; விசுவாசத்தினால், எல்லா அதிகாரங்களுக்கும் (ராஜரீகம்) மேற்பட்டவன். ஆகவே, கிறிஸ்தவனை எதுவும் ஆளுகை செய்யமுடியாது. ஒழிக்க முடியாது !

40. கிறிஸ்தவன்; கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன், கிறிஸ்துவின் உடன் பிறப்பு, நண்பன், உடன் பங்காளி, கிறிஸ்துவோடு ராஜ உரிமை பெற்றவன் ...(இது மட்டுமல்ல) இவன் கிறிஸ்துவைப்போலவே, ஆசாரியன்.

41. கிறிஸ்தவன், எல்லாவகைக் கட்டுகளிலிருந்தும் விடுவிக்கப் பட்டவன்... எல்லாவற்றையும் ஆளுகிற உரிமை பெற்றவன். விசுவாசம் அவனுக்கு இந்த உரிமைகளை அபரிமிதமாக வழங்குகிறது.

42. கடவுளை மகிமைப்படுத்துகிற செயல் மூலமாக, சில கிறிஸ்தவர்கள் தங்களையே மகிமைப் படுத்து

கிறார்கள், கடவுளைப் பங்குபோடுகிற (கூறு போடுகிற) கிறிஸ்தவர்கள் இவர்கள்.

43. மரியாள் தனக்காக மட்டும், 'மரியாளின் கீதம்' பாடவில்லை. கிறிஸ்தவர்கள் எல்லாருக்காவும்... நாம் எல்லாருமே பாட வேண்டும் என்ற நோக்கத்துடன் பாடினார் எனலாம்.

44. கிறிஸ்தவம், அதைக் காக்க வேண்டியவர்களாலேயே வீணாக்கப்படுகிறது! வீடு பற்றி எரிகிறது...காட்டில் உலவும் ஓநாய்களை (பிற மதத்தவர் தொல்லை களை) நினைத்துவருந்தும் கிறுக்கர்கள் நாம்.

45. அறியாமையில் ஒருவர் தவறு செய்துவிட்டால் பொறுத்துக் கொள்ளலாம். தீமைகளே தினப்பழக்கம் ஆகி...பெருமையும் புகழையும் பெற்று, வளைய வளைய வருவது கிறிஸ்தவத் தன்மை இல்லை.

46. (விபச்சார விடுதி போன்ற) பாவ பொது விடுதிகள் கிறிஸ்தவர்களால் நடத்தப்படுவது, தடை செய்யப் பட வேண்டும். □

சபை

1. சபைக்குத் தலைவர்களாக, குருக்கள் தங்களை நினைக்க வேண்டாம்!... 'கிறிஸ்துவுக்கு அடிமைகள்! நாங்கள் என்றார்களே, அப்போஸ்தலர்கள்!

2. முழு உலகத் திருச்சபையை பாதுகாத் தருளும்! உமது சமாதானத்தினால் முழு உலகத் திருச்சபையை ஆண்டு காப்பாற்றும். சபையின்

உத்தம விசுவாசிகளையும் ஊழியர்களையும் ஆண்டு காப்பாற்றும்.

3. தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லை என்று ஒருவன் நினைக்கிறபோது தான்...அவன் தன்னை, 'சபையின் தலைவன்' என்கிறான்—ஆக்குகிறான்.

4. (சபையில்) அங்கியுடன் ஆராதனை நடத்துவது என்பது, அங்கி இல்லாமல் நடத்துவதைவிடச் சிறப்பானது அல்ல. அங்கி, நம்மை ஆண்டவருக்கு அருகில இழுத்துச் செல்லுகிற ஒரு சாதனமுமல்ல!

5. அதிகாரத்தையோ, ஆற்றலையோ, ஆட்சி உரிமையையோ...கிறிஸ்து தமது சபையில் நிலை நிறுத்தவில்லை. பணிபுரிவதையே நிலை நிறுத்தினார்.

6. திருச்சபையின் உண்மையான சொத்து எது தெரியுமா ? மிகு தூய்மைக்கும் மாண்புக்கும் உரிய திருவசனமும், தேவ கிருபையும் தான்.

7. பொது தேவ ஆராதனை சபையில் ; சுருக்கமாக, ஒரு மணி நேரத்தில், அல்லது அதற்குக் கொஞ்சம் அதிகமாக நடைபெறலாம். ஆத்துமாக்கள் சோர்வு அடையும் வரை, சலிப்பு அடையும் வரை, ஆராதனை நீடிக்கக் கூடாது.

8. குருவானவரின் அங்கி முதலான ஆடை அணிகளை எதிர்க்க வேண்டாம். தேவைக்கு அதிகமான, ஆடம்பரம் அலங்காரம் இவைகளில் இல்லாமல் இருந்தால் சரி!

9. சாதாரண சபையாரைவிட, உயர்ந்த பதவி (கடவுளின்) கிடைக்கும் என்ற நினைப்புடன், யாரும் குருப்பட்டம் ஏற்க முன்வர வேண்டாம்.

10. ஒரு குருவானவருக்குள் கிறிஸ்து இல்லை என்றால், இவருக்கு, திருச்சபை என்பது வெறும் மக்கள் கூட்டமாகத்தான் தெரியும்.

11. குருத்துவம் என்பது ஊழியம்! குருவுக்கும் சபையாருக்கும் உள்ள வேறுபாடு, திருப்பணியில் தான் இருக்கிறது.

12. 'கடவுள் படைத்தது எல்லாம் நல்லதே' என்று தீமோத்தேயு சொல்கிறார். ஆகவே ஆடை அணிகளில் எந்தப் பரிசுத்தத்தன்மையும், ஆசியும் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை! இப்படி நினைப்பது, நம்புவது மூடத்தனம்.

13. சபை மக்களாகிய நாம், தேவ வசனத்தின் மாணவர்கள். தேவ வசனத்திறகு நாம் எஜமானவர்கள் அல்ல.

14. 'பொங்கப்பம்' பேல, ஊதிப் பெருத்த கன்னங்கள் உள்ளவர்கள், திருச்சபைத் தலைவரின் சீடர்கள். இவர்கள் தங்களுக்குச் சாதகமான சமயவினைச் சட்டங்களை, ஊதி ஊதி உப்ப வைத்து விட்டனர்.

15. சட்டத்தைக் கொண்டு மட்டுமே, ஆட்சியை வெற்றி கரமாக நடத்திய நாடு (சபை) எதுவுமே இல்லை!

16. தேவ பிரமாணங்களுக்கு எதிரான பாவங்கள் எது, மனித வாழ்க்கை முறைக்கு எதிரான பாவங்கள் எது என்று சபை பிரித்து அறிதல் நலம்.

17. சபைச் சட்டங்களும் பாரம்பரியங்களும், மனிதரால் உருவாக்கப்பட்டவைதான். மனிதர்மேல் சுமை சுமத்தத்தான் இவைகளுக்குத் தெரியும்.

18. கலப்படமற்றதும், சத்தியமுள்ளதாகவும், செயல் திறன் உள்ளதாகவும்; தேவ வசனம், திருச் சபையில் விளக்கப்பட வேண்டும்.

19. ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்கிறவர், இளைஞரைத் திடப்படுத்துகிறவர், பேராயர் ஆகிவிடுவதில்லை! (அவர் பேராயர் ஆகியிருப்பதால் இக்காரியங்களைச் செய்கிறார்.)

20. 'சகல பரிசுத்த வான்களின் வீடாகிய (சபை) இந்த வீடு; சகல சாத்தான்களின் வீடுகளுக்கும், எதிரில் உயர்ந்து நிற்கும் 'லீபனோன் கோபுரமாகி' நிற்க வேண்டும்!

21. மதகுருக்கள் சுமத்திய ஜெபத்தை (சபையில், தனியாக) மக்கள் திரும்பத் திரும்ப முணுமுணுக் கிறார்களே! இவர்களில் எத்தனை பேர், இவற்றின் பொருளை உணர்ந்து ஜெபம் செய்கிறார்கள் என்று கேட்கிறேன்.

22. எங்கள் ஆராதனையை ஆசீர்வதிக்கப்பட்டதாகும்! எங்கள் ஆராதனையை பயனுள்ளதாக அழகானதாக, அர்த்தமுள்ளதாக ஆக்கித் தாரும்.

23. சபைகளும் பாவமுள்ளவைகளே! உமது சித்தம் செய்யப்படுவதாக என்று அனைத்து சபைகளும் ஜெபிக்கின்றன. கடவுளின் சித்தத்தை தாங்கள் செய்வதில்லை என்று சபைகளே ஒத்துக் கொண்டு அறிக்கை செய்கின்றன.

24. ஞாயிறு தவிர, வேறு நாட்களிலும், சபை கூடி வரும் போது திருவிருந்து பெற விரும்பினால் அந்த ஆராதனையை, திருவிருந்து ஆராதனை ஆக்கலாம். திருவிருந்து (எத்தனை தடவை பரிமாறலாம்) என்பதற்கு ஒரு எல்லை இல்லை.

25. சபை கூடி வருதலில், பாடப்படும் பாடல்கள், அர்த்தமில்லாத, வாத்தியக் கருவியின் வாசிப்பைப் போல, உணர்ச்சி இல்லாமல் பாடப்படக் கூடாது.

26. ஆராதனைக்காக; பரிசுத்தமும், தெய்வீகமும் நிறைந்த பாடல்களை எழுதிட, நமக்குக் கவிஞர்கள் தேவை! பவுல் 'நன்றி அறிதலோடு போற்றிப் பாடுங்கள்' என்கிறார்.

27. சபைகளில் குவிந்து கிடக்கிற குருக்கள்... தங்கள் கடமைகளை நிறைவேற்றாமலிருப்பதால்...குருக்கள், கண்ணீருடன் பாவ அறிக்கை செய்ய வேண்டியவர்கள்.

28. சமயச் சடங்குகள் எதுவும், இரட்சிப்பின் அடிப் படைத் தேவை இல்லை! சபை ஒழுக்கமாகக் கூடி வரவும், சபை மக்களை ஒழுங்குபடுத்தவும் இவை பயன்படலாம்.

29. திருச் சபைக்குள் இருக்கும் அத்தனையும் (மக்கள்) பரிசுத்த பாத்திரங்கள் அல்ல! நம்முடன், மரியாதைக்கு உரியது அல்லாத பாத்திரங்களுக்கும் இடம் தர வேண்டும். (இது ஒரு விசுவாசச் சோதனை!)

30. நல்ல மிளகில், எலிப்புழுக்கையும் கலந்து கிடக்கும்.

31. வேதத்தில், கடவுள் கொடுத்திருக்கிற வாக்குறுதிக்கு மேல்... அதில் இல்லாத புதிய வாக்குறுதிகளை சபை கொடுக்க முடியாது.

32. வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லையென்றாலும், சபையில் தொன்று தொட்டு வழங்கி வருகிற தனிப்பாவ அறிக்கை முறை நல்லதுதான்.

33. கடவுளின் வாக்குத் தத்தம் தான், சபையை உருவாக்கிக் காக்கின்றது. கடவுளின் வாக்குறுதியை, சபை உண்டாக்குவதில்லை.

34. பிஷப், போப், ஆண்டகை, பெருந்தலைவர் என்றெல்லாம் இப்பொழுது சபைகளில் அழைக்கப் படுகிற சேவை-பணிப் பெயர்கள்...புதிய ஏற் பாட்டின்படி ஊழியர்கள், வேலைக்காரர்கள், போதகர்கள் உக்ராணக்காரர்!

35. சட்டங்கள் மலிந்துவிட்டதால், சபையில் பிளவுகளும் மலிந்துவிட்டன. இப்படித்தான் செய்ய வேண்டும். அப்படித்தான் செய்ய வேண்டும் என்பதால் தான் பிரிவினை உண்டாகிறது.

36. மக்களை விசுவாசத்தில் கடவுளிடம் நடத்தவே, ஆவிக்குரிய அதிகாரத்தை சபையில் சிலர் பெற்றிருக்கிறார்கள்.

37. சபை குருக்கள்; சரியாகப் பிரசகிங்ப்பதில்லை, தவறைக் கண்டிப்பதில்லை... இதனால் சபையில் கிறிஸ்துவின் ஆளுகையே இல்லாமல் போயிற்று.

38. மூகஸ்துதி செய்கிறவர்களை, சபையில் ஆவிக்கு உரிய அதிகாரம் பெற்றிருக்கிறவர்கள் பின்பற்றி னால் இது மிகச் சாதாரணமாகப் பரவி வருகிற தொற்று வியாதி. இவர்களை யாரும் காப்பாற்ற முடியாது. இவர்களை, இவர்களே காத்துக் கொள்ளவும் முடியாது. □

சாத்தான்

---

1. சாத்தான் உலகத்தின் அதிபதியாக இருப்பதுடன் திருப்தி அடைவதில்லை. கடவுளின் பிள்ளைகளின் தலைவன் ஆவதைத்தான் சாத்தான் விரும்புகிறான்.

2. சபைகளின் பழக்க வழங்கங்களில், கலாச்சாரங்களில் முரண்பாடுகளில் சாத்தான் நுழைந்து விடுகின்றான்.

3. விசுவாசத்திலும், ஆவியிலும் பிரிவினையை உண்டாக்குவது, சாத்தானின் 'ஸ்டைல்'. இப்படிச்செய்து பலவகையான கள்ளப் போதகங்களை சாத்தான் உருவாக்கி விடுகிறான்.

4. வல்லமையுள்ள தேவனே!... இருதயக் குருட்டுத் தனத்தை அவரிடமிருந்து விரட்டி விடும். சாத்தானின் சகலவிதக் கட்டுகளிலிருந்தும் அவரை அவிழ்த்துவிடும்.

5. சாத்தானை-கடவுளாக்கும், கடவுளை-சாத்தானாக்கும் எந்த ஒரு பாவத்திற்கும்; சிறியது, பெரியது, மகா பெரிது என்று அளவு கூற முடியாது,

6. சாத்தானும், உலகமும், தங்கள் வெளித் தோற்றத்தால் உங்களை ஏமாற்றிட முயற்சிக்கலாம்... இந்த தோற்றம் கொஞ்ச காலம் இருக்கலாம்! முடிவில் ஒன்று இல்லாமல் போய்விடும்.

7. கடவுளின் கலப்படமற்ற வசனத்தை விட்டுவிட்டு, பிசாசின் பொய்க்கும் பகட்டுக்கு வழி தவறி போய் விடாதீர்கள்.

8. நீங்கள் அறியாத நேரத்தில் பிசாசு உங்கள் மேல் பாய்ந்து உங்கள் உள்ளத்தில் விசுவாசத்தையும் தீய எண்ணங்களையும் உருவாக்கிட... பிசாசு பதுங்கி இருந்து இரவும் பகலும் முயற்சி செய்து கொண்டே இருக்கிறான்.

9. திருவசனத்தைக் கேட்டு, எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தவர்களாக இருந்தாலும்... நாள் தோறும்

நீங்கள் பிசாசின் ஆட்சிக்குக்கீழ்ப்பட்டவர்களாகவும் இருக்கிறீர்கள்.

10. நாம் நினைக்காத நேரத்தில், திடீரென்று நம்மேல் பிசாசு பாய்ந்து, கடவுளின் வசனத்தை நம்மிடமிருந்து பிடுங்கிவிடுவான்.

11. சாத்தானுக்கு எதிர்த்து நிற்க, தீங்கு எதையும் அவன் செய்யாதிருக்க, கடவுளின் புனித பெயரை, நமது உதடுகள் எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

12. திருவசனம் கேட்க சோம்பல் உள்ளவரா நீங்கள்? உங்கள் உள்ளத்தில் (எப்படியாகிலும்) சாத்தான் வளைந்து நெளிந்து நெரித்து நுழைந்து விடுவான். நீங்கள் சுதாரித்துக் கொள்வதற்கு முன்பே, உங்களுக்குச் சேதம் உண்டாக்கி விடுவான் சாத்தான்.

13. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு நீங்கள் தீமை செய்வது என்பது மனித குணமல்ல! இது பேய்க் குணம்!

14. பத்துக் கற்பனைகள், கற்பிப்பதைக் காட்டிலும், உயர்ந்ததும் சிறந்ததுமான ஒரு வாழ்க்கைமுறையை கண்டுபிடிப்பேன் என்பது... பேய்த் தனமான வரம்பு மீறல்.

15. இதற்கு முன்பு நான் பிசாசின் கைதியாகஇருந்தேன். இயேசு எனது 'ஆண்டவராகி'... பிசாசினிடமிருந்தும், என்னை மீட்டுக் கொண்டார்.

16. பிசாசை விட்டு, கடவுளிடமும் மரணத்தை விட்டு, ஜீவனுக்கும் பாவத்தைவிட்டு. தேவநீதிக்கும், நம்மை கொண்டு வருகிறவரே, நம்மை 'ஆண்டு கொள்கிற இயேசு கிறிஸ்து.

17. சாத்தான் நமது முயற்சிகளை ஏகமாக எதிர்க்கிறான் ஆகவே இடைவிடாமல் கடவுளைக் கூப்பிட்டு, நமது ஜெபங்களை அவர் காதுகளில் முழக்குவோம்!

18. விசுவாசிகளின் ஜெபத்தால், தனக்கு ஏற்படக் கூடிய இழப்பையும் தீமையையும் சாத்தான் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறான். ஆகவே நமது ஜெப வாழ்வை சீர்குலைத்திட சாத்தான் விழிப்புடன் முயற்சி செய்து கொண்டே இருக்கிறான்.

19. பிசாசின் ஆளுகை இறுதியில் முற்றிலுமாக அழிக்கப் பட்டு, வேர் அறுக்கப்படும் வரைக்கும் நம்மிடம் கடவுளின் அரசு வந்து கொண்டே இருக்க வேண்டும்.

20. 'அன்புள்ள பரம தந்தையே' என்று நாம் பரமனை விசுவாசத்துடன் அழைக்கும்போது, "ஆகட்டும் குழந்தை பிசாசும் உலகமும் (உனக்கு எதிராக இருந் தாலும்) எனது சித்தம் செய்யப்படுவது உறுதி" என்கிறார் கடவுள்.

21. நம்மையும் சுவிசேஷத்தையும் நசுக்கி ஒழித்து விடலாம் என்று நினைந்து நமது பகைஞரின் சதி ஆலோசனைகளையும் சதித் திட்டங்களையும், சாத்தான் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறான்.

22. கடவுளின் பிள்ளைகள் என்ற அந்தஸ்தில் பேசி போதித்து கற்றுக் கொண்டு வாழத் தவறியதின் விளைவாக நமக்கு 'பிசாசின் பிள்ளைகள்' என்ற பெயர் வழங்கப்படுமாயின் நம்மால் கடவுளின் பெயர் இகழப்படுகிறது.

23. யாரும் சரியாகப் போதிப்பதையும், சரியாகப் புரிந்து கொள்வதையும், சரியாக நம்புவதையும் சாத்தா னால்... சகித்துக் கொள்ளவே முடியாது!

24. சாத்தான்: உலகத்தையும் நமது உடல் இச்சைகளை (மாமிசம்) கூட்டுச் சேர்த்துக் கொண்டு, தனது முழு ஆற்றலுடன் சீற்றங் கொண்டு பிதற்றித் திரிகிறான்.

25. கடவுளின் வசனத்தை இழிவாக மதிக்க கடவுளின் செயல்களை ஏளனம் செய்ய நாத்தீகம், இறைப் பழிப்பு போன்ற வெறுக்கத் தக்க பாவங்களுக்குள் நம்மைக் கொண்டு சேர்க்க; பிசாசு, தனது முழு ஆற்றலையும் பயன்படுத்துகிறான்.

26. பிசாசு தூரத்தில் இருக்கிறான் என்று நினைத்து... கவனமில்லாமல் வாழ்ந்துவிடக் கூடாது. கற்பு பொறுமை விசுவாசம் போன்றவற்றைத் தாக்க; ஓர் அம்பை எப்பொழுதும் அவன் எய்துவிடக்கூடும்

27. பிசாசு களைப்படையாத பகைவன் ஒரு தாக்குதல் தீர்ந்துவிட்டால், புதிய தாக்குதலைத் தொடருவான்.

28. பிசாசின் தலை‘ பாம்புத் தலை! உள்ளே நுழையக் கூடிய ஒரு சிறிய ஓட்டை அவனுக்குக் கிடைத்தாலே போதும் உடம்பு முழுவதையும் உள்ளே நுழைத்து விடுவான்.

29. பிசாசின் ராஜ்யத்தின் கீழ், கிடைக்கக் கூடியது எதுவும் நன்மை இல்லை. அத்தனையும் தீமையே! □

சாவு

1. ஒருபுறத்துக் கள்வன், (இயேசுவுடன் சிலுவையில் பொறுமை இழந்தான். மறுபக்கத்தில் இருந்தவன் பொறுமையுடன் இயேசுவை நம்பினான் இவன் சாவிலிருந்து வெற்றி பெற்றான்.

2. சாவு என்பது மோசேயின் வெண்கலச் சர்ப்பம் போன்றது இது உருவத்தில் பாம்பாக இருக்கும் ஆனால் கொத்தாது. இதற்கு விஷமும் இல்லை.

3. கிறிஸ்வர்களுக் சாவு என்பது செத்தது!

4. மரணத்தைச் சிலர், பெரிய தீமையாக நினைக் கிறார்கள் ஆனால் கிறிஸ்தவர்களுக்கு மரணம் என்பதே பெரிய ஆதாரம் ஆகிவிடுகிறது

5' துன்பங்கள், விடுதலையில் துவக்கம் சாவு (நித்திய மான) வாழ்வின் ஆரம்பம்!

6. மரணத்தினால், இந்த உலகத் தொல்லைகள் எல்லாம் ஒரு முடிவுக்கு வருகிறதே! ஆகவே சாவு மனிதனுக்கு நல்லதுதான்!

7. சாவோ வாழ்வோ, இரண்டுமே கிறிஸ்தவனுக்கு ஆசீர்வதிக்கப் பட்டவைகள் தான். இயேசு கிறிஸ் துவை விசுவாசிப்பதால் கிறிஸ்துவனுக்கும் கிடைத் திருக்கிற மேன்மை இது.

8. (தம்மை நம்புகிறவர்களுக்கு) கடவுள் சாவைக்கூட பெரிய ஒரு ஆதாயம் ஆக்கியிருக்கிறார்!

9. விசுவாசியைப் பொருத்த வரைக்கும், சாவு ஏற்கனவே (கிறிஸ்துவில்) செத்துவிட்டது. பயமுறுத் துகிற முகமூடிக்குப் பின்னால் சாவிடம் ஒன்றுமே இல்லை.

10. மேசே வெண்கலப் பாம்பை உயர்த்தினான். வனாந் திரத்தில்! இஸ்ரவேலரைக் கடித்த உயிருள்ள பாம்பு கள் செத்து மடிந்தன. இதுபோலத்தான் கிறிஸ்து சிலுவையில் உயர்த்தப்பட்டார்; சாவு செத்து விழ்ந்தது.

11. பாவத்திற்கும், பாவத்தின் பலாபலன்களுக்கும் பாவத்தின் தொடர்ச்சிக்கும் சாவு ஒரு முற்றுப்புள்ளி ஆகிறது.

12. பாவத்தின் வேதனைகளிலிருந்து, மரணம் நம்மை அறுத்து விடுகிறது. ஆகவே 'விடுதலை' செய்கிற 'மரணம்' நல்லதுதான்!

13. மரணம், பாவத்தின் தண்டனைதான். ஆனால் பாவத்திற்கு முடிவு கட்டுவதும் மரணம் தான். நித்திய வாழ்வின் வாசலில் நம்மைக் கொண்டே நிறுத்துவதும் மரணம் தான்.

14. ஆதாம் பாவம் செய்தான். பாவத்திற்கு தண்டனையாக, ஆதாமுக்கு சாவு வழங்கப்பட்டது. ஆனால். சாவு ஆதாமைத் தொடுவதற்கு முன்புஏதேனிலிருந்து ஆதாம் வெளியேற்றப்பட்டான். சாவு தீமையல்ல, என்பதற்கு (இதை விட வேறு) விளக்கம் தேவையில்லை.

15. 'பாம்பு' பாம்பினால் கடிபட்டுச் சாகும்' என்பர்! அது போலவே, பாவம், பாவத்தின் பலனாம் சாவினால் மரணிக்கிறது.

16. சாவிலேயே மிகப்பெரிய ஆசீர்வாதங்கள் நமக்கு அடங்கியிருக்கிறது என்றால்...பிற தீமைகள் நம்மை உபத்திரவம் செய்யமுடியுமா?

17, ஒவ்வொரு மனிதனும்; தானாக தனியாகத்தான், தனது மரணத்துடன் போராட வேண்டும். நமது சாவைச் சந்திக்க நாம் ஆயத்தம் ஆக வேண்டும்!

சுவிசேஷம்

1. சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடிவெடுத்தாலொழிய (இளைஞரே) நீங்கள் யாரும் 'குரு' பதவி ஏற்க வேண்டாம்.

2. தேவ மகிமை, தேவ கிருபை இவற்றை மிகத் தூய் மையாகப் (பிரசங்கிக்கிற) சுவிசேஷமே, திருச் சபையில் அழியாத செல்வம்!

3. ஒரு பேராயர். சுவிசேஷத்தைப் பிரசங்கியாமலும், ஆத்தும ஆதாயத்தை பயிற்சி செய்யாமலும் போனால், பேராயர் என்று பெயர் பெற்றிருந் தாலும் அவர் ஒரு கற் சிலை தான்!

4. இயேசுவைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சிலர் இயேசுவின் சுவிசேஷத்தை—ஆசிகளை விளக்கிப் பிரசங்கிக்கிறார்கள்.

5. திருச்சபைத் தலைவர்கள்—பிரசங்கிகள் சிலர் கிறிஸ் துவின் (சுவிசேஷத்தின்) குரலை எழுப்பாமல், தங்கள் சொந்தக் குரலை உயர்த்துகிறார்கள். தங்கள் குரல் கேட்கப்பட வேண்டுமென்றும் நினைக் கிறார்கள்!

6. சுவிசேஷத்தின் குரலை எழுப்புவதற்காகத்தான், கடவுள் சுவிசேஷத்தை அனுப்பினார். ஆனால்

கிறிஸ்துவின் குரலை எழுப்பாமல், ஊழியர்கள் சிலர் தங்கள் சொந்தக் குரலை உயர்த்துகிறார்கள்.

7. இயேசுவின் வரலாற்றை மட்டும் சொல்லுவது சுவிசேஷப் பிரசங்கம் அல்லவே அல்ல! இதனால் தேவன் மகிமைப் படப்போகிறதில்லை.

8. தேவ வசனத்தில் இடம் பெறாத தூயர்களைப் புகழ்ந்து ஆராதனை செய்வது, ஆபத்தானது!

9. கிறிஸ்து நிரூவியதை, நமது வசதிக்கு ஏற்ப மாற்றினால் கிறிஸ்துவின் சுவிசேஷம்—அருள் நெறி மாற்றப்படுகிறதே!

10. (பழைய ஏற்பாடு) பழைய துணி, அற்பமானதாகத் தெரியலாம். ஆனால் இது பெரிய பொக்கிஷம்! பழைய ஏற்பாட்டில், இயேசு—சுவிசேஷம், படுத்திருக்கிறார்.

11. கடந்த காலத்தில் நடந்த கதைகள் என்று நினைத்து பலர் பழைய ஏற்பாட்டை குறைத்து மதிப்பிடுகிறார்கள்.

12. லூக்கா எழுதிய முதல் அத்தியாயத்தின்படி, துவக்க காலத்தில் அனேகர் சுவிசேஷம் எழுதியிருக்கிறார்கள். ஒருவரைத் தவிர மிச்சம் எல்லாரும், தாங்கள் எழுதின சுவிசேஷத்தில் சுத்தமான சுவிசேஷத்தைத் தொலைத்து விட்டார்கள்.

13. சுவிசேஷம் (காஸ்பல்) என்பது ஒரு கிரேக்கச் சொல் பாட்டுப் பாடி, மிக மகிழ்ச்சியுடன் சொல்லுகிற 'ஒரு நல்ல செய்தி—நல் வாழ்த்து—நல்ல ரிப்போர்ட்' என்று அர்த்தம் தருகிற சொல் இது.

14. பாவம்—சாவு—சாத்தான் இவை சொல்லப்பட்டதை, அப்போஸ்தவர் கதைகதையாகச் சொல்லி விளக்கந் தருவதே சுவிசேஷம்.

15, இயேசுவை கடவுளின் குமாரனை மெய்யான மனிதனும் கடவுளுமானவரைப் பிரசங்கிப்பதே சுவிசேஷம்.

16. சுவிசேஷத்துக்கு எதிராக 'கிராக்டக்' என்று கர கரக்கும் தவளைகளால் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது.

17. சுவிசேஷம் — விசுவாசம்—திரு அருட்சாதனங்கள் பற்றி, சிலர் தங்கள் விருப்பம்போல விளக்கம் தரத் துவங்கியதால்...எல்லாம் குழம்பிக் கிடக்கிறது.

18. திருமுழுக்கைத் தள்ளி விடுகிறவன்; கடவுளின் சுவிசேஷத்தையும், விசுவாசத்தையும், கிறீஸ்துவோடு நம்மைப் பிணைக்கும் கிருபையையும், தள்ளி விடுகிறான்.

19. மனிதனின் தராதரத்தை, இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஆவிக்கு உரியவன்—சரீரத்துக்கு உரியவன்! மனிதத்தன்மையை, ஆவி—உடல்—மனம் என்றும் பிரிக்கலாம்! இந்த மூன்றுமே பாவச் சார்புடையது தான்.

20. சுவிசேஷம் வீறு கொண்டு எழுந்தால், உலகம் முழுவதும் கேட்கப்படச் செய்தால், உலகத்தில் சிறிதளவாவது அசைவும் மாற்றமும் உண்டாகும் என்பது உறுதி.

□

திருமணம்

1. 'நாட்டுக்குத் தக்கது கலாச்சாரம்'' 'என்பது பழமொழி! திருமண வைபவத்தில், அந்தந்த இடத்தின் கலாச்சாரத்தைப் பயன்படுத்த ஒப்புக்கொள்ள வேண்டும்.

2. கணவனின் பொருட்களை, மனைவி வீணாக்கி விடுகிறாள்! தன் மனைவியின் உடலையும், வாழ்க்கையையும் கணவன் வீணாக்குவது என்பது முந்தியதைவிடவும் பெரிய பாவம், துரோகம்.

3. மனைவி; கற்பிழந்துபோக, கணவனே காரணமாக இருந்தால், கணவன் தான் குற்றவாளி.

4. விவாகரத்தை நான் எதிர்க்கிறேன். இதைவிட. இருதாரம் உள்ளவராக இருக்கலாமோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது!

5. சிலர், நெருப்பில் காய்ந்த கட்டையைப் போட்டு விட்டு (ஆண்-பெண்), அதை எரிக்காதே என்கிறார்கள்.

6. திருமணத்தைத் தவிர்த்து, துறவு பூண்டவர்களில் ஒரு சிலரைத் தவிர; மற்றவர்களின் வாழ்க்கை வெளி வேஷமும், நடிப்பும், மாய்மாலமுமாக இருக்கிறது.

7. 'கடவுள்' தனக்குக் கொடுத்த வாழ்க்கைத்துணை மனைவி என்று கணவன் நினைக்கவேண்டும். 'கணவன், எனக்கு கடவுள் கொடுத்த தலை' என்று மனைவி நினைக்க வேண்டும்.

8. திருமணம் ஆனவர், கெட்ட ஆசைகளிலிருந்து விடுபட, நல்ல உடல் உழைப்பில் ஈடுபட்டு, மட்டாக உண்ண வேண்டும்.

9. நினைவு, சொல், ஆசை, செயல்... எல்லாவற்றிலும் கற்பும் ஒழுக்கமுமாக வாழுவதே உயர்வான திருமண வாழ்வு.

10 ஓர் ஆணையும், ஒரு பெண்ணையும்; சாகும் வரைக்கும் ஒரே உடலாக இணைக்க, கடவுள் ஏற்படுத்திய ஏற்பாடுதான், திருமணம் என்ற அன்பின் உறவு.

11. கற்புக் கேட்டுக்கு, இழுத்து மாட்டி விடக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்து, விலகி வாழப் பழகிடுக!

12. விபசாரத்தில் ஈடுபட்டு, இக்குற்றத்தில் அகப்பட்ட வரைத் விவாகரத்து செய்து தள்ளிவிட மற்றவருக்கு (தம்பதிகளில், பாதிக்கப்பட்டவர்) கடவுள் அனுமதி கொடுத்திருக்கிறார்.

13. திருமணத்திற்குப் பின்பு; பிள்ளைகளுக்கு கடவுளின் பிரதிநிதியாக இருக்க, பெற்றோரை கடவுள் நியமித் திருக்கிறார்.

14. திருமணமானவர்களுக்கு, எல்லா நிலைகளிலும் மேலான தனிச் சிறப்பைக் கடவுள் கொடுத்திருக் கிறார்.

15. திருமணத்தில், ஆணும்-பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் வாக்கு கொடுத்துவிட்டு; பின்பு, இதை மறுத்து ஒதுக்குகிறபோது, கடவுளில் பெயர் வீணாகப் பயன்படுத்தப்படும் (பாவத்திற்கு) இடம் தருகிறார்கள்.

16. தங்கள் பிள்ளைகளை... தேவ பக்தியுள்ளவர்களாக வளர்த்து நன்நெறியில் வாழ்ந்து, வீட்டைச் செம்மை யாக நடத்துகிற மனைவி நமக்கு (தேவை)...

17. யாருக்கும் எந்த நன்மையும் செய்யவேண்டாம், எந்தத் தொல்லைக்கும் உட்படவேண்டாம் என்று நினைத்து (திருமணம்-குடும்பம்) வெறுத்து; துறவு பூணுவது என்பது வாழ்க்கைக்குப் பயந்து ஓடுவ தாகும்!

18. திருமணத்தைத் தவிர்க்கிற நிலை; வேசித்தனத் திற்கும் கற்பின்மைக்கும் இடம் கொடுக்கும்.

19. உள்ளம், உதடு, முழு உடல் ஆகியவை கற்புள்ள தாகவும், கற்பின்மைக்கு இடங் கொடுக்காததாகவும் தம்பதியர் வாழ வேண்டும்.

20. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கற்புள்ளவராக வாழ்வதுடன்; அடுத்தவர்களும் கற்புள்ளவராக வாழ்ந்து வருவதற்கு உதவி செய்வதும் அவசியம்.

21. கடவுள் தனது பத்துக் கட்டளைகளில் மண வாழ்க்கைக்கு-உரிமையும் பாதுகாப்பும்-அளிக்கிறார். கடவுள் மணவாழ்க்கையை எவ்வளவு உயர்ந்ததாகக் கருதுகிறார் என்று அறிக!

22. மணவாழ்வு என்பது; வேடிக்கைக்கோ, சோம்பேறித் தனத்திற்கோ, (பால் அறிவை) உணருவதற்

காகவோ, கடவுள் ஏற்படுத்திய ஏற்பாடு அல்லவே அல்ல.

23. உள்ளத்தில் கற்பில்லாத எண்ணங்களும், தீய ஆசைகளும், மறைவான மன எழுச்சியும், திருமணத்தைத் தவிர்க்கிற துறவு வாழ்க்கையைத் தாக்குகிறது.

24. கற்பின்மையை ஓரளவாவது தவிர்ப்பதற்காகத் தான், மனிதருக்குக் கடவுள்... திருமண ஏற்பாட்டைத் தந்திருக்கிறார்.

25. திருமணம் என்பது ஒரு சாக்கிரமந்து அல்ல, கிறிஸ்தவர் அல்லாதவரும் திருமணம் செய்து கொள்ளுகிறார்களே!

26. திருமணத்தினால்... ஒரு ஆண் 'தகப்பனையும் தாயையையும் விட்டு, தன் மனைவியோடு இசைந்திருப்பாள்' என்று வேதம் கூறுகிறது... ஆகவே இசைந்திருக்க, தேவையற்ற 'மனிதச் சட்டங்களை' விட்டுவிடுவது தவறு அல்ல.

27. 'கடவுள் இணைததது' என்பதில், ஓர் ஆணும் பெண்ணும் (ஒழுக்கமாக) இணைக்கப்படுவது கடவுளின் சித்தம் என்றால்... இதற்கு எதிரான மனிதச் சட்டங்களிலிருந்து எந்தத் தயக்கமும் இல்லாமல் இவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

28, பெற்றோரிடம் கடவுள் ஒப்புவித்த (கடவுளின் சுதந்திரமான) பிள்ளைகளைக் குறித்து, கணக்குக் கேட்பார் கடவுள்.

29. ஆசீர்வதிக்கப்பட்ட, திருமணம் - குடும்பம் - பெற்றோர்... ஒரு முன் மாதிரியான சபை, ஒரு முன் மாதிரியான சபை, ஒரு மோட்சம்.

30. பெற்றோர் தங்கள குழந்தைகளை. தேவனுக்குப் பயந்த வாழ்வில் வளர்த்து வரத்துவங்கினால்... இரண்டு கைகளும் கொள்ளாத அளவுக்கு நல்ல செயல் செய்ய வாய்ப்பு இருக்கிறது.

31. புருஷன், மனைவியை முழுமையாக நேசித்து; மிகக் கடுமையாக நடந்து கொள்ளாமல்... சிறிய தவறு களை மனைவி செய்யும்போது, கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். □

திரு அருட்சாதனம்

1. விளக்கிச் சொல்ல சங்கடம் உண்டாக்குவதும், தவறான விளக்கங்களுக்கு ஒத்துப்போகாததும். திரு அருட்சாதனங்கள்—சாக்கிரமெந்துகள்.

2. நமக்காக இயேசு ஞானஸ்னானம் பெற்றார். ஆகவே, இயேசுவின் ஞானஸ்னானம் என்னுடைய தாகிறது...என்னுடைய திருமுழுக்கு, இயேசுவின் திருமுழுக்கு ஆகிறதே!

3. 'ஒரே ஞானஸ்னானம்' என்று வேதம் சொல்வது நமக்குத் தெரியும். இதனால் உனது ஞானஸ்னானம் இயேசுவின் ஞானஸ்னானம் ஆகிறது. இயேசுவின் ஞானஸ்னானம், உனது ஞானஸ்னானம் ஆகிறது.

4. தண்ணீரில் மூழ்கி ஞானஸ்னானம் கொடுப்பதை நான் விரும்புகிறேன். ஆனால், இப்படித்தான் கொடுக்க வேண்டுமென்று கட்டாமில்லை.

5. திருமுழுக்கு கிருபையின் வெள்ளம் உலகத்திலுள்ள எல்லா மக்களையும் இழுத்துச் செல்லும் கிருபையின் வெள்ளம்.

6. நாம் மனிதக் கைகளால் திருமுழுக்கு பெற்றாலும் அது மனிதனின் திருமுழுக்கு அல்ல! கிறிஸ்துவின்—கடவுளின் திருமுழுக்கு அது! கடவுளின் கரத்தினால் தான் நாம் திருமுழுக்கு பெறுகிறோம்.

7. திருமுழுக்கின் வல்லமை, அதைக் கொடுப்பவரைப் பொருத்தோ, அதைப் பெறுகிறவரின் விசுவாசத்தைப் பொருத்தோ, அமைவதில்லை.

8. திருமுழுக்கு பெறுகின்ற நிகழ்ச்சி சில நிமிடங்களில் முடிந்து விடுகிறது. இதன் பலன்—ஆசீர்வாதம் நமது மரணம் வரைக்கும் மட்டுமல்ல. உயிர்தெழல் வரைக்கும் தொடருகிறது!

9. திருமுழுக்கின் போது, நம்மேல் உச்சரிக்கப்படுகிற தேவ வாக்குறுதியின் பலபலன், நமது மரணம் வரை (உயிர்ப்பு வரை) நீடிக்கிறது.

10. திருமுழுக்கில் சொல்லப்படுகிற தேவ வசனம், சிறு குழந்தையை மட்டுமல்ல விசுவாசம் இல்லாத மனிதனையும் மாற்றுகிற வல்லமை பெற்றிருக்கிறது.

11. சிறு குழந்தையை திருமுழுக்கிற்குக் கொண்டுவருகிற சபையாரின் ஜெபத்தினால், அந்த ஜெபத்தில் வெளிப்படும் விசுவாசத்தினால்...தேவ கிருபைக்கு உள்ளாகி, குழந்தை மாற்றம் அடைந்து, சுத்திகரிக்கப்பட்டு, புதுப்பிக்கப்படுகிறது.

12. திருமுழுக்கு என்கிற திருச்செயலில், கடவுள் தமது தோழமையை மனிதனுக்குத் தருகிறார்.

13. ஞானஸ்னானத்தைவிட, மனிதனுக்கு உலகில் ஆறுதலைத் தருகிறது வேறு எதுவுமே இல்லை எனலாம்.

14. ஞானஸ்னானம் பெற்றிருக்கிற ஒருவரை; 'இவர் குற்றவாளி' என்று பாவத்தினால் தீர்ப்புக்கூற முடியாது.

15. பகட்டாகப் பேசுகிற, தலைவர்கள் தங்கள் பொல்லாத கருத்துகளால்...நிதானிக்கச் சக்தியற்றவர்களை, தங்கள் திருமுழுக்கையே மறந்து போக வைத்துவிட்டார்கள்.

16. கர்த்தருடைய பெயரில் திருமுழுக்கு பெற்றவர்கள் எல்லாருமே சம உரிமை பெற்ற குருக்கள்—ஆச்சாரியர்கள் என்பேன்.

17. ஞானஸ்னானத்தில், நாம் முழுமையாக பரிசுத்தர் ஆகிவிட்டோம் என்று நினைப்பது தவறு.

18. திருவிருந்து இயேசுவால் நிருவப்பட்டது. இயேசு பயன்படுத்தியது. இயேசுவால் பரிமாறப்பட்டது. எந்த மாற்றமும் இல்லாமல் அப்போஸ்தலராலும் பயன்படுத்தப்பட்டது. ஆகவே, திருவிருந்தில் எந்த வகையான புதிய கண்டுபிடிப்புகளுக்கு சேர்க்கப்பட அவசியமில்லை.

19. திருவிருந்தில் நீ உண்ணுகிற திருஉடலும், கேட்கிற திருவசனமும்; எங்கும் நிறைந்த முழு உலகையும் தனது கரத்தில் வைத்திருக்கிற (கர்த்தருக்கே) உரியது.

20. தண்ணீர் கலக்காத திராட்சைப் பழ இரசம்; அழகான சுத்தமான, கலப்படமில்லாத சுவிசேஷத்துக்கு உவமையாக எனக்குத் தெரிகிறது.

21. திருமுழுக்கு பெற வருகிறவரின் விபரங்கள் குருவான வருக்கு, முன்பே விளக்கி அறிவிக்கப்படுகிறது. இதுபோல, திருவிருந்து பெறுவோரின் பெயர், விபரம், வாழ்க்கை, ஒழுக்கம் போன்றவற்றை குருவானவர் அறிந்திருப்பதும் அவசியம்.

22. இராப்போஜனம், திருவிருந்து என்று பல பெயர் களில் இந்த சாக்கிரமெந்து அழைக்கப்படுகிறது. ஆனால், இது மனிதர் ஏரெடுக்கும் 'திருப்பலி' அல்லவே அல்ல! அப்படியானால் இது மனிதச் செயல் என்றாகிவிடுமே! திருப்பலி என்று சொல் லாதீர்.

23. திருவிருந்துக்கு முன்பு, தனிப்பாவ அறிக்கை ஒரு கட்டாய நியதி அல்ல! இயேசு ஆண்டவர் தனது முதல் திருவிருந்தில் 'பாவ அறிக்கை' பயன்படுத்த வில்லையே!

24. கிறுக்குத்தனமுள்ள, குடித்து வெறித்த ஒருவர் ஞானஸ்னானம் கொடுக்கக் கூடாது! ஒழுக்கமற்ற வர்கள் ஞானப்பெற்றோராகவும் இருக்கக்கூடாது!

25. ஞானஸ்னானத்தின் மூலம், ஒவ்வொரு கிறிஸ்தவ னுக்கும் வழங்கப்பட்டிருக்கிற ஆசாரித்துவத்திற்கு மிஞ்சிய ஆசாரித்துவம் வேறு எதுவுமே இல்லை.

26. ஞானஸ்னானம் பெற்றவர், 'பரிசுத்தர் ஆகிடத் துவங்கியிருக்கிறார். ஞானஸ்னானம் இவரை பரிசுத்தர் ஆக்கிக் கொண்டேயிருக்கிறது.

27. திருமுழுக்கு பெற்றவன் விசுவாசிக்கிறானா இல்லையா என்பது முக்கியம் இல்லை. விசுவாசம் இல்லாவிட்டாலும் திருமுழுக்கு செல்லும்! திருமுழுக் கில் சொல்லப்படுகிற தேவ வசனத்தில் தான் ஆற்றல் எல்லாம் அடங்கியிருக்கிறது.

28. குழந்தைகள் விசுவாசியாகிவிட்டாலும் அவர்கள் பெற்ற திருமுழுக்கு செல்லுபடியாகும். கிறிஸ்துவின் வசனத்தினால் இப்படி ஆகிறது.

29. 'எனது விசுவாசம்' திருமுழுக்கின் பலனைப் பெற்றுக் கொள்கிறது...என் விசுவாசம் திருமுழுக்கின் பலாபலனை உண்டாக்கித் தருகிறது என்பது தவறு.

30. திருமுழுக்கு, நமது விசுவாசத்திற்கல்ல; கடவுளின் வசனத்திற்கே கட்டுப்பட்டிருக்கிறது.

31. 'தவறான பயன்படுத்தல் அந்தப் பொருளை இல்லாமல் ஆக்குவதில்லை' என்ற கூற்று குழந்தை ஞானஸ்னானத்துக்கும் பொருந்துகிறது.

32. வானமும் பூமியும் புரிந்து கொள்ள முடியாத அளவு; திருமுழுக்கு, ஆறுதலினாலும், அருளினாலும் நிறைந்திருக்கிறது...திருமுழுக்கின் நலன்கள் வரையறை அற்றவை.

தேவவசனம்

---

1. எனது வாயின் வார்த்தைக்கும், நீங்கள் பேசுகிற பேச்சுக்கும் முற்றிலும் வித்தியாசமான வலு உள்ளது தேவவசனம்.

2. கடவுளின் வசனத்தைவிட, மனிதரின் சொற்களை அதிகமாக நம்புகிறீர்களே... இது உன்னதமான கடவுளையே மறுதலிப்பதாகும்.

3. எனக்கு எந்தத்தகுதியும் இல்லை, எனக்குத் தேவையான (பக்தி) உணர்வு இல்லை என்ற எண்ணத்தை

எதிர்கொள்ள-முறியடிக்க... நமது நினைவுகள் தேவ வசனத்தில் நிலை பெறட்டும்.

4. ஆற்றல் நிறைந்த இறை வாக்குக்கும், அதன் திட்டத்திற்கும், எதிராக இருக்கிறவர்கள் மனிதரின் கனவு மூளைகளை எதிர்க்கிறவர்கள்-கள்ளப்போதகர்கள்', என்று இகழப் படுகிறார்கள்.

5. சொந்த பலவீனங்களைப் பார்த்து (சோர்ந்து போகும்) போக்கு நிறுத்தப்பட, நமது இருதயம் தேவ வசனத்தையே சிந்திக்கட்டும்.

6. தேவவசனத்துக்கும், வேத ஆதாரத்துக்கும் எதிராக; மனிதரோ, தேவ தூதரோ வன்முறைச் செயல் புரிய முடியாது!

7. தேவ வசனத்தின் சூழ்நிலை, அமைப்பு, இலக்கணம், உட்கருத்து ஆகியவற்றை கவனமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இல்லை என்றால் எதிராளிகள் எள்ளி நகையாடுவர்.

8. நெருப்புடன் இரும்பு இணைந்து விட்டால், உலையில் எரிகிறது. தேவ வசனத்தின் வல்லமை, மனித இருதயத்தையும் வல்லமைப் படுத்துகிறது.

9. தேவ சத்தியம் தவிர்... வேறு எந்தக் காரியத்திலும், எந்த மனுஷனுக்கும் நான் விட்டுக் கொடுப்பேன்.

10. உயிருள்ளது, உண்மையானது, ஒளியுள்ளது, அமைதி தருவது, நீதியானது; பெரிய மீட்பு, பெரிய மகிழ்ச்சி, விடுதலை, ஞானம், அருள், ஆற்றல், மாண்பு... (இப்படி) கணக்கிட முடியாத அனைத்து நலன்களையும் உள்ளடக்கியது தேவவார்த்தை.

11. உண்மையான தேவ வசனப் போதனைக்கு... எதிர்த்து நிற்கிற பன்றிகளுக்கு எதிராக உனது

முரட்டுத்தனத்தைக் காட்டாதே! கடவுள், அவர்களுக்கு மனந்திரும்பும் ஆவியைத் தரட்டும்.

12. ஒப்புவமை செய்து, தேவ வசனத்தை விளக்குவது ஒருவகை விளையாட்டு! இது தேவ வசன வியாக்கியானம் அல்லவே அல்ல!

13. நேரம் வீணாக்கப்படுகிறது! வேதாகமப்படிப்பு உதாசீனம் செய்யப்படுகிறது...' தெய்வீகவார்த்தை' என்ற உணர்வு இல்லாமற் போகிறது. வேதாகமமே, கட்டிலுக்குக்கீழே, குப்பையில் மறைந்து கிடக்கிறது.

14. அழகிய தோட்டத்தில், அழுக்குப் பன்றி படுத்து உருண்டு குழி பறிப்பது போல; வேதாகமத்தை, சிலர் தங்களுக்கு இஷ்டமான முறையில் வியாக்கியானிக்கிறார்கள்.

15. கடவுளின் வசனம் இல்லாமல், எந்தத் திருநாளும்-எந்தச் செயலும், தூய்மை ஆக்கப் படுவதில்லை.

16. திருச்சபையை, இதுநாள்வரைக்கும் பத்திரமாகப் பாதுகாத்து வருவது வேதாகமம் தான்.

17. கடவுளின் வசனமே, எல்லா வகையான புனிதப் பொருட்களிலும் சிறந்த, உண்மையான புனிதப் பொருள்.

18. கடவுளின் திருவசனத்தை, பொது நிகழ்ச்சியாக-பொழுது போக்கு நிகழ்ச்சியாகக் கேட்கிறவர்கள், பெருந்திரளாகக் கூடி நின்று கடவுளின் வசனத்தை மீறுகிறார்கள்.

19. எல்லாப் பொருட்களையும் தூய்மைப் படுத்துகிற அரிய பொக்கிஷம் திரு வசனந்தான்.

20. கடவுளின் வசனத்தைச் சொந்தமாக்கியிருக்கிறவனுக்கு, எல்லாவற்றையும் படைத்த கடவுளே சொந்தமாகியிருக்கிறார்!

21. 'நாகரீகம் தெரியாத ஓர் உளறு வாயனின் பேச்சு' என்கிறது போல; கடவுளின் வசனமும், கட்டளையும் இகழப்படுகின்றன.

22. இங்கேயும், மறுமையிலும்; இன்பம், இரட்சிப்பு, அன்பு ஆகியவற்றை அடைய, கடவுளின் வசனத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

23. தேவ வசனத்தைக் கேட்கிறவர்கள், அவற்றைத் திருப்பிச் சொன்னால் போதும் என்று கடவுள் நினைப்பதில்லை. வசனத்தைப் பின்பற்றி, செயல்படுத்த, பயிற்சி செய்ய வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கிறார்.

24. திருவசனத்தை; கருத்துடன் தியானித்து, கேட்டு, பயன்படுத்தினால் திருவசனம் பயன் தராமற் போவதில்லை.

25. புதிய அறிவு, புதிய மகிழ்ச்சி, புதிய மனப்பான்மை போன்றவற்றை எழுப்பி; திருவசனம் நமது உள்ளத்தை இடைவிடாமல் தூய்மைப் படுத்திக் கொண்டிருக்கிறது.

26. திருவசனம்; செயலற்றதும் செத்ததுமல்ல! திருவசனம் பயனை உண்டாக்குகிற உயிருள்ள ஆற்றல்.

27. திருவசனத்தைக் கேட்பது என்பது உங்கள் விருப்பத்திற்கு விடப்பட்ட காரியம் அல்ல! இது கடவுளின் கட்டளை... இதைப் பற்றி கடவுள் உங்களிடம் கணக்கு கேட்பார்.

28. வசனப் பஞ்சம் (தேவ வசனம் கேட்க வாய்ப்பில்லாமல் போகிற) போன்ற, கொடுமையான கொள்ளை நோய்வேறு எதுவும் இல்லை.

29. மனிதனின் ஆன்மீகம் என்ற உணர்வில் தான்... விசுவாசமும் தேவவசனமும் குடியிருக்கிறது!

30. முதல் கற்பனையில்... நமது மனம் கடவுளுக்கு நேராகவும்; இரண்டாம் கற்பனையில், நமது நாவும்-உதடும் கடவுளுக்கு நேராகவும்; மூன்றாம் கற்பனையில், நமது வாழ்க்கையே கடவுளுக்கு நேராகவும் நெறிப் படுத்தப் படுகின்றன.

31. சட்டம் கொஞ்சமாக இருந்தால், நியாயம் அதிகமாக இருக்கும். கட்டளைகள் குறைவாக இருந்தால் நல்ல காரியங்கள் நிறைய நடக்கும் இதை வேதம் விளக்குகிறது. □

நன்மை-தீமை

1. எந்த வகையான வேலையும், ஒரு நல்ல பணியாளனை உண்டாக்கி விடாது! நல்ல வேலைக்காரன், நல்ல வேலையை உண்டாக்குகிறான்.

2. எல்லாவகை துன்பங்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். துன்பங்கள் இயேசுவினால் தொடப் பட்டு, உங்களைப் பரிசுத்தமாக்குவதற்கே கொடுக்கப் படுகின்றன.

3. பாவ அறிக்கை செய்த உடன், மன்னிக்கப்படு கிறீர்கள்! இதற்குப் பின்பும் (குற்றப் பழி உணர்வால்), 'பாவத்தால் தீமை அனுபவிக்கிறேன்.

என்பீர்களானால் உங்கள் அறியாமையால் தான் துன்புறுகிறீர்கள்.

4. தங்கள் பாவங்களில் செத்தவர்களின் வரலாறு, விசுவாசிகளுக்கு லாபம்! ஏன்? இவை நமக்கு படிப்பினை, எச்சரிக்கை! தீயவர்கள் அழிந்து ஒழியும்போது கடவுளின் நீதி பிரகாசிப்பது கண்டு மகிழுவோம்.

5. தீமைகளுக்கும் மேலானவர் இயேசு! தீமைகளை நேசிக்கக் கற்றுக் கொண்டு அவைகளிலிருந்து வெளியே வருவோம்.

6. துன்பங்களை-தீமைகளை சாப்பிடக் கற்றுக்கொள் வோம்! அப்படியானால் இவற்றால் நமக்குச் சங்கடம் வராது சந்தோஷம்தான் வரும்!

7. கடவுள் படைத்தவை எல்லாமே நல்லவைகள்தான். சிலவற்றை நாம் விரும்புவதில்லை, நேசிப்பதில்லை, தீமையாக நினைக்கிறோம்.

7. தேவகிருபையால்; இருபது முப்பது வருடங்கள் நன்மை அனுபவித்திருக்கிறாய்... இந்த துன்பம் சில நாட்களுக்குத்தான்... இது என்ன செய்யும்?

9. இறைச்சியில் உப்பு சேராவிட்டால்... குழம்பில் புளி இல்லாவிட்டால் ருசிக்காதே! வாழ்க்கையில் துன்பம் சேர்ந்திருக்கும் அல்லது சேர்க்கப்படும்.

10. துன்பங்களினால், நாம் ஒடுக்கப்படுவது சிலபொழுது அவசியம் ஆகிவிடுகிறது. துன்பம் நம்மைச் சந்திக்கா விட்டால், உலக ஆசையால் தடுமாறி பாவத்தில் விழுந்து விடுவோம்.

11. எல்லா விசுவாசிகளின் (தூயர்களின்) ஆசிகளும், எனது ஆசிகளே, இதுபோன்றே எல்லா விசுவாசிகளின் துன்பமும் எனது துன்பம் தான்.

12. எனது சரீர இச்சையினால், பிறர் துன்பம் (சிட்சை) அனுபவிக்கிறார்கள். பிறர் உபவாசித்து ஜெபிப்பதால் எனக்கு நன்மை கிடைக்கிறது.

13. நமது சுமைகளைச் சுமக்க விரும்புகிற கடவுளிடம் நமது சுமைகளைக் கொடுக்காமல்... நாமே அவற்றைச் சுமந்து, தவித்து, பயந்து, துன்புறுகிறோம்.

14. நாம் பெரிய நன்மை பெறுவதற்காக, கடவுள் நமக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்! நம்மை, துன்பத்தில் ஈடுபடுத்தி, கடவுள் இந்த உண்மையைக் கற்றுக்கொடுக்கிறார்.

15. தண்டிக்கிற கடவுளின் நீதி (பாவிகளுக்கு எதிராக) நிறைவேற்றப் படும்போது... மிகப் பெரிய தீமைகளும் மிகப் பெரிய ஆசீர்வாதங்கள் ஆகின்றன என்று நாம் அறிகிறோம்.

16. நமது பகைவர்கள், அனுபவிக்கிற தீமைகள் கடவுளின் பராமரிப்பினால்... நமக்கு ஆசீர்வாதங்கள் ஆகிவிடுகின்றன.

17. எனது துன்பமும் கஷ்டமும் பிறரால் சுமக்கப்படுகிறது! பிறருடைய பலம், எனது பலம் ஆகிவிடுகிறது.

18. ஒருவன், ஒரு இடத்தில், தீய நடவடிக்கையால், ஒரு ரூபாய் சம்பாதிக்க நினைத்தால்; இன்னொரு இடத்தில் ஒன்பது ரூபாயை இழப்பான்.

19. உலகத்தில், எங்கோ ஒரு இடத்தில், தெய்வபக்தி உள்ள சிலர் இருக்கிறார்கள்... இல்லையென்றால், இத்தனை நன்மைகளையும் ஆசிகளையும் கடவுள் அருளமாட்டாரே!

20. ஒரு போக்கிரியைக் கொண்டு; கடவுள், இன்னொரு போக்கிரியைத் தண்டிக்கிறார்... (நீ ஒருவருக்குத் தீமை செய்தால்) உன் மனைவி, பிள்ளைகள், வேலைக்காரர்கள் உனக்குப் பத்து மடங்கு தீமை செய்வார்கள்.

21. உங்கள் பிள்ளைகளை வளர்க்கிற முறையில்... உங்கள் மேல் தீமையையும், தேவ கோபத்தையும் நரகத்தையும் வரவழைத்துக் கொள்ளாதீர்கள்.

22. நியாயப் பிரமாணம், நன்மைக்கும் —தீமைக்கும் இடையில் கடவுள் போட்டிருக்கிற வேலி !

23. வித்தன்பர்க் நகரமும்... (தீமை மலிந்த) ஒரு கப்பர்நகூம் ஆகிவிடக் கூடாது !

24. வைராக்கிய விசுவாசியாக இருக்கட்டும்...அவன் பரிசுத்தனாக இருக்கட்டும். இவனுடைய திருப்திக்காக இவன் மற்றொருவனுக்குத் தீமை வருவிக்கக் கூடாது ! மற்றவரின் உரிமையைத் திருட இவன் யார் ?

25. சோதனை—தீமை, பலவிதம் ! இளைஞர், உடல் இச்சையினால்— முதியவர்கள், உலக ஆசையினால் —பண்பட்ட கிறிஸ்தவர்கள். சாத்தானின் நேரடி மோதலினால் தீமையில் விழ சோதிக்கப் படுகிறார்கள்.

26. பாவமும், இழிவும், தீமையும் நிறைந்த விலை மகள் அணிந்திருந்தாலும் ; பொன், பொன்தான் (குழந்தை திருமுழுக்கு) !

27. கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிறது. 'தடை செய்யப் படாத தீமை, வரவர மோசம் ஆகிறது' என்ற பழமொழி இருக்கிறதே !

28. தீமை மனிதனின் ஆன்மத்தை பாதிக்காது, சரீரத்தை மட்டும் பாதிக்கும். தீமைக்கு மனிதன் உடன் போகத்துவங்கினால்...அது ஆன்மத்தையே அழிக்கும்.

29. தனக்கு பலம் இருந்தாலும், எதிரிக்கு எந்தத் தீமையும் பழிவாங்கலும் செய்யாத தன்மையே சரியான அடக்கம்.

30. தன்னில் தானே நல்லதாக இல்லாத எதுவும், நல்லதைப்போலக் காணப்படலாம் ! ☐

நியாயப் பிரமாணம்

1. ஒரு சிற்பிக்கு, வரைபடமும் மாதிரியும் தேவைப் படுகிறது. இதுபோல, கிறிஸ்தவனுக்கு, சடங்குகள் தேவைதான். ஆனால், வரைபடமும் மாதிரியும், சிற்பமாகிவிடாதே !

2. எல்லாரையும் எதிர்த்துக்கொண்டு, நான் ஒருவன் மட்டும் தனித்து நின்று, எந்த ஒரு சட்டத்தையும் உருவாக்க முடியாது.

3. மனம் திரும்புதல் என்பது, நியாயப் பிரமாணத் திலிருந்து துவங்குகிறது ! கிருபையும் விசுவாசமும், கடவுளின் வாக்குத்தத்தத்திலிருந்து துவங்குகிறது.

4. பலிகளைக் கண்டனம் செய்த (பழைய ஏற்பாடு) தீர்க்கதரிசிகளைக் கண்டு நான் வியக்கின்றேன். இவர்கள் மோசேயின் பிரமாணத்திற்கும், மக்களின் வைதீக உணர்விற்கும் எதிர்த்து நின்றார்கள்.

5. சரியான அறிவில்லாதவன்; சட்டத்தை எங்கு எப்படி பயன்படுத்துவது என்று தெரியாமல், தீமையை வளர்த்திடுவான்.

6. மனிதரின் சட்டங்களுக்காக, திருமண உறவை முறிக்கக்கூடாது! ஆனால், திருமண உறவுக்காக, 'மனிதச் சட்டங்களை' உடைக்கலாம்!

7. ஆட்சி செய்கிறவன், நல்ல அறிவுள்ளவனாக இருந்தால்: சட்டத்தால் சாதிப்பதைவிட, இயற்கையான நீதி உணர்வுடன் ஆட்சி செய்து சாதனை புரிவான்.

8. சபையின் சட்டதிட்டங்களுக்கு மதிப்பு கொடுத்து, பலர் பாவ அறிக்கை செய்ய முன்வருகிறார்கள். ஆனால், உள்ளத்தில், பழைய பாவ வாழ்க்கையை நேசிக்கிறார்கள்.

9. எல்லா வகையான சமயச் சட்டங்களுக்கும் அப்பாற்பட்டவர்கள், செத்தவர்கள்! எந்தச் சமயச் சட்டமும் இவர்களைக் கட்டுப்படுத்தாது!

10. தனது அடிப்படைத் தேவைகளுக்கு அதிகம் வைத்திராதவன்; தன்னிடம் இருப்பதை, தனது குடும்பத்திற்குப் பயன்படுத்தட்டும். இதைவிட்டு விட்டு. தன்னிடம் இருக்கும் கொஞ்சத்தை, சமயச் சடங்குகளுக்குப் பயன்படுத்தத் தேவையில்லை.

11. சுதந்திர சித்தத்திற்கும், மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள் மீது;எவ்வகைச் சட்டத்தை

யும் சுமத்த, எந்த மனிதனுக்கும்...ஏன், எந்த தேவ தூதனுக்கும் உரிமை இல்லை.

12. நீதிக்கட்டளைகள் ஒருவனை அடித்து காயப் படுத்துகிறது. ஆனால் நியாயப் பிரமாணத்தால் காயத்தை ஆற்றமுடியாது.

13. சிலர் நியாயப் பிரமாணத்தை, தங்கள் சுயபலத்தால், தேவகிருபை இல்லாமல் நிறைவேற்ற முயன்று தோற்றுப் போகிறார்கள்.

14. எச்சரிப்பையும், கண்டித்து உணர்த்தலையும் அதிகமாகக் கூறி, வாக்குத்தத்தத்தைக் குறைவாக ஆமோசைப் போல வேறு எந்தத் தீர்க்கதரிசியும் கூறவில்லை.

15. சுவிசேஷம் (சுவிசேஷங்கள்) என்பது, தேவசட்டப் புத்தகம் அல்ல.

16. நியாயப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களைச் செய்வதும், நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுவதும் வெவ்வேறானவை.

17. தண்டனைக்கு பயந்து, அல்லது பலன் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு, நீதிச் சட்டங்களைச் செயல் படுத்துவது என்பது, ஒருவகை 'கட்டாயச் செயல்' ஆகிவிடுகிறது,

18. நியாயப் பிரமாணம் நமக்கு எதிரானதல்ல! நியாயப் பிரமாணம் நம்மோடிருக்கிறது.

19. வேதககமம் ; நியாயப்பிரமாணம் — வாக்குறுதிகள் என்ற இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது.

20. நியாயப் பிரமாணம், நல்ல அற நெறிகளை போதிக்கிறது. போதித்தவைகளைச் சாதிக்கிற வல்லமை, நியாயப் பிரமாணம் கொடுப்பதில்லை.

21. ஒரு மனிதன் ; தன்னைத் தானே அறிந்து கொள்ள நியாயப் பிரமாணம் உதவுகிறது. மனிதனின் பலமற்ற தன்மையையும், நன்மை செய்ய இயலாமையையும் பிரமாணம் சுட்டிக் காட்டுகிறது.

நீதி

1. புறச் செயல்கள். சடங்குகள் போன்றவற்றால் நீதிமான்கள் ஆகிவிட விரும்புகிற மக்கள், இச்சை அடக்கத்தைப் பற்றி பெரிதாக நினைப்பதில்லை. இப்படிப்பட்டவர்கள், சடங்குகளை நிறைவேற்றிவிட்டதால், நீதிமான்கள் ஆகிவிட்டதாக நினைக்கிறார்கள்.

2. எல்லாவற்றையும் மேன்மைப்படுத்துகிற, விசுவாசத்தை மேன்மைப்படுத்தாமல், கடவுளின் பார்வையில், அறைக் காசுப் பெறாத மனித நீதிச் செயல்தனை மேன்மைப்படுத்தலாமா?

3. தவறான நம்பிக்கையை (மனித நீதிச் செயல்களை பெருங்கூச்சலிட்டுச் சொல்வதால்... விசுவாசத்தின் சத்தம் வெளியே கேட்காமல் ஆக்கப்பபட்டுவிட்டது.

4. எல்லா மனிதரின் பாவகுவியலையும்விட, இயேசுவின் நீதி பெரியது! இயேசு அருளுகிற மீட்பு, நரகத்தாலும் மேற்கொள்ள முடியாதது.

5. இயேசுவின் உயிர்த்தெழல், நமது இலவச நீதிக்கு உத்திரவாதம் என்று மட்டும் எண்ணாதீர்! இயேசு

வின் உயிர்த்தெழலை நம்புகிறவர்களுக்கு இலவச நீதியை உரியதாக்குவது உயிர்த்தெழல்தான்.

6. உன் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும், நீ நல்ல செயல்களையே செய்து கொண்டிருந்தாலும் 'என்னை அன்றி வேறு தேவர்கள் உனக்கு இருக்க வேண்டாம்' என்ற கற்பனையைநிறைவேற்றாததால் (தேவனை நம்பாமல், செந்தநீதியை நம்பினதால்) நீ, நீதிமானாகிட முடியாது.

7. ஆதாம் வேலையற்றவனாக இருக்கக்கூடாது என்று ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தும் வேலை ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த வேலையினால் ஆதாம் நீதிமானாகவில்லை! படைக்கப்பட்ட நிலையிலேயே ஆதாம் நீதியை நிறைவாகப் பெற்றிருந்தான்.

8. நல்ல செயல்களை நான் நேசிக்கிறேன், ஆசிக்கிறேன். போதிக்கிறேன். ஆனால், நல்ல செயல்களால்தான் ஒருவர் நீதிமான் ஆகிவிட முடியும் என்ற எண்ணத்தைத்தான் நான் கண்டிக்கிறேன்.

9 நீதிமான் ஆவதற்காக, நல்லசெயல்களை-புண்ணியச் செயல்களைச் செய்ய வேண்டும் என்று தேடித் திரிகிறவர்கள்; மலைப் பாம்பை (லிவியாதான்) போன்ற ஒன்றை தோளில் சுமக்கிறார்கள்.

10. வேதாகமத்தில், தொடக்கத்திலிருந்தே, செயல்-தகுதி சட்டம் இவைகளைவிட, விசுவாசம் என்பதே முதன்மை பெற்றுள்ளது.

11. நியாயப்பிரமாணத்தின்படி, சட்டங்கள் மூன்றுவகை அழியக்கூடிய விஷயம் பற்றிய சட்டம், வழிபாடு பற்றிய சட்டங்கள்: விசுவாசம்—அன்பு பற்றிய சட்டங்கள்...

12. நியாயப் பிரமாணம்; மனிதன் என்ன செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று கூறுகிறது. மோசேயின் பிரமாணங்கள் நம்மை, பாவத்தில் ஓட்ட வைக்கிறது.

13. நீதிமானுக்கு தீமை விளையக் கூடுமா என்ற கேள்வியைப் பற்றி பேசுவதே யோபுவின் ஆகமம்.

14. தனது சுயமான கருத்து, சுயநீதி சுய அறிவுக்கு மட்டும் தன்னை ஒப்புக்கொடுத்து வாழ்பவன் முட்டாள்.

15. நீதி என்பது கடவுளின் நீதி! இயேசு கிறிஸ்துவாகிய மீட்பர் சார்பாக, கடவுள் நம்மை நீதிமான்களாக ஏற்றுக் கொள்கிறார், நீதிமான் ஆக்குகிறார். இந்த நீதி கடவுளுக்கே சொந்தமானது.

16. சுயநீதிச் செயல் இல்லாமலே, விசுவாசம் நம்மை இரட்சிக்கிறது. விசுவாசிக்கிறவர்களில் நற்செயல் இல்லாமல் இருக்க முடியாது.

17. மூடைக்குள் இருக்கும் பொருளின் தரம் தெரியாது! இதுபோல, நமது நீதி, பிறமனிதர்களுக்குத் தெரிவதில்லை. ஏனெனில் கிறிஸ்துவனின் நீதி உலக நியதி இல்லை. நமது நீதி பரலோகத்திற்கு அடுத்தது.

19. பலர், பலவிதமான நீதிச் செயல்களைச் செய்ய தீவிரமாக இருக்கிறார்கள். இவர்கள் 'விசுவாசமே பிரதானமானது' என்பதை மதிப்பதில்லை.

19. தனது சுயநீதியையே நம்பி, தன்னையே பெருமைப்படுத்துகிறவன்... கடவுளைவிட, தன்னையே அதிகம் நம்புகிறான் (பரிசேயன்) இப்படிப்பட்டவர்கள், கடவுளிடமிருந்து வெறுங்கையர்களாகத் திரும்புகிறார்கள். □

பாவம்

1. பாவம் (தீமை) சாகவே விரும்புவதில்லை!

2. தனது பாவ உணர்ச்சி உண்மையானது என்றும், தனது பாவ உணர்ச்சியால், முழு மன்னிப்பு பெற்று விட்டேன் என்று யாருமே சொல்ல மிடியாது.

3. பாவ அறிக்கை செய்வோரின் நம்பிக்கை, குருவான வரிடம் நிலைத்து விடக் கூடாது! (மன்னிக்கிறவர் கடவுள்)...

4. நமது மனச்சாட்சியை உறுத்திக் கொண்டிருக்கிற, நமது நினைவில் பதிந்திருக்கிற பாவங்களுக்காக நாம் வருந்தினால் போதுமே!

5. 'தனிப் பாவ அறிக்கை' பயனுள்ளது! ஆனால் இரகசிய பாவங்களையும், தங்களிடம் அறிக்கையிட வேண்டும் என்று குருக்கள் மக்களைக் கட்டாயப் படுத்துவதுதான், என் மனதில் வலி ஏற்படுத்துகிறது

6. குருவானவர். மக்களின் பாவ அறிக்கையைக் கேட் பதற்கு முன்பு, குருவானவர், தனது பாவங்களை, கடவுளிடம்-பாவமன்னிப்பின் மூலவரிடம் அறிக்கை யிடவேண்டும்.

7. பாவத்தை விரட்டியடிப்பது நமது நித்தியப் பயிற்சி! இப்படி விரட்டி அடிக்கிற பலத்தை ஞானஸ்னானத்தில் கடவுள் நமக்குக் கொடுக்கிறார்.

8. சிறங்களுக்கு, வயசு வேறுபாடு இல்லை! இதுபோல, தீமை-கஷ்டம்-(பாவம்) இவைகளுந்கு விலகினவர் எவருமே இல்லை.

9. பாவத்தைக் கொன்று ஒழிக்கிற முயற்சியில்-ஆசையில் மனிதன் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

10. ஓர் இளைஞனை ஒரு பெண்ணின் கையில் ஒப்புவித்து விட்டு 'அவளைத் தொடாதே' (பாவம் செய்யாதே) என்றால் எப்படி?

11. மக்கள் மன்றத்தில் 'இது' மூடிவானது என்று சொன்னால்... பாவமுள்ள மனிதரை-மனிதக் கூட்டத்தை, கிறிஸ்துவையும் விட நீங்கள் உயர்த்துகிறீர்கள் என்பதை உணரவில்லையா?

12. வர இருக்கிற தீமைகள் (பாவங்கள்), நமக்கு எதிரில் மிகமிக அருகில் இருக்கின்றன என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

13. உள்ளே இருக்கிற தீமை-வெளியில், பின்னால், இடது புறத்தில், வலப்புறத்தில், காலுக்குகீழ், தலைக்குமேல் என்று தீமையை ஏழு வகைப்படுத்திச் சொல்லலாம்.

14. நல்ல செயல்கள்கூட, பாவப்பழி உணர்வு இல்லாமல் செய்யப்படுவதில்லை.

15. நம்மைவிடக் குறைந்த குற்றம் செய்த பலர், தண்டனை பெற்றிருக்கிறார்கள், தூக்கில் தொங்கியிருக்கிறார்கள், தண்ணீரில் மூழ்கியிருக்கிறார்கள்...

16. பாவம் பிறந்த பின்பு தான்; பரிகாரங்களும் ஆச்சாரியர்களும் உருவாக்கப்பட்டன(ர்)!

17. பாவம் என்பது, தவறான செயல் மட்டுமல்ல: வேதாகமத்தின்படி, தீய செயல்களைச் செய்திட நம்மை உந்தித்தள்ளுகிற இருதயத்தின் நினைவும் பாவந்தான்.

18. எப்பொழுதும் மனிதன் பாவத்தில் வீழ்ந்து கிடப்பதையும், பாவத்தில் வாழ்வதையும் சேர்த்தே; வேதாகமம், 'பாவம் செய்வது' என்ற வார்த்தையில் அர்த்தப்படுத்துகிறது.

19. உடல் நலம் உள்ளவனைப் போல; ஓட, துள்ளிக் குதிக்க, நோயாளியால் முடியாது! (நாம் எல்லாரும்) பாவத்தால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள். ஆகவே நற்செயல் செய்ய முடியாது,

20. பிரம்பிற்கும், மட்டைக்கும் பயந்து பாவத்தைத் தவிர்ப்பதைக் காட்டிலும், கடவுளுக்கு பயப்படும் விதத்தில் பிள்ளைகளை வளர்த்து வரவேண்டும்.

21. (பாவம் செய்தேன்) என்ற நொறுங்குண்ட இருதயம் மிக மேன்மையானதுதான். கடவுளின் வாக்குத்தத்தத்தின் மேல், ஜீவனுள்ள விசுவாசம் இருக்கிற மனதில்தான் மனஸ்தாபம் உருவாகும்.

22. விசுவாசம் கற்றுத்தரப் படவேண்டும். பயிற்சி செய்யப்பட வேண்டும்; தூண்டி விடப்பட வேண்டும்! விசுவாச உந்துதலால், பாவத்திற்காக மனஸ்தாபமும், தொடர்ந்து தேவ கிருபையால், ஆறுதலும் வரும்.

23. உனது நொறுங்குண்ட இருதயத்தில் (மனஸ்தாபத்தில்) நம்பிக்கை வைக்காதே! உனது மனஸ்தாபத்

தினால் பாவ மன்னிப்பு வரப்போவதில்லை... எச்சரிக்கை!

24. பெயருக்காகச் செய்யப்படும் பாவ அறிக்கையும், போலியான மனச்சாந்தியும்...பேராசையையும் பலாத்காரத்தையும் உண்டாக்கும் பட்டறை ஆகி விட்டது.

25. இயேசு; கிருபையில், ஜீவனில், இரட்சிப்பில் பூரண மானவர். ஆனால் மனித இருதயம்; பாவத்தில் தீமையில், தண்டனையில் மூழ்கிக் கிடக்கிறது.

26. பாவம் செய்தவன்; கடவுளை நோக்கிக் கூப்பிடு கிறான். கடவுளைப் புகழுகிறான். தன்னைக் கடிந்து கொள்ளுகிறான்...விசுவாசமும், கடவுளை மகிமைப் படுத்தலும் பாவியிடம் காணப்படுகிறது.

27. உலகத்தின் புகழ், வாழ்த்துதல்களுக்கு அஞ்சுங்கள்! இவைகளுக்கு விலகி ஓடுங்கள்! இது (தேவ மகிமைக்கு எதிரான) பாவத்திற்குள் உங்களை வழி நடத்திவிடும்.

28. பலர் பலவிதமான நன்மைகளைச் செய்கிறார்கள். ஆனால் தங்களுடைய தீமைகளை ஒழித்திட முன் வருவதில்லை...தீமையை விலக்கினால், தங்கள் புகழ் குறையுமோ என்று அஞ்சுகிறார்கள். இதுவும் பாவம் தானே!

29. கடவுள் பாவிகளுக்கு எதிர் ஆனவர் அல்ல! தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்திட மறுக்கிற அவிசு வாசிகளை கடவுள் எதிர்க்கிறார்.

30. சமாதானமும், செழிப்பும், விலைவாசி ஏற்றம் இல்லாத காலத்திலும்தான்...படு பயங்கர பாவங்கள் தீமைகள் செழிக்கின்றன.

31. உடன் பிறந்த பாவச்சார்பை (ஜென்ம பாவம்) ஓரளவுதான் தடை செய்ய முடியும். முற்றிலும் வேர் அறுக்க முடியாது.

32. பேசியும் பாவம் செய்யலாம். (பொய் சாட்சி) பேசாமலேயும் பாவம் செய்ய முடியும் [சாட்சி சொல்லாமல்]

33. எல்லாவித பாவங்களுக்கும், தற்காப்புச் சாதனம், தேவ வசனமும் ஜெபமும் தான்! □

பிரசங்கம்

---

1. வாசிக்கப்படுகிற தேவ வசனம், சரியான விதத்தில் புரிந்து கொள்ளும் தன்மையில் பிரசங்கிக்கப்படா விட்டால்...தேவ வசன வாசிப்பு என்பது குட்டிச் சுவரில் குனிந்து ஊதுவதற்கு ஒப்பாகும்.

2. தேவ வசனம் சரியாகப் பிரசங்கிக்கப்படாத இடத்தில், கூடி வருதல் கூடாது! இது போன்ற இடங்களில், பாடுவதையும் ஜெபித்தலையுங்கூடத் தவிர்த்திடுதல் சிறப்பு.

3. ஒழுங்கான திருவசனப் பிரசங்கத்தைக் கேட்கும் போது, கடவுள் உன்னிடம் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொள்...குருவானவர்தானே பேசுகிறார் என்று நீ நினைத்தால், நீ கிறிஸ்தவனே இல்லை!

4. பிரசங்கிக்கும் பொழுது, திருமுழுக்கு கொடுக்கப்படும் போது பாவ மன்னிப்பு கூறி அறிவிக்கப்படும் போது...கடவுளே இறங்கி வருகிறார். அவரே பேசுகிறார்! அவரே செயல்படுகிறார்!

5. தேவ வசனப் பிரசங்கத்தை விட, அதிக நேரமும், அதிக சிறப்பிடமும், வேறு எதற்காவது ஒரு ஆராதனையில் கொடுக்கக் கூடாது! இப்படிச் செய்வது தேவ வசனத் துரோகம்.

6. சில பிரசங்கிகள், தேவ வசனத்திற்கு ஏற்றபடி பிரசங்கிப்பதில்லை. சுய இஷ்டத்திற்கு ஏற்ப தாங்கள் நினைத்தபடியெல்லாம் விளக்கம் தந்து பிரசங்கிக்கிறார்கள்.

7. மீகா தீர்க்கதரிசி; குற்றஞ்சாட்டுகிறார். தீர்க்கதரிசனம் சொல்கிறார். பிரசங்கிக்கிறார். இஸ்ரவேலும் யூதாவும் தூள் ஆகிவிட்டாலும்...கிறிஸ்து வந்து எல்லாவற்றையும் சீராக்குவார்...என்கிறார்.

8. நீண்ட பிரசங்கம் செய்கிறவர்கள், சுவிசேஷங்களைப் போல் நீளமாகச் செய்கிறார்கள். குறுகிய பிரசங்கம் செய்கிறவர்கள் பேதுரு பவுல் போல சுருக்கமாக இயேசுவைக் கூறுகிறார்கள்.

9. இயேசுவை, கடவுளின் குமாரனை, மெய்யான மனிதனும் கடவுளுமானவரை பிரசங்கிப்பதே சுவிசேஷம்.

10. இயேசு சம்பாதித்த நன்மைகள், நமக்கு விளக்கபட்டு, இவற்றை நாம் விசுவாசித்து ஏற்பதால், நமக்கும் அருளப்படுவதே, சுவிசேஷம்—சுவிஷேசப் பிரசங்கம்.

11. இயேசுவின் செயலா, பிரசங்கமா எதை விடலாம் என்ற நிலை எனக்கு ஏற்பட்டால்...இயேசுவின் செயல்களை நான் விட்டுவிடுவேன்! அவருடைய வார்த்தைகளே எனக்கு புத்துயிர் அளிக்கிறது என்று (யோவான் 5: 51) இயேசுவே சொல்கிறார்!

12. தங்கள் பிடிவாதத்திலும் பெருமையிலும் நிலைத்திருக்கிறவர்கள்; (தேவ வசன) பிரசங்கத்தில் கூறப்படுகிறவைகளை மறுத்து ஒதுக்குகிறார்கள்.

13. பொது ஆராதனையில், சரியான வசனப் பிரசங்கம் செய்யாமல்...அனேக ஆத்துமாக்களை ஏங்கச் செய்கிற பிரசங்கிகள் பாவம் செய்கிறார்கள்.

14. நமக்கு அறிவுரை கூறவும், பிரசங்கிக்கவும் இடங்கொடுத்திருக்கிறோம். ஆனால், இதை ஆழ்ந்த அக்கறையின்றிக் கேட்டுக் கொண்டிருந்தால்... கடவுள் உங்களிடம் கணக்குக் கேட்பார்.

15. ஒன்றிரண்டு பிரசங்கங்களைக் கேட்டுவிட்டு, வெறுப்படைந்து... தங்களுக்கே எல்லாம் தெரியும், இதற்குமேல் தங்களுக்கு எந்தப் போதனையும் வேண்டாம் என்று எண்ணுவோர் கண்டிக்கப்படவேண்டும்.

16. கடவுளின் வசனம், எங்கே- என்றைக்கு-எப்பொழுது பிரசங்கிக்கப்படுகிறதோ ; அங்கே அந்த வேலை புனிதம் பெறுகிறது.

17. பத்து தொந்தி வயிறுகளை, முந்தி நிறைத்து வந்தவர்கள், ஒரு நல்ல பிரசங்கியைக் கூட ஆதரிக்க முன் வரவில்லை... தங்கள் வயிறுகாய்ந்து விடும் என்று அஞ்சுகிறார்கள்.

18. பொய் பிரசங்கிகளை ஆதரிப்பதால், இவர்கள் நம்மை பிசாசின் வழியில் நடத்துகிறார்கள். இத்துடன், நமது இரத்தத்தையும், வியர்வையையும் இவர்கள் பிழிந்து எடுத்து விடுகிறார்கள்.

19. கிறிஸ்து உண்மையாகப் பிரசங்கிக்கப்படாத இடத்தில்... கிறிஸ்தவ சபையை உண்டாக்க, பரிசுத்த ஆவியானவர் முன் வருவதில்லை.

20. கடைசி நாள் வரைக்கும், தூய ஆவியானவர் கிறிஸ் தவர்களோடு இருக்கிறார். திருவசனத்தை உண்மை யாகப் பிரசங்கிக்க, கற்றுக்கொடுக்க. தூயாவி யானவர் திருச்சபையைப் பயன்படுத்துகிறார்.

21. உயிரோடு இருக்கிற காலம் முழுவதும், 'விசுவாசம்' என்ற பொருள் பற்றிப் பிரசங்கிக்கவும், கற்றுக் கொடுக்கவும், கற்றுக் கொள்ளவும் தேவையாக இருக்கிறது.

22. கடவுளின் நாமத்தைப் பயன்படுத்தி, பொய்யான வைகளைப் பிரசங்கித்து, மனிதரை மயக்குகிற பிரசங்கியால், கடவுளின் பெயர் இழிவுபடுத்தப் படுகிறது.

23. சிலர் கடவுளின் புனிதப் பெயரை, தங்களது பேய்த் தமான போதனைகளுக்கு-பிரசங்கத்திற்கு போர்வை ஆக்கிக் கொள்ளுகிறார்கள் !

24. 'கடவுளே, பரம தந்தையே...சுவிசேஷம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படவும், விசுவாசத்தினால் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்டு சரியான செயல்களைச் செய்கிறவர்களாக கிறிஸ்தவர் வாழவும்...உமது திருவசனப் பிரசங்கத்தைத் தந்து கொண்டே இரும்.

25. கடவுளின் ஞானமும் வல்லமையுமாகிய, இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்து, இதயத்தில் ஏற்றுக் கொண்டு பிரசங்கிக்கிற பிரசங்கிகள் ; கடவுளின் இரகசியங்களை விளக்குகிறார்கள்.

26. மனிதரை உணர்ச்சிவசப்படுத்த (சென்டி மென்டாக) இயேசுவின் பாடுகளைப் பிரசங்கிப்பது என்பது முட்டாள் தனமானது ! கேட்பவரின் மனதில்

விசுவாசத்தைத் தோன்றச் செய்யும் விதமாகவே பிரசங்கம் செய்யப்பட வேண்டும்.

27. இயேசுவைப் பிரசங்கிப்பது என்பது என்ன தெரியுமா ? வசனத்தைக் கேட்கிற ஆத்துமா ; விசுவாசிக்கும்படி, ஆத்துமாவை போஷித்து, விடுவித்து, தேவ நீதிக்கு உள் ஆக்குவதே பிரசங்கம்.

28. சரியான திருவசனப் பிரசங்கத்தைக் கொடுக்காமல், கேட்கிற ஆத்துமாக்களை வீணாக்குகிற பிரசங்கிகள் கடவுளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். □

போராட்டம்

1. கடினமானவைகளோடு, போராடி வெற்றி பெற வேண்டுமென்றால் ; நடப்பிலுள்ளவைகளை ஒழிக்க வேண்டும், சிலவற்றை மாற்றவேண்டும், புதியவைகளை—சரியானவைகளைப் புகுத்த வேண்டும்.

2. அவர்களுக்கு வேறு வேலையே இல்லை ! ஆகவே அதிக நேரம் அவர்களுக்குக் கிடைக்கிறது. எழுதுவதற்கு, காகிதத்திற்கும் அவர்களுக்குக் குறைவில்லை எனக்கு எதிராக எழுதுவதற்குத் தேவையான கருப்பொருளை (எனது முரண்சமயக் கருத்துகளை), அவர்களுக்கு நானே தாராளமாக வினியோகிக்கிறேன்.

3. நான், அருவெறுப்பான ஒன்றுடன் போராடுகிறேன். அதை ஜெயித்தாலும், நான் அழுக்காகிவிடுவேன் ! இது எனக்குத் தெரியும்.

4. தவறு செய்கிறவர்களின் பெரிய கூட்டத்தைக் கண்டோ, அவர்களின் செல்வாக்கைக் கண்டோ, போராடுகிற நான் அஞ்சுவதில்லை. 'மெய்மையே வல்லமை: என்று நம்புகிறவன் நான்.

5. என்து போராட்டத்தால் (எதிர் அணியில் உள்ளவர் கள், அழுதாலும்—என்னைப் பார்த்துச் சிரித்தாலும் ...என்மனதிலுள்ளதை நான் தெளிவாக எடுத்துச் சொல்லுவேன்.

6. என்மேல் உள்ள பகையினால், இப்படி பயனற்றவை களை அவர்பேசவில்லை! அவருடைய அறிவுக் குறைவும், அனுபவக் குறைவுமே, போராட்ட வேகத்தில் இப்படிப் பேசவைக்கிறது. ஆகவே இவரைக் கண்டனம் செய்யத் தேவையில்லை.

7. ஒரு புத்தகத்தில், எனது நண்பராகவும். இன்னொன்றில் எனது விரோதியாகவும் எழுதியுள்ள அவர், உண்மையிலேயே மிகவும் நல்லவர்.

8. போராட்டத்தில், எதிர்த்தாக்குதலை உறுதியாக நிலை நாட்ட, நிலை நாட்டியதை கடைசிவரை சாதிக்கப் போராடுவா...போராட்டத்தில், ஆளைத் தாக்க முடியவில்லையென்றால்... ஒருவைக்கோல் பொம்மையையாவது தாக்குவார்கள்.

9. வாத எதிர் வாதங்களை நான் வெறுக்கிறேன்! நான் யாருக்கும் சவால்விடுவதில்லை! இதுபோல எவரும் எனக்குச் சவால் விடுவதையும் விரும்ப வில்லை. சவால் விட்டால்... போராடுகிற நான், ஊமையாக இருக்கமாட்டேன்.

10. ஆவியும், சரீரமும் உள்ள மனிதனில் எப்பொழுதுமே ஒரு போராட்டம் நடக்கிறது! மனிதன், முழுமை

யாக ஆவிக்கு உரியவனாகும் வரைக்கும் இந்தப் போராட்டம் தொடருகிறது.

மன்னிப்பு

1. கடவுள் மன்னிக்கிறவர் என்று கடவுளின் வாக்குறுதியை நம்பாவிட்டால், நமது பாவ அறிக்கையால் எந்தவித பயனும் இல்லை.

2. விசுவாசிகள் எல்லாருக்குமே, பாவத்தை மன்னிக்கிற அதிகாரத்தை, உரிமையை கிறிஸ்து நாமே கொடுத்திருக்கிறார்.

3. தேவ அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து, குருவானவருக்கு தன்னை கீழடக்காத எவருக்கும், கடவுள், பாவங்களை மன்னிக்கிறதில்லை.

4. பாவங்களை மன்னிக்கிறது வேறு... பாவத்திலிருந்து மனிதர்களை விரட்டி அடிப்பது வேறு!

5. பாவ மன்னிப்பு பெற, உனது தகுதியைப் பாராதே! பாவ மன்னிப்பு பெற்றுக் கொள்ள, உனது தகுதி இன்மையை உணர்ந்து பாவ மன்னிப்பைப் பெற ஆயத்தம் ஆகிடு.

6. நீங்கள் நம்புங்கள்... (கிருபையினால் பாவமன்னிப்பு) நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்! நீங்கள் நம்பமறுத்து விடுங்கள் நீங்கள் அதை இழந்து விட்டீர்கள்.

7. பாவமன்னிப்பின் வாக்குறுதியைக் கடவுள் நிறைவேற்ற, மனிதரின் பாவ அறிக்கை ஒரு வாய்ப்பு ஆகி விடுகிறது.

8. வெளிப்படையான மாற்றங்கள் (மன்னிப்பு அடைந்தவரில்)-செயல்கள் காணப்படாமல், அவரிடம் உள்ளான மனந்திரும்புதல் இல்லை என்று சொல்லலாம்.

9. மன்னிப்புப் பெறத் தகுதி இல்லாத என்னையே கடவுள் மன்னித்திருக்கிறாரே! நான் இன்னொருவரை, கொஞ்சம் மன்னித்தால் என்ன?

10. கடவுளின் தயவு, மன்னிப்பு, மகிழ்ச்சி ஆகியவற்றை நாமே உதைத்துத் தள்ளி விடுகிறோம். ஆகவே ஈவு இரக்கமுமில்லாத துன்பத்தைத் தவிர வேறு ஒன்றும் நமக்கு இல்லை.

11. தூயாவியானவர், திருவசனத்தைக் கொண்டு, நம்மில் செயல் புரிந்து... நாள்தோறும் நமக்கு பாவ மன்னிப்பு அருள வேண்டும்.

12. பாவ மன்னிப்பு இடைவிடாமல், நமக்குத் தேவையாக இருக்கிறது... கடவுளின் வசனத்தின் வழியாக தூயாவியானவர் நம்மிடம் மேற்கொள்ளும் வேலையை நாமே தடை செய்கிறோம். பாவ மன்னிப்பு கிடைக்க நாமே இடைஞ்சல்செய்கிறோம்.

13. கிறிஸ்தவ சபைக்கு வெளியே பாவமன்னிப்புஇல்லை/ மெய்க்கடவுள் விரும்புகிற தூய்மை திருச்சபைக்கு வெளியே இல்லை.

14. நம்மிடம் பாவம் இருக்கிறது. முழுப் பாவமன்னிப்பு அருளுகிற'உரிமை பெற்ற திருச்சபையில் நாம் இருப்பதால், பாவம் நமக்குத் தீமை செய்து விடாதபடி தூயாவியானவர் தடுக்கிறார்.

15. நாம் கேட்பதற்கு முன்பே, கேட்க நினைப்பதற்கு முன்பே கடவுள் நமக்கு மன்னித்து விடுகிறார்.

16. இலவச மன்னிப்பை உணர்ந்து, கடவுளின் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வது நம்மைச் சார்ந்ததே! இதற்காகத்தான் 'மன்னித்தருளும்' என்று ஜெபிக்கிறோம்.

17. நமது செருக்கை அடக்கி, தாழ்மைஉள்ளவர்களாக்கும் கடவுளின் நோக்கத்திற்கு இசையவே 'மன்னித் தருளும்' என்ற ஜெபம் செய்யப்படுகிறது,

18. கடவுள் இடைவிடாமல் நம்மை மன்னித்துக் கொண்டே இருக்காவிட்டால், நாம் என்றைக்கோ அழிந்துப் போயிருப்போம்.

19. நீங்கள் பிறருக்கு மன்னிப்பதால், நீங்கள் கடவுளிடம் மன்னிப்பு பெறுவதில்லை! சுவிசேஷம் சொல்லுகிற படி, கடவுள் மன்னிக்கிறதாக வாக்குறுதி அளிக்கிற தாலும், (கடவுளாகவே) இலவசமாக கிருபையாக நமது பாவங்களை மன்னிக்கிறார்.

20. எருசேலம் போகிறான், ரோம் பயணம் செய்கிறான் அங்கே ஜெபத்துக்கு ஓடுகிறான், பாவ அறிக்கை செய்ய இவரைத் தேடுகிறான்... இப்படிப்பட்ட அவனுக்கு 'கடவுள் மன்னிக்கிறார்' என்ற விசுவாசம் இல்லையே! □

மனிதன்

---

1. எல்லா மனிதரும் தவறு செய்யக் கூடியவர்கள்தான்! எல்லாவகை மாற்றங்களும் தவறுகளை உண்டாக்கக் கூடியவைதான்.

3. சில மனிதர் விண்ணையும் மண்ணையும் ஆள உரிமை பெற்றவர்களாக தங்களை நினைத்துக் கொண்டு... தேவ தூதருக்கு உத்தரவிடத் துவங்கி விட்டனர்.

3. நாம் அறியாத நேரங்களில், கடவுள் மனிதனுடன் இருக்கிறார்.

4. விழுங்கக் காத்திருக்கிற நரகத்தின் திறந்த வாயிலி லிருந்து ஒரு சில மனிதனையாவது நாம் கூவி அழைத்து, காப்பாற்றுகிற முயற்சியில் நாம் இறங்கிட வேண்டும்.

5. மனிதன் (ஒவ்வொருவனும்) தனக்குள்ளேயே ஒரு நரகத்தை வைத்துக் கொண்டிருக்கிறான்.

6. தீயசெயல்கள் தீயவனை உருவாக்குவதில்லை தீய மனிதனே தீய செயல் செய்கிறான்; என்று கூற்று உண்மையிலும் உண்மை.

7. மூகஸ்துதி செய்கிற மனிதனைவிட பெரிய கொலை பாதகன் வேறு எந்த மனிதனும் இல்லை.

8. முழுமையானதும், குறைவற்றதும் எதுவுமில்லை!வர இருக்கிற நன்மைகளை மனிதன் நினைத்துப் பார்த் தால்... மனிதனுக்கு இப்பொழுது இருக்கிற கஷ்டத் தின் அழுத்தம் குறையும்.

9. மறுவாழ்வில் முழுநிறைவை அடைவதற்கான ஒரு துவக்கத்தைத்தான் மனிதன் இந்த வாழ்வில் துவங்கு கிறான், இந்தத் துவக்கம் நாம் வாழ்ந்து கொண் டிருக்கிற வரைக்கும் தொடர வேண்டும்.

10. வெட்டுவதற்குப் பயன்படாத வாளின் கூர்மையால், மனிதனுக்கு என்ன பயன்?

11. துன்பமயமான மனித வாழ்வில் ஓர் அழகு மலர்கூட மனிதனை உற்சாகப்படுத்துகிறது.

12. ஜீவ ஊற்றிலிருந்து அந்தந்த மனிதன்தான் அவனவனுக்காக அள்ளிப் பருகிட வேண்டும்.

13. விபரம் தெரியாத குழந்தைப் பருவத்தில் செய்து கொடுத்த வாக்குறுதி, வளர்ந்த பின்பு, மனிதனைக் கட்டுப்படுத்துவதில்லை.

14. ஒவ்வொரு மனிதனும், தனது 'அடுத்தவரை அயலவரை, தன்மேல் 'அணிந்து' கொண்டு, அடுத்தவனில் தானே வாழுவதாக நினைத்து வாழப் பழகிட வேண்டும்.

15. தீமைக்குக் கீழே , இரட்சிப்பு:விடுதலை என்ற ஆசீர்வாதம் இருக்கிறது! இது எல்லா மனிதருக்கும் பொருந்துகிறது.

16. கனிகள் விளைவதற்கு முன்பே மரங்கள் உயிர் வாழுகின்றன. தீய மனிதன் தீயவற்றையும் நல்லவன், நல்லவற்றையும் செய்கிறான். மரத்தின் தன்மைகளை கனிகள் பெறுகின்றன.

17. பெரிய லாபங்கள் மனிதனுக்குக் காத்திருக்கின்றன என்பதை மனிதனை அழுத்துகிற தீமைகள் நினைவிற்குக் கொண்டு வருகின்றன.

18. சொந்த விருப்பத்தால், ஒரு மனிதர் பொருத்தனை பிரதிகளை செய்தால் அவருடைய ஊக்கத்தை நான் தடை செய்ய விரும்பவில்லை.

19. மனிதரே! உங்கள் பெற்றோர், வயோதிகராக பலங் குன்றியவர்களாக ஏழைகளாக இருக்கும்போது அவர்களைப் பேணி அன்புகாட்டி மதியுங்கள்.

20. புத்தி சொன்னால், விட்டுவிட வேண்டியதை விட்டு விடாதமனிதன்; உத்தரவு போட்டாலும் (அதிகாரத்துக்கு-தண்டனைக்கு பயந்து) விட்டு விடப்போவதில்லை.

21. ஒரு மனிதன்; எதற்கும் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்! ஆகவே, எப்பொழுதும் எது அவனுக்குக் கிடைக்கிறதோ அதை அவன் (செம்மை யாகச்) செய்ய வேண்டும்.

22. ஒரு மனிதனின் செயல்களைப் பார்க்கலாம், அவற்றைப் பற்றி கேள்விப்படலாம்... இவற்றால் அந்த மனிதனின் மனம் எப்படி இருக்கிறது என்று நான் அறியேன்.

23. துன்பத்தில் இருக்கிறவன் சிரிக்கிறான்! மகிழ்ச்சி யில் இருப்பவன் அழுகிறான்! மனிதனின் இதயத் தின் ஆழம் திறந்து இருப்பதில்லை.

24. மனிதனுக்கு இரண்டு வாழ்க்கை வழிகள் இருக் கின்றன. பெற்றவர் அவனைக் கண்டித்து-சிட்சிக்க வேண்டும். அல்லது நியாயாதிபதியால் தண்டனைப் பெற வேண்டியதுதான்.

25. இளையவர்கள் தேவ கட்டளைக்கு எதிராகக் குரல் எழுப்புகிறார்கள்! இவர்கள் மட்டுமல்ல, வயது வித்தியாசம் இல்லாமல் (அவரவர் வயதுக்கு ஏற்ப) எல்லாருமே எதிர்க்குரல் எழுப்புகிறார்கள்.

26. கடவுள் ஒருவரே முழு நீதியானவர்! ஆனாலும், கடவுளின் பார்வையில், ஒரு மனிதர் இன்னொரு வரைவிட அதிக நீதிமானாக இருக்கிறார்.

27. மனிதர்களே! இருக்கிற பொழுது சாப்பிடுங்கள். இல்லாவிட்டால், சாப்பிட ஒன்றுமில்லாமலும் ஆகிவிடும்.

28. சரீரம் என்பது, அசுத்தம் தொடர்பானது என்றும், ஆத்துமம் என்பது, இருதயம் (ஆன்மா) சம்பந்தமானது என்றும் நினைக்க வேண்டாம். முழுமனிதனும், ஆத்துமா-சரீரம்-மனம்-உணர்வு அத்தனையும் சரீரத்துக்கானவைகளையும் நாடுகின்றது.

29. பால்குடிக்கும் குழந்தைப் பருவத்திலேயே (மனிதனே), நீ பழ இரசம் அருந்தத் துடிக்க வேண்டாம்.

30. பெரும் செல்வம் தூளாகி ஒன்றுமில்லாமல் ஆகி விடுகிறது! மூன்றாம் தலைமுறை மட்டும் செல்வமும் செல்வாக்கும் நிலைத்திருப்பதில்லை என்பது மனிதருக்குத் தெரியும்.

31. அனேக நலமான காரியங்கள் மனிதரிடமிருந்து நமக்குக் கிடைக்கிறது. இவை எல்லாவற்றையும், கடவுளிடமிருந்து-கடவுளின் உத்தரவினால் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம்.

32. மனிதன் தனது உள்ளத்தை, தானே சோதனை செய்யட்டும். தனது மனம் மெய்க் கடவுளைப் பற்றிக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதை எந்த மனிதனும் அறிவான்.

33. ''மம்மோன்' என்ற உலக சம்பத்தை சேவிக்கிற மனிதருக்கு மதிப்பு மரியாதை புகழ் போன்ற சகல செல்வாக்குக்கும் குறைவே இல்லை!

34. 'மம்மோன்' என்ற பெயர் கொண்ட செல்வத்திற்கு தனது மனம் முழுவதையும் ஒருமனிதன் கொடுத்து விட்டானென்றால்... இவனுக்கு மம்மோன்தான் கடவுள்.

35. 'தனக்குச் சொத்தும் பணமும் இருந்து விட்டால் போதும். கடவுளும் இன்னபிற பொருட்களும் தன்னிடம் இருக்கின்றன' என்று பலர் நினைக்கிறார்கள்.

36. கடவுளைப் பற்றிய கற்பனையை கனவை உருவமாக்கி. சில மனிதர்...ஒரு வெறுமையை-சூனியத்தை வழிபாட்டுப் பொருளாக்கி, அதனிடம் தங்களை ஒப்புக் கொடுத்து விடுகின்றனர்.

37. உலகில் பல மனிதருக்கு மிகச் சாதாரணமான வழிபாட்டுப் பொருள் 'மம்மோன்'!

38. செல்வத்தின் மீது மனிதன் கொண்டிருக்கிற ஆசை-பக்தி, இடுகாடு செல்லும் வரைக்கும் அவன் இயல்போடு ஒட்டிக் கொண்டிருக்கும்

39. ஒரு மனிதனின் மனம் எதைப் பற்றிக் கொண்டிருக்கிறதோ... ஒரு மனிதன் தன்னை எதற்கு அடிமைப் படுத்துகிறானோ அது (புகழ், செல்வம்...) அவனுக்கு கடவுள் ஆகிவிடுகிறது.

40. நாம் செய்கிற தவறுகள், யாருக்குமே தெரியாமல் இருப்பதற்காக, அதைப் பூசி மெழுகி மறைக்க நினைக்கும், 'அழகிய குணம்' எல்லா மனிதரிடமும் காணப்படுகிறது.

41. மனிதர் எல்லாருமே - முதியோர், இளைஞர் எல்லாருமே-கட்டுப் பாடுகளுக்கு அடங்காதவர்களாக, அடம் பிடிக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

42. முதிர் வயது வரைக்கும் வாழுவது என்பது 'நீண்ட ஆயுசு' மட்டும் அல்ல! வாழும் வரைக்கும், உடல் நலம், குடும்பம், தொழில், அமைதி, நல்ல அரசு உள்ளவர்களாக வாழுவதே நீடிய ஆயுசு!

43. உலகத்தின் மனிதர்கள் எல்லாருமே (சிலபொழுது) ஒட்டுமொத்தமாக, தவறான வழியில் செல் கிறார்கள் என்பதை, கடவுள் நன்றாக அறிந்திருக் கிறார்.

44. கடந்த காலத்தை யோசித்துப் பார்த்தால்... நாம் நினைக்காத, எதிர்பாராத, விரும்பாத அனேக விஷயங்களை நான் செய்திருக்கிறேன்! மனிதனின் சுய இஷ்டத்தின்படி எல்லாம் நடந்திருந்தால்... என்ன ஆகியிருக்கும்.

45. அர்த்தமில்லாத பொருட்களைக் கூட, பிள்ளை களுக்கு விளையாடக் கொடுக்கிறார்கள் பெற்றோர். ஏன்? குழந்தை, மனிதனாகும்போது, நல்லது கெட்டதை அறிந்து கொள்ளத்தான் இப்படிச் செய்கிறார்கள்.

46. மனிதனே! மனரம்மியம் பெரும் செல்வம், பெரிய ஆறுதல்.

47. உலகம் முழுவதும், மனிதன் முயற்சி செய்தாலும், நமது ஆயுளுடன் ஒரு மணி நேரத்தைக் கூட்டவோ; நமக்காக, நாமே ஒரு தானிய மணியை உருவாக் கிடவோ மனிதனால் முடியாது.

48. அடுத்தவனுக்கு, வெறுப்பு உண்டாக்குகிற வேராக வும், நீராகவும் இருக்காதே! கடவுள் இதை வெறுக்கிறார்.

49. மனிதகுலத்தை உற்றுப் பாருங்கள்! பெரிய திருடர்கள் நிறைந்த மிகப் பெரிய கொட்டில் இந்த உலகம் என்று தெரியும்.

50. நேர்மையான மனிதர்கள், நீதி மன்றங்களின் தலைமை வகிக்காமலிருப்பது, உலகம் முழுவதும் இருக்கிற கேடுதான்.

51. அடுத்தவனின் நன்மையை விட, தீமையைத்தான் ஒவ்வொருவனும் விரும்பிக் கேட்கிறான். இது மனித இயல்பில் ஒட்டிக்கொண்டிருக்கிற நேர்மைக் கேடு.

52 தாழ்மையோடு இருக்க எந்த மனிதனுக்கும் விருப்பம் இல்லை! 'நான் முக்கியமான நாற்காலி யில் அமர்ந்திருப்பதை மற்றவர்கள் பார்க்க வேண்டும்' என்று ஒவ்வொருவனும் நினைக் கிறான்.

53. தூங்கும்போது கூட, மனிதனின் ஆத்துமா விழித் திருக்கிறது... ஓயாமல் வேலை செய்கிறது,

54. அறிவு, ஆசை, வெறுப்பு ஆகியவைகளுக்கு ஏற்ப தான்; மனிதனின் எல்லா நடவடிக்கைகளும் அமை கின்றன.

55. பொறுமை, மனிதனில் காணப்படுகிற கடவுளின் செயல்! பொறுமையின்மை, மனிதனின் உடல் தினவு.

56. சரீரத்தின் இயற்கைத் தேவைகளைக் கொன்றுவிட; உடல், நம்மிடம் ஒப்புவிக்கப்படவில்லை. மனித உடலின், அளவுக்கு மிஞ்சிய ஆசைகளைத்தான் கொல்ல வேண்டும.

57. உபவாசிப்பதைப் போல, உண்ணுவதும்; விழித் திருப்பதைப் போல, உறங்குவதும்; வேலை செய் வதைப் போல, ஓய்வும் மரியாதைக்கு உரியவை களே!

58. தனது உடலைப் பற்றி தேவையான அளவுக்குக் கவலை கொள்ளாதவர்...தன்னையே கொலை செய்கிறார்.

59. 'சிலந்தி வலை' சிறிய ஈக்களைப் பிடிக்கும். கல் உருளை சிலந்தி வலையையே நசுக்கிவிடும்' என்ற படி சட்டங்கள் சாமானிய மனிதரைப் பிடிக்கின்றன பெரிய மனிதர் சட்டங்களை நசுக்கி விடுகிறார்கள்.

60. புள்ளி விபரங்களையும், சட்டங்களையும் விட; சரித்திரம் மனிதனுக்கு பயன் தருவதாகும். வரலாறு வாழ்க்கை அனுபவம். மற்றவை வார்த்தை விளக்கங்கள்.

61. எந்த மனிதனும், எல்லா காரியத்தையும், எப்பொழுதும், தவறே இல்லாமல் செய்ய முடியாது. குறைவுள்ள உலகத்தில் தானே நாம் வாழுகிறோம்.

62. அதிகாரத்தில் இருக்கிறவர்கள் விட்டுக் கொடுத்தும், பணி செய்கிறவர்கள் கீழ்ப்படிந்தும் நடந்து கொண்டால்...இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே மோட்சம் செல்லலாம்.

63. நாய், புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் கூட மனிதனுக்குக் கீழ்ப்படிகின்றன! ஏன் தெரியுமா?...மனிதன் தனக்கு வேண்டியதைச் செய்வதால் அடங்கிப் போகின்றன. இந்த குணத்தை 'அடக்கம்' என்று சொல்லலாமா?

64. தினத்தேவை, அத்தியந்த அவசியம் என்ற போர்வையில்; மனிதனின் பேராசை என்ற அசிங்கம் மறைக்கப்படுகிறது.

65. தங்கத்தின் பின்னால் ஒருவன் ஓடக்கூடாது, தங்கம் இவனைத் துரத்த வேண்டும். பணத்தைச் சேர்த்து, காத்துக் கொண்டிருக்கக் கூடாது; பணம் இவனுக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படிப் பட்ட மனிதன் மகிழ்ச்சி நிறைந்தவன்.

66. பொறித்த கோழி, பறந்து வந்து வாய்க்குள் விழ வேண்டும் என்று மனிதன் நினைப்பதால்தான், மனிதனை பேராசையும் கவலையும் வாட்டுகிறது.

67. கடவுளிடமிருந்து வருகிற நிறைவுகளை உலகத்தால் தாங்க முடிவதில்லை. கடவுளின் மிகச் சிறந்த பரிசான கிறிஸ்துவை மனிதரால் (உலகத்தால்) தாங்க முடியவில்லையே.

68. ஆன்மீகம் நம்மிடம் இருக்கிறது. ஆன்மீக ஆளுகை உரிமை மனிதனுக்கு இல்லை! (இது தெய்வத்திற்கே உரியது) □

மார்டீன்லுத்தர்

---

1. வாத்துகளுக்கு இடையில், ‘குவாக்...குவாக்’ என்று சத்தம் போடுகிறஅன்னப்பறவை ஆக நான் இருக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

2. ஒரு விபசாரியின் மேல், கல் எறியும் மூதல் மனிதனாக நான் இருக்க விரும்பவில்லை! இருக்க முடியாது!

3. எந்தச் சொத்தும் எனக்கு இல்லை. இனி சொத்து சம்பாதிக்க வேண்டும் என்று ஆசையும் இல்லை.

4. எனக்கு மரணம் தான் கிடைக்கும் என்று சொன்னால், நான் மரணம் அடைய மறுக்கிறதில்லை! ஏன் தெரியுமா? பூமியும் அதன் நிறைவும் (மரணம் உட்பட) இறைவனுக்கே உரியது.

5. ஒன்றுமில்லாமையிலிருந்து துவங்கி, மற்றவர்களின் எழுத்துக்களாலும், போதனைகளாலும் வளர்ந்தவன் நான்.

6. நான் உண்மையைப் பேசுகிறேன். உண்மையின் உஷ்ணத்தை எவராலும் தாங்க முடியவில்லை!

7. நான் துவக்கத்தில், தனியாக நின்றேன்! எனக்குத் துணை (கடவுளைத் தவிர) யாருமே இல்லை.

8. சத்தியத்தில் கொண்டிருக்கிற அன்பினாலும், ஆர்வத்தாலும், 95 வாதங்களை நான் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தேன்.

9. எனது சம்மதம் பெறாமலே, எனது எழுத்துக்கள் அச்சிடப்படுகின்றன...கடவுளின் பெயரால் இப்படிச் செய்யப்படுவதால், நல்லது! அப்படியே ஆகட்டும்!

10. நான் எழுதிய 95 எதிர் நியாயங்களால், உலகமே பற்றி எரிகிறது என்கிறார்கள்!

11. தனிமனிதரின் விருப்பத்தை—பொருத்தனையை, மக்களின் பொது வாழ்வில் திணிப்பதை நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

12. எனக்குத் தெரிந்த இருக்கும் திறமையில் இதை (வேதாகமத்தை ஜெர்மன் மொழியில்) மொழி பெயர்த்திருக்கிறேன். இதைத்தான் நீங்கள் வாசிக்க வேண்டுமென்று யாரையும் நான் கட்டாயப்படுத்தவில்லை.

13. தனி ஒருவரின் வேதாகமப் படிப்பிற்கு, எனது புத்தகங்கள் தடையாகி விடவேண்டாம் என்று எல்லாருக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன்.

14 தற்புகழ்ச்சியாக, என்னைப் பற்றி எதையும் சொல்ல...என்னைப் பொறுத்தவரை, நான் ஒரு விசுவாசக் களஞ்சியம் இல்லை.

15. பலவித சோதனைகளால் தாக்கப்பட்டுள்ள நான், விசுவாச ஊற்று என்னிடம் மிகக் குறைவாகவே ஊறுகிறது என்று நான் அறிவேன்.

16. நாம் எல்லாரும் பாடுகிற ஒரு பாடல், நான் எழுதியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதை நான் எழுதவில்லை! இன்னொருவரின் எழுத்தில் நான் கைவைக்க விரும்பவில்லை.

17. அச்சடிக்கிறவர்கள், தங்கள் கவலையீனத்தால்' கெடுக்காவிட்டால் ; (நான் மொழி ஆக்கம் செய்த) ஜெர்மன் மொழி பைபிள், இலத்தின் மொழி பைபிளை விடச் சிறந்தது.

18. நான் செய்த வேலையைக் குறை சொல்லவரும் ஆயிரக்கணக்கானவர்களை என்னால் சமாளிக்க முடியும். ஆனால், நான் சாதித்ததில் கால் பகுதியைக் கூட, இன்னொருவரால் சாதிக்க முடியாது.

19. என்னை ஒரு ஞானி என்று சொல்கிறேன், ஒத்துக் கொள்கிறேன். ஆனாலும் எனது தாய் மொழி யாகிய ஜெர்மன் மொழியைச் சரியாகப் பயன் படுத்த எனக்குத் தெரியவில்லை.

20. ஒவ்வொருவருக்கும் சுயமாகச் சிந்திக்க உரிமை உண்டு! என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் யாரையும் நிர்பந் திப்பதில்லை.

21. ஜெர்மன் மொழியில் 'குட்'- நல்ல என்ற சொல்லி லிருந்து உருவாகி வந்ததே 'காட்' என்ற கடவுளைக் குறிக்கிற சொல்! மற்ற மொழிகளில் கடவுள் என்பதற்குப் பயன்படுத்தும் சொல்களை விட இது சிறந்தது என்று நான் நினைக்கிறேன்.

22. 'இவன் ஏழை... சாமானிய ஜெர்மன் மக்களுக்காக, துண்டுப் பிரதி எழுதி ஜீவிக்கிறான்' என்கிறார்கள் சிலர் என்னைப்பற்றி! இதைக் கேட்டு உணர்ச்சி வசப்படப் போவதில்லை நான்.

23. ஒரு மனிதனின் வாழ்வு, என்னால் சீரடைந்து விட்டது என்று, எனக்குத் தெரிந்தால் போதும்! கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டு, என் எழுத்துக் களை எறிந்து விடுவேன்.

24. நான் எத்தனையோ பிரசங்கங்க்ள்செய்திருக்கிறேன்! எத்தனையோ புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். எல்லாம் அன்பையும் விசுவாசத்தையும் அடிப்படை யாகக் கொண்டவை தான்.

25. நான் இங்கே எனது வாத்தியத்தை (எழுதுவதை) நிறுத்தி கருவியை வைக்கிறேன். என்னைவிட எதிர்ப் பாட்டுப்பாட ஒரு கெட்டிக்காரர் வரும் வரை... என் வாசிப்பு நிறுத்தி வைக்கப்படும்.

26. சாதாரண படிக்காத மனிதருக்காக நான் சுவி சேஷம் பிரசங்கிக்க வெட்கப் படுவதில்லை.

27. கடவுள், எனக்குக் கொடுத்திருக்கிற சபையில்... இலவசமாகப் பணி செய்கிறேன். இதற்காக நான், சபைக்குக் கடன் பட்டிருக்கிறேன்.

28. நீங்கள் ஆதாரமாகக் கொண்டிருக்கிற எல்லா புத்தகங்களையும் நான் படித்திருக்கிறேன். உங்கள் கலை எனக்கு அத்துபடி!

29. தனிப்பட்ட முறையில் என்னைப் போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும்... என்னை எனது எதிரிகள் கசப்படிக்க முடியாது. கடவுள் எனக்கு மகிழ்ச்சியின் ஆவியைக் கொடுத்திருக்கிறார்.

30. வீணான அவதூறுகளை எழுதி, மகிமையான பொய்களைக் கலந்து, அடுக்கி; என்னைத் தாக்கி எழுதுகிறார்கள். எனினும் அவர்கள் வெற்றி பெறவில்லை.

31. என்னை எதிர்க்கிறவர்கள் விநோதமான போர் ஆயுதங்களைக் கையாளுகிறார்கள். தலைக்கவசம் காலில் இருக்கிறது. வாள், தலையில் நிற்கிறது. மார்புக்கவசம், முதுகில்... !

32. என்னை, எனது எழுத்துக்களை விமரிசிக்கிறவர்கள்... 'அ, ஆ' என்று இரண்டு ஷரத்துக்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்களுக்கு அகர வரிசை தெரியும் எனத் தெரிகிறது... ஆனால் 'ஆ' வுக்கு மேல் இன்னும் படிக்கவில்லை போலும்.

33. வேத வசனங்களை இங்கேயும் அங்கேயும் பொறுக்கி... பொறுத்தி (பொருந்துகிறதோ இல்லையோ) காட்டிச் சாதிக்கிறதானால்... என்னாலும் இது முடியும். திராட்சை ரசத்தை விட 'பீர்' நல்லது என்று நானும் வேத வசனம் காட்டி நிரூபிப்பேன்.

34. என்னை, எனது பணியை, எழுத்துகளை... கலைக்க விரும்புகிறவர்களை ; பழிவாங்கிட நான் எப்பவும் நினைத்ததில்லை.

35. ஒருவர், தனக்கு இருக்கிற அதிகாரத்தைக் கொண்டு, தன்னை ஒரு விக்ரகம் ஆக்கிக் கொள்ளட்

டும், எனக்குக் கவலையே இல்லை ! நான் இதை வணங்கப் போவதில்லை.

36. 'மேய்த்தல்' என்னும் அதிகாரத்தால், இவர்கள் என்னை இடித்தால்; அன்பு எனும் அதிகாரத்தால், நானும் இவர்களை அதிகம் இடிப்பேன்.

37. சிலர் தங்களுக்கு, பெரிய அதிகாரம் இருப்பதாக (சபையில்) கூறுகிறார்கள். இருக்கட்டும்! ஆனால், இயேசு அமைத்திருக்கிற எதையும் மாற்றுவதற்கு இவர்களுக்கு மயிர் அளவு கூடஅதிகாரம் இல்லை என்று சொல்லுவேன்.

38, நீ என்ன கடவுளா? நீ விடுகிற 'காற்றெல்லாம்' சுவிசேஷந்தான் என்று நான் ஒத்துக்கொள்ள ?

39. நான் சரியாக விளக்கிக்காட்டிப் பிரசங்கிக்கிற, கிறிஸ்துவை தூயாவியானவரை... பொய்யர்கள் ஆக்குகிறவர்களுக்கு நான் இரக்கம் காட்டவே மாட்டேன்.

40. ஒரு ஆப்பிள் மரத்திற்கு, 'நல்ல பழங்களைத்தர-முட்களைத் தரக்கூடாது' என்பதற்கு விதிமுறைகள் சட்டதிட்டங்கள் வகுத்து புத்தகம் எழுதுகிறவனை முழு முட்டாள் என்பேன்.

41. ஒரே ஒரு மொழியை மட்டும் பற்றிக்கொண்டு, பிற மொழிகளைத் தூற்றுவோரோடு நான் ஒத்துப் போவதில்லை... இளைஞர்கள் பல மொழிகளில் அறிவு பெறுவது அவசியம் என்று நான் வலியுறுத்து கிறேன்.

42. ஒரு கூட்டத்தையோ, சபையையோ, நான் துவங்க முயலவில்லை. அப்படி ஒரு விருப்பமும் எனக்கு இல்லை !

43. எனது பணியில், இளைஞர்களைப் பயிற்றுவித்து பக்குவப் படுத்தவும், அனைவரையும் விசுவாச வாழ்க்கைக்குள் கொண்டு வரவும் பாடுபடுவேன்.

44. குருவானவரின் அழைப்பு- குருப்பட்டம் பற்றி எழுதக் கேட்கிறார்கள். இதைச் செய்ய எனக்குத் தகுதி இல்லை ! எனக்குத் தெரிந்ததை உங்களோடு பங்கிட்டுக் கொள்கிறேன்.

45. மடத்து வாழ்க்கையில், மிக அதிகமான சட்ட திட்டங்களால்... இயேசுவின் பெயரைக் கேட்கும் போதெல்லாம், இயேசுவின் சிலுவையைப் பார்க்கும் போதெல்லாம்...நான் பயந்து நடுங்கினேன்.

46. நான் எனது தினத் தேவைகளுக்காக அதிகம் கவலைப்படவில்லை! இப்பொழுது நான் திருமணம் ஆனவன். குடும்பப் பொறுப்பு எனக்கு இருக்கிறது. குடும்பத் தேவைகளை நான் உதாசீனம் செய்ய முடியாது.

47 'விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்' என்ற வசனத்தைப் புரிந்து கொண்டபொழுது, நான் புதிய பிறப்பெடுத்தவனானேன்! விரியத் திறந்து கிடந்த கதவுகளுக்குள் நுழைந்து மோட்சத்துக்குள் போனது போலிருந்தது எனக்கு.

48. அரிஸ்டாட்டில் திருச்சபையை எள்ளி நகையாடு கிறார் ! இதை அறிந்த எனக்கு எரிச்சல் வருகிறது. இவருடைய முக மூடியைக் கிழித்து எரிய விரும்பு கிறேன். எனக்கு நேரம் இல்லையே.

49. கட வுளின் சித்தப்படியே எனக்கு எதுவும் ஆகட்டும். வித்தன் பர்க் நகரிலும், பகைவர்களுக்கிடையேயும் இயேசுதான் அரசாட்சி செய்கிறார்.

50. கிறிஸ்து வாழட்டும்! மார்டீனும், மற்ற எல்லா பாவிகளும் சாகட்டும்!

51. மிகப்படித்தவரோ சாமானியரோ ... நாம் எல்லோருமே ஒருவரைப் பற்றி ஒருவர் துண்டுப் பிரதிகள் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

52. நான் மிக வேகமாக எழுதுபவன். எனக்கு நல்ல நினைவு ஆற்றலும் இருக்கிறது!

53. கடவுளின் சுவிசேஷத்தில் குற்றங்கண்டு பிடித்துக் கொண்டு, குறை சொல்லிக் கொண்டு யார் வந்தாலும்... அது தேவ தூதனாகக் கூட இருந்தாலும் நான் விட மாட்டேன்.

54. நீ சொல்வது சரிதானா? மற்றவர்களின் நிலைப் பாடு தவறு என்று உனக்கு உறுதியாகத் தெரியுமா? உனது தவறான கருத்துக்களால் ஏராளமான மக்களை நித்திய அழிவின் பாதையில் நடத்திவிட மாட்டாயே...என்றெல்லாம் என்மனம் என்னைத் தட்டிக் கொண்டே இருக்கிறது.

விசுவாசம்

1. கடவுளின் வாக்குறுதி — கண்டிப்பு— எச்சரிப்பு எங்கே இருக்கிறதோ, அங்கேதான் உற்சாக விசு வாசம் காணப்படுகிறது.

2. சட்டமும்,கிரியையும் (நல்ல செயல்) பெருகும்போது விசுவாசம் குறைகிறது! இந்த நிலையினால், (மனிதன்) திருமுழுக்கில் பெற்றுக்கொண்ட சுயாதீனம் சிறைப்பட்டுவிடுகிறது.

3. புண்ணியச் செயல் கவர்ச்சியினாலும், மனிதச் சட்டங்களாலும் ஏமாற வேண்டாம். இவைகள் நமது விசுவாசத்தை வீழ்த்திவிடும்.

4. தெய்வீகத் தத்துவத்தை, மனித அறிவு சரியாகப் புரிந்து கொள்ளும்.

5. விசுவாசத்தினால் பிறந்து, தொடர்வது கிரியை! எத்தகைய புண்ணியமான செயல்களைச் செய்தாலும், விசுவாசத்தினால் மட்டும்தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

6. 'விசுவாசப் புரிந்து கொள்தலுக்கு' நமது சொந்த அறிவும் திறமையை விடவும். ஆற்றலுள்ள தேவ வசனமே உதவி செய்கிறது.

7. தனித்தனியாக ஒவ்வொருவரும் விசுவாசிப்பது அவசியம். ஒருவருக்காக மற்றொருவர் விசுவாசிக்க முடியாதே!

8. குறைத்து மதிப்பிட வேண்டாம் விசுவாசத்தை! எல்லாவற்றையும் விட, மிகவும் கடினமானதும், மிகச் சிறந்ததும் விசுவாசந்தான்.

9. தெய்வீக வாக்குறுதிகளை முழுமையாக நம்புகிற விசுவாசத்தைத் தொடர்ந்து; மனித இதயத்தில் தன்னில்தானே ஒரு இனிய கிளர்ச்சி—அசைவு தோன்றுகிறது. இதைத் தொடர்ந்து, பரந்த மனமும் (ஆவியிலே விரியும்) வளமான செழிப்புப் வருகிறது,

10. விசுவாசத்தைத் தவிர, வேறு எதுவும் நல்லவனை உருவாக்குவதில்லை! அவிசுவாசத்தைத் தவிர வேறு எதுவும் கெட்டவனை உருவாக்காது.

11. உறுதியான விசுவாசத்தில், கடவுளின் அபரிமிதமான கிருபையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டவர்களாக, ஜாக்கிரதையாக, பக்தியோடு வாழக்கடவோம்.

12. விசுவாசத்தினால்; இயேசுவின் வெற்றி, நமது வெற்றி ஆகிவிடுகிறது. இதே விசுவாசத்தினால், நாம் வெற்றி வீரர்கள் ஆகி விடுகிறோம்.

13. தேவையான அளவுக்கு எல்லா நன்மைகளையும் மனிதனுக்கு, விசுவாசம் கொடுக்கிறது.

14. கடவுள் உண்மை உள்ளவர்! நற்செயல்கள் இல்லாமலே இதை, இருதய விசுவாசத்தில் அறிக்கையிட்டு மகிமைப்படுத்த முடியுமே!

15. கிரியைகளினால் கீழ்ப்படிதல் கிடைப்பதில்லை! விசுவாசத்தினால் அருளப்படுவதுதான் கீழ்ப்படிதல் என்று அறிந்து, உணருவோம்.

16. விசுவாசம் இருப்பவனிடம், எல்லாம் இருக்கிறது! விசுவாசம் இல்லாதவனுக்கு எதுமே இல்லை.

17. உள்ளத்தில் கடவுளுக்கு மதிப்பு கொடுத்து... பின்பு உதடுகளால் கடவுளை அறிக்கையிடுவதில் விசுவாசம் உண்டாகிறது, வெளிப்படுகிறது:

18. உறுதிமொழி என்று ஒன்று இல்லையென்றால், விசுவாசிக்க- நம்பிட ஒன்றுமே இருப்பதில்லை விசுவாசிக்க வில்லையென்றால், உறுதி மொழியால் பயன் இல்லை.

19. விசுவாசம்—அவிசுவாசம் ஆகியவற்றின் எடுத்துக் காட்டுகள், குறிப்புகள், பலாபலன்கள் ஆதியாக

மத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆகவே, இதுவும் ஏறக்குறைய ஒரு சுவிசேஷமே !

20. நல்லவர்கள் (துன்புற்றாலும்) உற்சாகப்படுத்த-சந்தோஷப்படுத்த ; விசுவாசத்திலும், பொறுமையிலும், எதிர்கால நம்பிக்கையிலும் இவர்களை உறுதிப்படுத்துவது தேவை.

21. எங்கே நற்செயலும், அன்பும் வெடித்துச் சிதறவில்லையோ, அங்கே சரியான விசுவாசம் இல்லை.

22. இயேசுக் கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசத்தினால், நாம் நீதிமான்கள் ஆக்கப் படுகிறோம்.

23. விசுவாச இறை இயலும், விசுவாசத்தின் எடுத்துக் காட்டுகளும் ; அருகருகே, அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படுகிறது.

24. இயேசுக் கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசத்துடன், எந்த நியாயப் பிரமாணமும், நற்செயலும் கலப்படமாக அவசியமே இல்லை.

25. பழைய ஏற்பாட்டிலும் (புதிய ஏற்பாடு போலவே) தேவ வாக்குத்தத்தங்கள், இவற்றை விசுவாசித்தவர்கள், இவற்றை விசுவாசியாதவர்கள் ஆகியோரின் வரலாறும் எழுதப் பட்டிருக்கிறது.

26. எந்த மனிதனும் தனக்குத்தானே (கடவுளில் வைக்கிற) விசுவாசத்தை கொடுக்க முடியாது ! இது போலவே, எந்த மனிதனும், தானாகவே தனது அவிசுவாசத்தை அகற்றவும் முடியாது.

27. எல்லாவகை நற்செயல்களும், அனைத்து வகைக் துன்பங்களும், விசுவாசத்தை வளரச் செய்து, மனிதரை விசுவாசத்தில் நிலைவரப் படுத்தும்.

28. செயல் வெளியே தெரியாமல் இருக்காது! நம்பிக்கை- விசுவாசம் வெளியே தெரியாமலும் இருக்கலாம்!

29. நமது உள்ளம், கடவுளைத் தழுவிக்கொண்டு, மனதாலும்- செயலாலும் அவரைச் சார்ந்திருப்பதே விசுவாசம்.

30. ஒரு பெட்டியில் பூட்டி வைத்திருப்பது- கைப்பிடிக்குள் அடக்கிக் கொள்வது- ஒரு பையில் கட்டி வைத்திருப்பது போன்றதல்ல கடவுளைச் சார்ந்திருக்கிற விசுவாசம்.

31. இன்றைக்கு இருக்கிற நிலையில்... உண்மையான அன்பு இல்லை, கீழ்ப்படிதல் இல்லை, விசுவாசம் இல்லை, நல்ல அரசாட்சி இல்லை... வேண்டுமென்றே தவறான வழியில் செல்லுகிற, திருத்தவே முடியாத மனிதரே இருக்கிறார்கள்.

32. சாவோ வாழ்வோ, இரண்டுமே விசுவாசிக்கு ஆசீர்வதிக்கப் பட்டதுதான்! இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசமாயிருப்போரின் மேன்மை இது!

33. எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை அற்றுப்போனவர்கள் கூட; ஏதோ ஒரு நம்பிக்கையில், நம்பிக்கை வைக்கிறார்கள்.

34. விசுவாசம் கடவுளுக்குத் தொண்டு செய்கிறது! நற்கிரியை மனிதனுக்குத் தொண்டு செய்கிறது. கடவுளின் பார்வையில், ஒருவனைத் தூய்மை ஆக்குவது விசுவாசம் மட்டும் தான்.

35. அன்பு இல்லாவிட்டால், விசுவாசம் வெறுமையானது.

36. இயேசு உயிர்த்தெழுந்ததால், சாவு விழுங்கப் பட்டது. இதனை விசுவாசிக்கிறவர்களுக்கு, இயேசு வின் வெற்றி சொந்தம் ஆகிறதால்,விசுவாசியாலும் சாவு விழுங்கப்படுகிறது,

37. இருதயத்தில் வாசமாயிருக்கிற விசுவாசமே, எல்லா நீதிக்கும் ஆதாரமும் தலையுமாக இருக்கிறது.

88. விசுவாசம் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்குக் கொடுக்கிறது. ஆகவே, கடவுளிடம், விசுவாசமாக இருப்பவனுக்கு (தனது நீதியைக் கொடுத்து) நீதி மான் ஆக்குகிறது.

39. கடவுளின் வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிறவன்; வாக்குத்தத்தங்களில் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதங் களில் பங்கு பெறுகிறான் என்பதைவிட; கடவுளின் ஆசீர்வாதங்களில் மூழ்கி, ஊறி, மிதக்கிறான் எனலாம்.

40. மனிதனின் எந்த நல்ல செயலினாலும் கடவுளின் வார்த்தை செழிப்படைகிறதில்லை! விசுவாசத்தி னால் மட்டுமே தேவ வசனம் செழிக்கிறது.

41. கடவுள் நம்மிடம் எதைச் செய்தாலும், ஒரு வெளிப் படையான செயலின் (சடங்கின்) மூலம் செய்கிறார் இந்த கடவுளின் செயலில் கவனம் செலுத்தி, அதை விசுவாசத்தின் வழியே பற்றிக் கொள்ள வேண்டும்.

42. விசுவாசம் அல்லாத எதுவும். இரட்சிப்புக்கு ஏற்ற தைக் கொடுக்கிறதில்லை, எதையும் பெற்றுக் கொள்ளுகிறதுமில்லை.

43 விசுவாசம் இல்லாமலிருக்குமானால், ஆத்துமாவும் சரீரமும்... அதாவது மனிதனின் முழுவாழ்வும் பொல்லாப்பில் விழுந்து அழியும்.

44. ஒரு சிறிய துரும்பை எடுத்துப் போடுவதும் நல்ல செயல்தான்... என்று ஒருவன் விசுவாசித்தால் அதுவும் நற்செயல்தான்! எது நற்கிரியை, எது நற்கிரியை இல்லை என்று அவன் அவனுக்குத்தான் தெரியும்.

45. எந்த நல்ல செயலும்... சிறியதாகவோ-பெரிய தாகவோ இருந்தாலும்... விசுவாசத்தில் செய்யப் பட்டால்... எல்லாம் ஒன்றுதான். அளவு வேறு பாடுகள், விசுவாசத்தில் காணாமற் போகின்றன.

46. சந்தேகம் இருந்தால்தான்... எது நல்லது எது பெரியது என்று தேடச் சொல்லும்! விசுவாசமும் அன்பும் இருந்தால் இந்த வகையான சந்தேகத் திற்கே இடம் இல்லை!

47. விசுவாச சுயதீனம் என்பது, பாவம் செய்யக் கொடுக்கப்படவில்லை... இந்தச் சுயதீனம், மறை வாகப் பாவம் செய்ய ஒரு போர்வையும் இல்லை.

48. விசுவாசம் வேலை செய்யப்போகிறது! வேலைக்குப் போன விசுவாசம் திரும்புகிறது. விசுவாசம் உயிருள்ளது, போகிறது வருகிறது (நற்கிரியை செய்வது).

ஜெபம்

---

1. ஆண்டவரே, எல்லாவற்றையும் படைத்தவரே! எல்லாவற்றையும் நன்மை உள்ளதாகவும், தூய்மை உள்ளதாகவும், ஆசீர்வாதம்உள்ளதாகவும்உயிர்ப்பு உள்ளதாகவும் ஆக்கி, எங்களுக்குத் தந்தருளும்.

2. எங்கள் காலத்திற்கு ஏற்ற சமாதானத்தைத்தாரும். பாவத்திலிருந்து விடுபடவும், நெருக்கங்களிலிருந்து தப்பிடவும், உமது கிருபை எங்களுக்கு உதவி செய்யட்டும்.

3. இங்கே கூடிவந்திருக்கிறவர்களின் விசுவாசத்தையும் உத்தம ஒப்புவித்தலையும் கடவுளே நீர் ஒருவரே அறிவீர்!

4. உமது சமாதானத்தினால், எங்கள் நாட்களை பூரணம் ஆக்கும். கடவுளே எங்களை அழிவிற்கு விலக்கிக் காத்தருளும்.

5. கடவுளே 'தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்' எண்ணிக் எண்ணிக்கையில் எங்களையும் சேர்த்துக்கொள்ளும்

6 'எனது சமாதானத்தை உங்களுக்கு வைத்திருக் கிறேன்' என்று சொன்னவரே! எனது பாவத்தைப் பார்க்காமல், திருச்சபையின் விசுவாசத்தைப் பார்த்து, திருச்சபைகளுக்குச் சமாதானத்தை அருளும்.

7. கடந்தகால நிகழ்கால, எதிர்கால தீமைகளிலிருந்து எங்களை இரட்சியும் என்று, வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

8. கர்த்தாவே, உம்மிடம் அடைக்கலம் தேடிவந்திருக் கிறோம். எங்கள் தகுதிகளை எடை போட்டுவிட வேண்டாம் கடவுளே...!

9. கர்த்தாவே நாங்கள் பாவிகள்தான்! என்றாலும் உமது அடிமைகள்!

10. ஆண்டவரே! உமது கிருபையின் பெருக்கத்தால், எங்களுக்கு உமது அப்போஸ்தலரோடு கூட பங்கு கொடுப்பீர் என்று நம்பி ஜெபிக்கிறோம்.

11. தெய்வமே, எங்கள் ஆண்டவரும் உமது நேச குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவினால் நாங்கள் மன்னிக்கப்பட்டவர்கள் என்ற கண்ணோட்டத்தில் எங்கள் ஜெபங்களுக்குச் செவி சாயத்தருளும்.

13. ஆபேலின் ஆராதனையைப்போல உம்மைத் திருப்தி படுத்தவும், முற்பிதாவாகிய ஆபிரகாமின் ஆராதனை போல எங்கள் ஆராதனை குற்றமற்றதாக அமைந்திடவும், எங்களைக் கிருபையுடன் கண்ணோக்கக் கெஞ்சுகிறோம்.

13. கர்த்தாவே, உமது கணக்குப் புத்தகத்தில், எங்கள் கணக்கையும் கிருபையுடன் சேர்த்துக் கொள்ளும்.

14. ஆண்டவரே, நீர் எனது கூரையின் கீழே வரத் தகுதியற்றவன். ஒரேவார்த்தை மட்டும் சொல்லும்! என் ஆத்துமா திருப்தி அடையும்.

15. மனச் சாட்சி என்று நான் குறிப்பிடுவது ‘சுத்தமான மனச் சாட்சியைத் தான். ஜெபப் பாரம்பரியங்களால் பழுதுபட்ட மனச் சாட்சியைப் பற்றி நான் பேசவில்லை.’

16. நண்பர்கள், என்னிடமிருந்து மிக உயர்வான காரியங்களை எதிர் பார்க்கிறார்கள். சாத்தான் எனது எதிரிகளைக கொண்டு அந்த மேலான காரியங்களை கெடுக்க சதி செய்கிறான்.

17. பிதாவாகிய கடவுளின் சித்தத்திற்கு ஏற்ப, எனது பாவங்களை மன்னித்தருளும் உமது கட்டளைகளை எப்பொழுதும் பற்றிப் பிடிக்கவும், அவைகளிலிருந்து கணமேனும் விலகிடாமல் இருக்கவும் எனக்கு உமது அருள் தாரும்.

18. உம்முடைய ஊழியனை, அறிவு வெளிச்சத்தினால் பிரகாப்சிபியும்- சுத்தப்படுத்தி, பரிசுத்தமாக்கும்!

19. ஊழியக்காரர் 'ஜெபிப்போம்' என்று சொல்லும் போது, நீங்கள் ஒவ்வொருவரும், அவர் செய்கின்ற ஜெபத்தில் இணைந்து கொள்ள உங்களை அழைக்கிறார்.

20. ஆறுதல் தேவைப்படுவோருக்கு அழியாத ஆறுதலே உம்மை நோக்கிக் கதறி அழுவோருக்கு விடுதலையே உம்மிடம் வேண்டிக் கொள்வோருக்கு நிம்மதி தருகிறவரே! விசுவாசிகளின் ஜீவனே, இறந்தவர்களின் உயிர்த்தெழுதலே...!

21. கர்த்தராகிய கடவுளே, பரம தகப்பனே! தூய்மையான விருப்பத்தை, நல்ல ஆலோசனையை சரியான செயல்களை எங்களுக்கு அருள்கிறவரே!

22. ஆற்றல் மிக்க வெகுதிமதிகளைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிற ஒரு பேரரசனிடம்... ஒரு சிரட்டையில் பழைய சோறு கேட்கிற மூடர்களைப் போல நாம் இருக்கக்கூடாது... இப்படி நாம் ஜெபிக்கக் கூடாது.

23. 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று ஜெபிக்கிற ஒவ்வொரு முறையும்; நித்தியமான, விலைமதிக்க முடியாத செல்வத்திற்காக கடவுளின் உடைமையாக இருக்கிற எல்லாவற்றிற்காவும், நாம் வேண்டிக் கொள்ளுகிறோம்.

24. நான் ஜெபம் செய்யாவிட்டால் என்ன, வேறு யாராவது அதைற் செல்வார்கள் என்று நினைக்காதீர்!

25. திரும்பத் திரும்ப கூறப்படுகிற ஜெபங்கள் (மந்திரங்கள்) உளறலும்-உரத்த கத்தலுமாகவே இருக்கிறது இவைகள் உண்மையில் ஜெபங்கள் அல்ல.

26. 'கர்த்தருடைய ஜெபத்தை' சொல்லுகிறவனின் தகுதியினால்... எந்த வகை பயனும் விளையப் போவதில்லை! இந்த ஜெபத்தை இயேசுவே கட்டளையிட்டிருப்பதாய் ஜெபிக்கிறவன் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிகிறான்.

27. உலகத்தின் செல்வம் அனைத்தையும் ஈடாகக் கொடுத்தாலும், ஜெபித்தலை விட்டுவிட முடியாது!

28. தேவ சக்தியுள்ள சிலருடைய ஜெபங்கள்தான் நமது பக்கத்தில்-குறுக்கே இரும்புச் சுவர் போல எழுந்து நின்று, நம்மைக் காத்துக் கொள்கிறது.

29. நமது மனம், கடவுளுடன் நல்லுறவில் இல்லா திருக்கும் போதும், நமக்கு திட நம்பிக்கை இல்லா திருக்கும் போதும், நமது மனம் ஜெபிக்காது.

30. ஒவ்வொரு (வினாடியும்) மணி நேரமும் 'சோதனைக்கு உட்படப் படப் பண்ணாதிரும்' என்று ஜெபிக்க வேண்டும். இல்லையென்றால், சிறிய சோதனையைக் கூட நம்மால் சமாளிக்க முடியாது.

31. 'நமது ஜெபம் கேட்கப்படுவது உறுதி! கேட்பது கிடைக்கும்!' என்ற நிச்சயம் 'ஆமேன்' என்ற சொல்லில் அடங்கி இருக்கிறது.

32. கடவுளை மகிமைப்படுத்தி, ஜெபித்து வாழத் துவங்கினால் ; இந்த வாழ்விலேயே மோட்சத்தைக் காண முடியும்... மோட்சத்தில் பரிசுத்தவான்கள் இதைத்தானே செய்கிறார்கள்.

33. நீ ஜெபிப்பதற்கு முன்பே, உனது ஜெபத் தேவைகள் பரலோகத்தில் குறிக்கப்பட்டுவிட்டன!

34. நீ ஜெபித்தது கிடைக்கும்... அல்லது, நீ கேட்டது உனக்குத் தீமை விளைவிக்கும் (என்று கடவுள் அறிந்திருப்பதால்) என்பதால், உனக்குக் கிடைக்காது. இரண்டையும் எதிர் பார்த்திரு!

35. விசுவாசம் இல்லாத ஜெபம், செத்தது!

36. ஜெபிக்கவேண்டியது நமது உரிமை! கிடைக்க வேண்டிய அளவு, காலம், இடம் ஆகியவற்றைக் குறிப்பிட அவசியமில்லை... இவற்றைக் கடவுளின் சித்தத்திற்கு ஒப்புவித்து விடு.

37. நீ கேட்டது உனக்குக் கிடைக்கும். அல்லது, நீ ஜெபித்ததை விடவும் நல்லதும் உனக்குக் கிடைக்கும்!

38. '(நம்ம) ஜெபம் எங்கே கேட்கப்படப் போகுது' என்று நினைப்பவர்கள், அவநம்பிக்கை என்ற பாவத்தில் வீழ்கிறார்கள்!

39. இடைவிடாமல் ஜெபம் பண்ண நேரமில்லாத கிறிஸ்தவர் எவருமே இல்லை! மனம் இருந்தால்... நேரம், இடம் எல்லாமே இருக்கும்.

40 ஜெபிக்கிற இடம், ஜெபிக்கிற ஊர் பிராதனம் இல்லை! கூடி ஜெபிக்கிற ஜெப மனமும், விசுவாச ஒருமைப்பாடும் தான் பிரதானம்.

41. ஜெபத்தால்... கடவுளுக்கு ஓர் எல்லை வகுக்கிறவர்கள்... கடவுளைச் சோதிக்கிறார்கள்.

=2. கர்த்தருடைய ஜெபத்தில்... 'உம்முடைய உம்முடைய' என்ற பகுதியையும் 'எங்களுக்கு, எங்கள், எங்களுடைய' என்ற பகுதிகளையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

43. கடைசி நாளில்... எத்தனை தடவை ஜெபித்தாய், உபவாசித்தாய். புண்ணிய பயணம் செய்தாய் என்று இயேசு கேட்கப் போவதில்லை! 'இந்த சிறியருக்கு என்ன நன்மை செய்தாய்' என்பதே இயேசுவின் கேள்வி!

44. இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஜெபிப்பதற்கு விடை கொடுப்பதாக இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார்· அப்படியானால், இன்னும் பலர் சேர்ந்து கேட்டால்' கிடைக்காமல் இருக்குமா ?

45. கிறிஸ்துவுக்கு முன்பு நாம் ஏறெடுக்கிற ஜெபம், தோத்திரம், நன்றி... கிறிஸ்துவின் மூலமே நடக்கிறது ! ஆம்; நம்மோடு, நமக்காக, கிறிஸ்துவே கடவுளுக்கு முன்பாக (ஜெபித்து) நிற்கிறார் !

46. பெற்றோருக்காகவும், அரசாங்கத்துக்காகவும் நாம் ஜெபிப்பது அவசியம் இதனாலும் கடவுள் மகிமைப் படுத்தப்படுகிறார். இந்த ஜெபம் நல்ல காரியங்கள் நடைபெற பயன்படுகிறது.

47. நாம் பாவிகளாக இருந்த பொழுதிலும்... நமது இழிநிலையைப் புரிந்து கொண்டு, தாழ்மையுடன் கிருபைக்காகப் புலம்ப நம்மை கடவுள் அழைக் கிறார் அழைக்கிற கடவுள்... திருப்பி அனுப்பி விடமாட்டார்.

48. எனது தகுதியைப் பார்த்தால், எனது ஜெபம் ஒன்றுக்கும் உதவாது... ஆனால், ஜெபிக்கச் சொன்னது இயேசு தானே... ஆகவே எனது ஜெபம் பயனுள்ளதுதான்!

49. நமது தகுதியைப் பார்க்காமல்; நமது ஜெபங்கள் எல்லாம், கடவுளுக்குக் கீழ்ப்படி தலைக் காண்பிப்பதாக அமையட்டும்!

50. கடவுளுக்குக் கொடுக்கிறதற்காக (நற்செயலாக நினைத்து) ஜெபிக்காதீர். கடவுளிடமிருந்து பெற்றுக் கொள்ளுகிறதற்காக ஜெபியுங்கள்.

51. உண்மையான ஜெபம் இருக்கும் இடத்தில், அக்கறை இருக்கும். ஜெபம், வரவேண்டியபடி, தானாக புறப்பட்டு வரும்.

52. உனது ஜெபங்களை கடவுள் விரும்புகிறார் உனது தேவைகள் அவருக்குத் தெரியவில்லை என்பதி னாலல்ல... உனது மனப் பையை விரியத் திறக்கவே கடவுள் இப்படி எதிர்பார்க்கிறார்.

53. பயனற்ற அலறுதலையும், முறையற்ற முனகல் களையும் நான் வெறுக்கிறேன். ஆனாலும், இதற் குள்ளும் வெளிவரும் ஜெபத்தை நான் குறை கூறுவதில்லை.

54. விசுவாசத்திற்காகவும், சுவிசேஷத்திற்காகவும், தூய ஆவியானவருக்காகவும் ஜெபிப்பதுடன், கடவுளின் சித்தம் செய்யப்பட வேண்டுமெனவும் ஜெபிப்பது தேவை,

55. உம்முடைய சித்தம் செய்யப் படட்டும் என்ற ஜெபத்தை ஆயுதமாக வைத்திருக்கிற கிறிஸ் தவர்கள், பிறருக்கும் பாதுகாப்பாக இருக் கிறார்கள்.

56. ‘அன்றன்றுள்ள உணவை இன்று...’ என்று ஜெபிக்கும் போது; தினத் தேவைகளை அனுபவிக்க

இடைஞ்சலாக இருப்பவை அகன்று விடவும் ஜெபிக்கிறோம்.

57. அதிகாரிகளுக்காகவும், அரசாங்கத்துக்காகவும் ஜெபிப்பது அவசியம். உணவையும், பிற வாழ்க்கை வசதிகளையும் இவர்கள் வழியாகவே கடவுள் நமக்குத் தருகிறார்.

58. பதவியில் இருப்பவர்களுக்காகவும் நாம் பிரார்த் தனை செய்வோம், இல்லையென்றால்...நம்மிடம் ஒரு பைசா கூடமிஞ்சாது.

59. நாம் கடவுளை நோக்கி ஏறெடுக்கிற வேண்டுதல்கள் பிசாசை அடக்கி வைத்திருக்கப் பயன்படா விட்டால்... வயலில் ஒரு பொட்டு வைக்கோலாவது வீட்டில் ஒரு காசாவது மிச்சம் இருக்காது.

60. நாம் எதையெல்லாம் கடவுளிடம் கேட்கிறோமோ, அவற்றையெல்லாம்; தடை செய்கிறவன் சாத்தான் தான்.

61. விசுவாசம் இல்லாவிட்டால், வேண்டுதல் உதவப் போவதில்லை! இவர்கள் எத்தனை ஆராதனை களில் பங்கெடுத்தாலும் சரிதான்.

மார்டீன் பற்றி மற்றவர்கள்

(மார்டீன் லூத்தரின் குணம், எதிர்ப்பாளர்களிடம் இருந்தவன் முறை, நண்பர்களிடம் காணப்பட்ட அன்பு அத்தனையையும் இந்தப் பொன்மொழிக் குவியல் விளக்குகிறது)

1 உலகத்தில் நான் எதிலாவது பிரியம் வைத்திருக் கிறேன் என்றால்; அது, மார்டீன் லூத்தரின்

எழுத்துக்களில் தான். இதற்கும் மேலாக நான் மார்டினை நேசிக்கிறேன்.

PHILIP MELANCHTHON

2. ஆழ்ந்த கறுப்பு நிறக் கண்கள், கறுத்த புருவம்... கண்கள் நட்சத்திரம் போல மின்னும். லுத்தரின் பார்வையை எவராலும் தாங்க முடியாது!

KESSLER

3. ஒரு முறை லுத்தர் பேசக்கேட்ட எந்த மனிதனும், திரும்பத் திரும்ப அவர் பேச்சைக் கேட்கவே விரும்புவான். மனங்களை தூண்டில் போட்டு இழுக்கிற சக்தி, அவரது பேச்சுக்கு இருக்கிறது.

ALBERT BURER

4. கடவுளின் ஆவி லுத்தரில் இருக்கிறது! பரிசுத்த ஆவியானவர் லுத்தர் மூலம் செயல்படுகிறார். சரியான நேரத்தில் தான், லுத்தரை கடவுள் வித்தன்பர்க் நகருக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

JEROME SCHURFF

5. கருத்துப் பஞ்சம் இல்லை ! புதிய கருத்துக்களும், சரியான வார்த்தைகளும் இவனிடம் ஏராளம் குவிந்து கிடக்கின்றன.

MOSELLANUS

6. மார்டீன் சாகாவரம் பெற்றவராக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சத்திய வேதத்திலிருந்தும், சபைப் பிதாக்களின் எழுத்துக்களிலிருந்தும்; அடிப்படையான, முழுமையான, சரியான உண்மைகளை உறுதியாக எடுத்து அடுக்குகிறார்.

HEINRICH STROMER

7. லுத்தர் நிமிர்ந்த மனிதர்! முன்புறமாக அல்ல, பின்புறமாக நிமிர்ந்து நடப்பவர். இவருடைய தலை—முகம் வானத்தைப் பார்த்தே இருக்கும்,

KESSLER

8. லுத்தரின் குரல் இனிமையானது! எல்லா மனிதர்களையும் விட, லுத்தர் இனிமையாகப் பேசுகிறவர் என்று நான் நினைக்கிறேன்.

ALBERT BURER

9. இந்த அறிஞர் (அறிவர்) எல்லாரையும் குழப்புகிறார்! சீக்கிரத்தில் இவர், கிறிஸ்தவ சபையில் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வருவார். இவருடைய கொள்கைகளுக்கெல்லாம் ஆதாரம், தீர்க்க தரிசனங்களும், அப்போஸ்தலரின் எழுத்துக்களுந்தான்.

MELLER STADT

10. வல்லமையுள்ள வேத வியாக்கினி லுத்தர்.

FELIX ULSCENIUS

11. புகன்கன் என்பவர் ஒரு இலக்கண அறிஞர். நான் ஒரு மொழியியல் திறமையாளன். ஜோனாஸ் ஒரு திறமை மிக்க பிரசங்கி. இவை எல்லாம் ஓட்டு மொத்தமாகச் சேர்ந்த இறையியல் அறிஞர் லுத்தர்! இவருக்கு ஒப்பு — உவமை யாருமே இல்லை.

MELANCHTHON

12. நமது தாய் மொழியாம் ஜெர்மன் மொழிக்கு, கடவுள் லுத்தர் மூலம் சரவிளக்கு ஏற்றயிருக்கிறார்! உலகம் இருக்கிற வரைக்கும்; லுத்தரைப் போல, ஜெர்மன் மொழியைச் சிறப்பாகப் பேசியவரும், எழுதியவரும் எவரும் இருக்கவே முடியாது.

ERASMUS ALBER

13. லூத்தருக்கு முன்பாக, ஜெர்மன் மொழி மரியாதை கொடுத்து நிற்கிறது! இவரைப்போல, தனி ஒரு மனிதன், தங்கள் மொழியை வளர்க்க உதவியவரை உலகம் காண முடியாது!

POET KLOPSTOCK

14. மெலாங்தன், எல்லா விஷயத்திலுமே லூத்தரின் பக்கந்தான். லூத்தர் சொல்வதைக் கேட்பவர், லூத்தரைப் போற்றிப் புகழுபவர் மெலாங்தன். இவர் லூத்தரின் விசிறி.

FELIX ULSCENIUS.

15. ஜீவிக்கிற மனிதர்களில் ; வேதாகமத்தை. ஒழுங்காக —சரியாகப் புரிந்து கொண்ட ஒரே மனிதன் லூத்தர் தான்.

THOMAS BLAKRER.

16. அந்திக் கிறிஸ்துவை அடக்க ; சுவிசேஷத்தை உலகத்திற்கு வெளிப்படுத்த, கடவுள் திட்ட மிட்டார். தனக்குப் பிரியமான ஒரு மனிதனைத் தெரிந்தெடுத்து, கடவுள் இந்தப் பொறுப்பை அவனிடம் ஒப்புவித்தார். அப்போஸ்தவர் காலத்தி லிருந்த அத்தனை வரங்களும் இவனிடம் இருந்தன.

ALBER.

17. ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கு ; அறிவர் லூத்தர், கடவுளின் கிருபையால், சுவிசேஷத்தின் உண்மை வழியைச் சுட்டிக் காட்டுகிறார். இது வரைக்கும் நாங்கள் இறுகப்பிடித்துக்கொண்டிருந்த தவறுகளையும் எங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

JEROME SCHURFF.

18. மார்டீன் வேதாகமத்தைக் கரைத்துக் குடித்ததாகத் தெரிகிறது. அனேகமாக எல்லா வசனங்களையும் மனப்பாடமாகக் கூறுகிறார். இவருக்கு; கிரேக்கம்—எபிரேயம் தெரிந்திருப்பதால், லத்தீன் மொழி பெயர்ப்பை, சரியாக எடைபோடுகிறார்.

MOSELLANUS.

19. சங்கைக்கு உரிய, தந்தை, மார்டீன் லூத்தர்; திருச்சபையின் தவறான கோட்பாடுகளைத் திருத்தி அமைக்கவும், பவுலடியாரின் சுவிசேஷ இறையியலை நிலைப்படுத்தவும், கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட தானியேல் என்று பலர் நினைக்கிறார்கள்.

WOLFGANG CAPITO.

20. லூத்தர் பழமையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தவர். நுகத்தடியை முறித்தவர்! நிமிர்ந்த நன்நடை, நேர் கொண்ட பார்வை... இங்கே ஒரு பரிசுத்தவானை அல்ல, ஒரு மாவீரனையே காணலாம்.

KRUERGER.

21. நீண்ட கசப்பான அனுபவங்களுக்குப் பின்பு, ஒரு நொடிப் பொழுதில் தோன்றுகிற புதிய கண்டு பிடிப்பு. பெரிய அறிஞர்களுக்கு வரும். இதே அனுபவம்தான் லூத்தருக்கும் வந்தது எனலாம்.

HEINRICH BOEHMER.

22. இடியும் மின்னலும் தாக்கிய இளமை அனுபவம், லூத்தரை...ஏற்கனவே அவர் மனதில் புதைந்து கிடந்த உண்மைகளை உணர்ந்து கொள்ள உதவியது.

HEINRICH STROHL.

23. லூத்தர் ஒரு புதிய பவுலடியார்! இவரும், இயேசுவால் மனந்திருப்பப்பட்டவர்தான்.

DUNGENHEIM.

24. லூத்தரின் கருத்துகள், அடிபட்ட மனதிலிருந்து குதித்து எழுந்தவை! உணர்ச்சிப் பூர்வமான, எளிமையான, கைமாறுகருதாத கருத்துகள் இவை.

STROHL.

25. தியானத்தில், எல்லாவற்றையும் சரியாகப் புரிந்து கொண்டார் லூத்தர். புரிந்து கொண்ட உண்மைகளின் நிறை குறைகளை திரும்பத்திரும்ப சோதித்து அறிந்தார். தனது கருத்துகளை, ஜெபத்தில் நினைத்திருந்தார் லூத்தர்.

MELANCHTHON.

26. லூத்தர், கிறிஸ்துவின் வார்த்தைகளில் உறுதியாக நிலைத்து நிற்கிறார். எந்த தத்துவ வாதமும், ஞானவாதமும் இதை எதிர்த்து வெற்றி கொள்ள முடியவே முடியாது.

MELLER STADT

27. வித்தன்பர்க் மடாலயத்தில் ஒரு சிறிய அறை... இருபது பேர் நிற்கும் அளவுக்கு அமைந்த அறை. அறையின் கிழக்குப் பக்கத்தில், பழைய மரத் துண்டுகளால் செய்யப்பட்ட... இரண்டு அடி உயரத்தில் செய்யப்பட்டிருந்த சிறிய பிரசங்க மேடை! இதில் தான் மார்டினின் முதல் பிரசங்கம் நடைபெற்றது. அதுவும் ஒரு சுவிசேஷப் பிரசங்கமே!

MYCONIUS

★

லூத்தர் பொன்மொழிகள்



ஜே. வின்சென்ட்